Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU



தொடர்பு: 0771064385 70/6, K.K.S. Road,
(C/1615) 0776943479 JAFFNA

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 30 சனிக்கிழமை (14.07.2012) பக்கங்கள் 20 ஓசை – 287


புலிகள் துரோகிகள் (06)


சகுனி (10)



தேசபிதா இல்லையாம் (17)


புதிர்ப்போட்டி (12)


குருத்துவப் பொன் விழா (18)

# சிறுபோக நெற்செய்கைக்கு ஆபத்து பாதிப்பைத் தடுக்க முயற்சி

## இரணைமடு வற்றியதால் கிளம்பியது நெருக்கடி



(கிளிநொச்சி)

கடும் வறட்சியால் இரணைமடுக்குளத்தின் நீர் வற்றி வருவதன் காரணமாக அக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கைக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கையின் ஒரு அம்சமாக நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அடாத்தாக மேலதிகமாக விதைப்பில் ஈடுபட்டவர்களது காணிகள் அளவீடு செய்யப்பட்டு அவ்வாறானவர்களது பெயர்கள் பார்வைக்கு வைப்பதுடன் அவர்களிடமிருந்து தண்டப் பணம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன், பயிரழிவு ஏற்படும் சந்தர்ப்பங்களில் பயிர்க்காப்புறுதி மூலம் இழப்பீட்டைப் பெறுவதற்கு விவசாயத்தினைக் களத்துடன் இணைந்து நடவடிக்கை எடுப்பது குறித்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி விடயம் குறித்து ஆராயும் விசேட கூட்டம் ஒன்று நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தலைமையில் ஆய்வுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் தலைமையுரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்,

இன்று நாம் கடும் வரட்சியை எதிர் கொண்டுள்ளோம் இது விவசாயச் செய்கையாளர்களை மட்டுமன்றி அனைத்து மக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## அத்தியாவசிய பொருட்களின் விலைகள் சரிவு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படுகின்ற உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், கருவாடு, சீனி மற்றும் ரின் மீன் ஆகியவற்றுக்கான இறக்குமதி வரி நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயுவின் விலைக் குறைப்பு, லிற்றோ மற்றும் லாவ் சமையல் எரிவாயு என்பவற்றுக்கான விலைகள் நேற்று நள்ளிரவு முதல் 150 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளதாகவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

## வறட்சியின் பிடியில் நாடு நிவாரணமளிக்க நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வறட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள மக்களின் நலன் கருதி பல்வேறு அவசர நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த அவசர நிவாரணங்களை வழங்கும் சகல வேலைத் திட்டங்களுக்கென அரசாங்கம் 3665 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக தகவல் ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அவசர நிவாரண நடவடிக்கைகள் மற்றும் துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சமர்பிக்கப்பட்ட ஆலோசனைகளுக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சர் தெரிவித்தார்.

பல மாவட்டங்களில் மக்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட விவசாய குடும்பம் ஒன்றிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுத்து மாதம் ஒன்றுக்கு 6000 ரூபா வருமானம் பெறும் வகையிலான நிவாரண வேலைத் திட்டத்தை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## வன்னி நோக்கி இராஜதந்திரிகள் படையெடுப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கான இலங்கையின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் இராஜதந்திர பிரதிநிதிகள் அடங்கிய குழு நேற்றைய தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தி செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டனர்.

நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சிக்கு வருகைதந்த இராஜதந்திரக் குழுவினர் கிளிநொச்சியில் பல்வேறு இடங்களையும் பார்வையிட்ட அவர்கள் முற்பகல் பதினொரு மணிக்கு கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு வருகைதந்து அவர்கள் யுத்தத்திற்கு பின்னரான மருத்துவமனையின் செயற்பாடுகள் குறித்தும் அறிந்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## தீர்வு முயற்சி தோல்வி பணிப்பகிஷ்கரிப்பு தொடரும்

### விரிவுரையாளர் சம்மேளனம் அறிவிப்பு

பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான குழுவிற்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கலந்துரையாடல் ஸ்திரமான தீர்வின்றி முடிவடைந்துள்ளது. இதற்கமைய தமது பணிப் பகிஷ்கரிப்பு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என பல்கலைக்கழக விரிவுரையாளர் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மலா ரஞ்ஜித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் விரிவுரையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி செயலாளரின் நகர்வு திருப்தியளிப்பதாக அவர் குறிப்பிடுகிறார். உடனடியாக தீர்வு காணப்பட வேண்டிய தமது கோரிக்கைகள் தொடர்பில் இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை என்பதுடன் அதுகுறித்து தொடர்ந்து கலந்துரையாட எண்ணியுள்ளதாகவும் விரிவுரையாளர் சம்மேளனத்தின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## பனை ஆராய்ச்சி நிலையம் மீண்டும் இயங்கும்

கைதடியில் மீள் புனரமைக்கப்பட்ட பனை ஆராய்ச்சி நிலையம் எதிர்வரும் 20ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இதனைத் திறந்து வைக்கவுள்ள

(19) ஆம் பக்கம் பார்க்க

## முல்லை கரைத்துறைப்பற்றில் புதிய வீடமைப்புத் திட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துரைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள 3 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதில் கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் தெற்கு ஆகிய 3 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியமர்ந்துள்ள மக்களில் 58 குடும்பங்களுக்கே நிரந்தர வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தாய்வான் செஞ்சிலுவைச் சங்க நிதியுதவியின் கீழ் முல்லைத்தீவு செஞ்சிலுவைச் சங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நிரந்தர வீட்டுத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (04)

## ஆஸி.நோக்கி ஆட்கடத்தல் நேற்று மட்டும் 41 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்வதற்கு முற்பட்ட 41 பேர் கடற்படையினால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுப் பகல் வேளையில் மீன்பிடி படகில் திருகோணமலை கடற்பரப்பின் ஊடாக செல்ல முற்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் வர்ணகுலசூரிய தெரிவிதது

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியுடன் இந்திய அமைச்சர் சந்திப்பு



(கொழும்பு)

மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய கிராமிய அபிவிருத்தி மற்றும் குடிநீர் வசதிகள் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம இலங்கைக் கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# ஊர்காவற்துறையில் கடும் வறட்சி

## குடிநீர் விநியோகிக்க நிதி ஒதுக்கீடு



(தீவகம்)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள பருத்தி அடைப்பு மற்றும் மெலிஞ்சி முனைப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) மேற்கொண்ட முயற்சியின் பயனாக மேற்படி பிரதேச மக்களுக்கு குழாய் மூலம் நன்நீர் வழங்குவதற்காகச் சுமார் 20 இலட்சம ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பிரதேசங்களில் ஏற்படும் நன்நீர் வறட்சியினால் அப்பிரதேச மக்கள் பெரிதும் சிரமப்படுவதுடன் அவர்களுக்கான குடிநீரினை வாகனம் மூலமாக அல்லது குழாய் ஊடாகவே வழங்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள மெலிஞ்சிமுனை மற்றும் பருத்தி அடைப்புப் பகுதியில் நன்நீர் நிலைகள் வறட்சியடைந்த நிலையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை வேலணைப் பிரதேசத்திலுள்ள பொதுக்கிணறுகளிலிருந்து பெறப்படும் குடிநீரை ஊர்காவற்துறைப் பிரதேசத்திற்கு சீரான முறையில் விநியோகம் செய்வதற்கான முன் ஆயத்தம், செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காகக் குறித்த பிரதேசத்திற்கு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்ரின் (உதயன்) நேரடி விஜயம் மேற்கொண்டார்.

கடந்த புதன்கிழமை சாட்டிப் பகுதியில் அமைந்துள்ள வேலணைப் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ள இரண்டு நன்னீர் கிணற்றிலிருந்தும், ஊர்காவற்துறை பிரதேசத்திற்கு குடிநீரினை விநியோகிப்பதற்காக குறித்த நன்னீர் கிணற்றினை துப்பரவு செய்து நீர்ப் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு ஊர்காவற்துறை பிரதேச சபைத் தவிசாளரும், ஈ.பி.டி.பி. யின் ஊர்காவற்துறைப் பிரதேச அமைப்பாளருமான ஜெயகாந்தனுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் பணிபபுரை விடுத்தார்.

இதன்போது ஊர்காவற்துறை பிரதேச செயலர் எழிலரசி, வேலணைப் பிரதேச சபைத் தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச அமைப்பாளருமான சிவராசா (போல்) ஆகியோர் உடனிருந்தனர்.

## துர்நாற்றம் வீசும் சிறுவர் விடுதி

யாழ். போதனா வைத்தியசாலை சிறுவர் சிகிச்சைப் பிரிவு விடுதிகளில் கழியல், குளியல் அறைகளில் இருந்து வீசும் துர்நாற்றம் விடுதிகளில் குழந்தைகளை வைத்திய சிகிச்சைக்காக வைத்துக்கொண்டிருக்கும் தாய்மாரின் நாசிகளையும் துளைப்பதாகப் புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலைமை 11 ஆம், 12 ஆம் சிறுவர் சிகிச்சைப் பிரிவின் கழியல், குளியல் அறைகளில் இருந்து சிகிச்சை விடுதிகளுக்குள்ளும் நாற்றம் நுழைவதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாகத் தொற்றுகள் ஏற்படக்கூடும் என்ற பீதியுடன் குழந்தைகளுக்கான வைத்தியத்தை இடைநிறுத்திக் கொண்டு தாய்மார்கள் செல்வதாகவும் அறியவருகிறது. கழியல், குழியல் அறைகளைத் துப்புரவு செய்யும சுகாதாரப் பிரிவு ஊழியர்களின் அசமந்தம் காரணமாகவே இந்நிலை தோன்றி வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (68)

## மடம் திறப்புவிழா

நவாலி வடக்கு தேற்றா மரத்தடி ஸ்ரீ ஞானவைரவர் கோவில் சித்திரைக் கஞ்சித்திருமடம் திறப்பு விழா இன்று நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகளால் திருமடம் திறந்து வைக்கப் படவுள்ளது.

திறப்புவிழா நிகழ்வில் வாழ்த்துரைகளை செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் வர்ணனைக் கலாநிதி மதுரகவி, காரை எம்.பி, அருளானந்தன் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் ஆகியோர் நிகழ்தவுள்ளனர்.

அத்துடன் கலாபூசணம் இராசையா ஸ்ரீதரன் அவர்களின் 'தேனமுத கானம்' பத்தி கானங்கள் இசை நிகழ்வு பக்க வாத்தியம் சகிதமாக நடைபெறவுள்ளது. (60)

## திருமஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணத்தில் உள்ள புகழ்பூத்த வைரவர் ஆலயங்களில் ஒன்றாகிய ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞானவைரவர் தேவஸ்தானதின் அலங்கார திருவிழா கடந்த 3 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி 15 நாட்களுக்குச் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. இவ் அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான எதிர்வரும் செவ்வாய்க் கிழமை 17 ஆம் திகதி திருமஞ்சத் திருவிழா இடம்பெறவுள்ளது. இறுதி நாள் திருவிழா நிறைவடைந்ததும் வைரவப் பெருமான் சாமுன்டீஸ்வரி சமேதராக தெரு வீதிவழியாக எழுந்தருளி அக்கிராம மக்களுக்கு அருள்பாலிக்க உள்ளார். இவ்வாலய அலங்கார உற்சவ நிறைவின் மறுநாளான புதன்கிழமை மகேஸ்வர பூசையும், பஞ்சமுக அர்ச்சனையும் இடம்பெறவுள்ளது. இவ் ஆலய அலங்கார உற்சவத்தை முன்னிட்டு தினந்தோறும் கந்தபுராண கதாப்பிரசங்கம் இடம்பெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (42)

## மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

ஒத்திவைக்கப்பட்ட முள்ளி வாய்க்கால் மேற்குப் பகுதியின் மீள்குடியேற்றம் இன்று வவுனியா செட்டிகுளம் பகுதியில் இருந்து முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த 21 குடும்பங்களின் 58 பேர் மீள்குயேற்றப்படவுள்ளதாக முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன தெரிவித்தார். (04)

## நெல்லியடியில் இன்று சொல்லாடு களம்

இன்றை தலைமுறையின் இலக்கிய ஆர்வத்தைத் தூண்டும் வகையில் உயர்தர கலைப் பிரிவு, பட்டதாரி மாணவர்களின் பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சொல்லாடு களம் இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு இடம் பெறும்.

## வெளிவருகின்றது 'அதிர்ச்சி'

'அதிர்ச்சி' பத்திரிகை வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உரிமைகள் பறிக்கப்பட்டு, திட்டமிட்ட புறக்கணிப்பு, மீள்குடியேற்றத்தில் மறைமுகத் தடை, தொழில் வாய்ப்புக்கள், காணி அபகரிப்பு, பொய்க் குற்றம் சுமத்தப்பட்டு அநியாயங்களைச் சுமந்து வாழும் முஸ்லிம்களது குரலாக வெளிவருகின்றது. (105)

## கணினி சஞ்சிகையும் மென்பொருளும் வெளியீடு

கணினி மென்பொருள் தொகுதி ஒன்றும், கணினிச் சஞ்சிகை ஒன்றும் இன்று வெளியிடப்படுகின்றது. எலைற் கொம்பியூட்டர் சிஸ்ரம் என்ற தனியார் நிறுவனத்தின் முயற்சியில் இன்று நண்பகல் 11.30 மணியளவில் இல.1044, காங்கேசன்துறை வீதியில் உள்ள அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்படுகின்றது. மென்பொருட்களைக் கொண்ட தொகுதி வி.ஐங்கரன் என்ற இளம் மென்பொருள் வல்லுனரால் வடிவமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மின்தடை பற்றிய அறிவித்தல்

ஏற்கனவே மின்தடை அறிவிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு மேலதிகமாக வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக் கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 8.30 மணிவரையும் யாழ். பிரதான வீதியில் நீதிமன்ற பிரதேசம் முதல் கச்சேரிப் பிரதேசம் வரையான இடங்களிலும், மேலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிவரை யாழ். குடாநாடு முழுவதும், 17.07.2012 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும், 17.07.2012 செவ்வாய்க்கிழமை, 19.07.2012 வியாழக்கிழமை மற்றும் 21.07.2012 சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சங்குவேலி, கட்டுடை, சுதுமலை ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.


## சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கொடிகாமம் மிருசுவில் ஏ-9 பாதையில் இருந்து 300 யார் ஒழுங்கையில் 75 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகொள்ள- 0772474740 (R/146)

### காணி தேவை

கொடிகாமத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் ஆறு ஏக்கர் காணி ரயில் பாதை ஓரமாகவும், 75 ஏக்கர் காணி ஏ-9 வீதியிலிருந்து 1 கிலோமீற்றர் உள்ளேயும் விலைக்கு வாங்குவதற்குத் தேவை. (R/148)

தொடர்புகளுக்கு :- 0772474740

## யாழ்ப்பாணம் மாநகர சபை வேலைக்கான கேள்வி அறிவித்தல் - 2012

கீழ் குறிப்பிட்ட வேலைகளுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் 2012 ஆம் ஆண்டிற்குப் பதிவு செய்துள்ள வலுவுள்ள (ICTAD) நிர்மாண பயிற்சி நிறுவனத்தின் பதிவுள்ள, வற்வரி செலுத்தும் மிகத்தகைமையுடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரங்கள் 16.07.2012 ஆம் திகதி முதல் 03.08.2012 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.
02. கேள்விப்பத்திரங்கள் 09.08.2012 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.
03. கேள்விகள் யாவும் 09.08.2012 ஆம் திகதி நண்பகல் 2.00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமூகமளிக்கலாம்.
04. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயருடன் வேலைக்கான கேள்வி என எழுதி "மாநகர ஆணையாளர்" யாழ்ப்பாணம். என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
05. மேலதிக விபரங்களை யாழ். மாநகர சபையின் வேலைப் பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக்குறைந்த பதிவுத்தரம் (ICTAD) | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்க முடியாத கேள்வி வைப்புப் பண (வற்வரி உட்பட) |
|---|---|---|---|---|
| 01 | பழைய பூங்கா வீதியில் வாய்க்கால் அமைத்தல் | C8 | 52000.00 | 5824.00 |
| 02 | அரியாலை சந்தைக்கு அருகில் வாய்க்கால் அமைத்தல் | C9 | 7500.00 | 840.00 |

குறிப்பு :- வேலைகள் யாவற்றையும் 30.11.2012 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

திருமதி யோ.பற்குணராசா,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

(C/1623)

# வன்னிப்பகுதி பாடசாலைகளுக்கான பேருந்துசேவை சீரற்றநிலையில்

## ஆசிரியர்கள் விசனம் தெரிவிப்பு

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்ட துணுககாய கல்வி வலயத்தின் ஒட்டுசுட்டான் கோட்டத்திற்கு உட்பட்ட வன்னிப் பகுதி பாடசாலைகளுக்கான பஸ்சேவை சீராக இல்லாமையால் யாழ்ப் பாணத்திலிருந்து இப் பகுதிக்கு சென்று வரும் ஆசிரியர்கள் பெரும் சிரமத்தினை எதிர் கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கான பஸ்சேவை யாழ். நகரிலிருந்து காலை 7.00 மணிக்கே ஆரம்பிக்கின்றது இவ் பஸ் சேவை கற்சிலைமடு அ.த.க.பாடசாலைக்கு காலை 11.15 மணிக்கும் முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை, இடதுகரை அ.த.க.பாடசாலை என்பவற்றை பகல் 11.30 மணிக்குமே சென்றடைகின்றது. A9 வீதி திருத்த வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதால் சில வேளையில் 12.00 மணிக்கும் இதை விட தாமதமாகவும் சென்று அடைகின்றது.

இப் பாடசாலைகளில் கற்பிற்கும் ஆசிரியர்கள் திங்கட்கிழமை சென்று வெள்ளிக்கிழமை திரும்பி. வரும் வழமையினையே கொண்டுள்ளார்கள். இதனால் திங்கட்கிழமைகளில் இவர்கள் அரைநாள் லீவு பெற வேண்டிய சூழ்நிலையும காணப் படுகின்றது. மேலும் இப் பாடசாலைகளில் கற்பிக்கும் 80% இற்கும் அதிகமான ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து செல்வதால் அன்றைய தினம் கற்பித்தல் செயற்பாடும் பாதிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வந்த பொழுது இப்பகுதிக்கான உத்தியோகத்தர் சேவை ஒன்றினை ஏற்பாடு செய்து ஒரு மாதகாலத்திற்கு இச் சேவை இடம் பெற்றது. எனினும் அச் சேவை இடை நிறுத்தப்பட்டது.

எனினும் இச் சேவை இடை நிறுத்தப்பட்டு 3 மாத காலம் ஆன பொழுதிலும் இச் சேவையினைத் தொடர்ந்து நடாத்துவதற்கான ஏற்பாடுகள் எதுவும் மேற் கொள்ளப்படவில்லை என ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து A9 வீதி வழியே சென்று மாங்குளம் வரை இவர்களால் பயணத்தினை மேற்கொள்ள முடிந்த பொழுதிலும் மாங்குளத்திலிருந்து கற்சிலைமடு, முத்தையன் கட்டுப் பகுதிகளுக்கு செல்வதற்கு பஸ் வசதி இல்லாமல் சன குடியிருப்புக்கள் அற்ற காட்டுப் பாதையை கொண்ட இப்பகுதியில் மணல், கல் ஏற்ற செல்லும் டிப்பர் வானத்தின் உதவியுடனேயே இவர்கள் தமது பயணத்தை தொடர்ந்து ஆட்டுசுட்டான் வரைசென்ற பின் ஆட்டோ வாகனத்தின் உதவியுடன் பாடசாலைகளினை அடைகின்றனர் இதற்கு தினமும் 300 முதல் 500 வரை செலவு செய்கின்றனர்.

எனவே தமது சம்பளத்தில் பெரும் தொகையினை தாம் பிரயாணத்திற்காக செலவிட வேண்டியுள்ளதாகவும் தாம் பிரயாணத்தில் மிகவும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் இவற்றுக்கு உடன் தீர்வினை பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களினை இவ் ஆசிரியர்கள் கோரியுள்ளனர் இவ் ஆசிரியர்களில் 40 இற்கும் மேற்பட்டவர்கள் பெண் ஆசிரியர்களாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (42)

## மாவைமுருகனை பாடிடுவோம் வாரீர்!



மாவை முருகனைப் பாட வாருங்கள் மாவைக்கு
மாவை மாவை மாவை என பாடிடுவோம்
மாவையம் பதிக்கு வாருங்கள் வந்து
மாவைக் குமரன் புகழ் பாடிடுங்கள்

திருமருவு மாவை கந்தன் தெப்பத் திருவிழா
ஏற்றதமிகு காங்கேயன் காசாக்கடலில் பெருவிழா
மன்று மருங்கூர் மாயையிலே பஞ்சரதபவனி
ஐந்தொழிலாம் சங்காரம்செய்யும்குமரனைப்பாடிடுவோம்
மாவை மாமயிலோன் மானம்பூ துர்க்கா புரமதனில்
ஞாலம் வலம்வரும் மாம்பழத்திருவிழா பழநி ஆண்டிக்கு
மாவையில் இன்று கார்த்திகைத் திருவிழா கண்டு
பாடிடுவோம் வாரீர் மாவைக்கு.

கந்தசாமி கனகராசா
-மாவை-

(மாவை கந்தனுக்கு இன்று கார்த்திகைத் திருவிழா)

## பூம்புகார் பகுதியில் பொலிஸ்நிலையம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியில் சமூக விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ் நிலையம் திறப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதற்கான மக்கள் விருப்பு அறியும் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

பொலிஸ்நிலையம் திறக்கப் படவேண்டுமென நல்லார் பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவரும் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான அ.இரவிந்திரதாசன் பிரதிசெயலருக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து இக் கூட்டம் கிராம அலுவலர் எஸ். விஜிதன் அவர்கள் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் R.D.S.தலைவர் செல்வம் பிரதேச சபை உறுப்பினர் வ.ஸ்ரீகணேஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நூற்றாண்டு மலரை பெற்றுக்கொள்ளவும்

(ஓமந்தை)

வவுனியா ஓமந்தை. மத்திய கல்லூரி தமது நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நூற்றாண்டு விழா மலர் ஒன்றினை வெளியிட்டுள்ளது. மேற்படி மலரினை வடமாகாண பாடசாலைகளுக்கு விநியோகிக்க ஓமந்தை மத்திய கல்லூரி அதிபர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

எனவே வ/ஓமந்தை மத்திய கல்லூரியால் வெளியிடப்பட்ட நூற்றாண்டு விழா மலரினை பெறவிரும்பும் பாடசாலைகள் தங்கள் பாடசாலை நூலகத்திற்கு வ/ஓமந்தை மத்திய கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு வடமாகாணக் கல்விச் செயலாளர் வடமாகாண பாடசாலை அதிபர்களினைக் கேட்டுக் கொண்டுள்ளார். (42)

## உங்களுக்குத் தெரியுமா? கோட்டமட்ட முடிவுகள்

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளிடையே நடைபெற்ற "உங்களுக்குத் தெரியுமா" வினடிவினா போட்டியிலிருந்து துணுக்காய் கல்வி வலயத்தினைச்சேர்ந்த ஏழு மாணவர்கள் மாகாண மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கோட்ட ரீதியாக வெற்றிபெற்ற மணவர்கள் வருமாறு,

துணுக்காய் கோட்டம்.

அ.சகுந்தலா(மு/மல்லாவி மத்திய கல்லூரி), உ.சபித்தா(மு/யோகபுரம் மகாவித்தியாலயம்), ஜெ.தர்மீகா(மு/மல்லாவி மத்திய கல்லூரி), ச.சுஜீவிதா(மு/மல்லாவி மத்திய கல்லூரி), மா.கிருபாலினி (மு/மல்லாவி மத்திய கல்லூரி),

ஒட்டுசுட்டான் கோட்டம்.

அ.கஜெந்தன்(மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை)

மாந்தை கிழக்கு

மு.துலக்சன்(மு/பாலிநகர் மத்திய கல்லூரி)

மேற்படி மாணவர்கள் மாகாணமட்ட போட்டிகளில் பங்குபற்ற தயாராகி வருகின்றனர். (42)

## திருவிழா

(யாழ்ப்பாணம்)

உதயபுரம் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

## சீரான மின்விநியோத்திற்கு மாணவர்கள் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதிக்கு சீரான மின்சாரத்தை வழங்குமாறு உயர் தரப் பரீட்சை மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் உயர்தரப் பரீட்சை ஆரம்பமாவதை அடுத்து மாணவர்கள் பரீட்சைக்கு தம்மை துரிதமாக தயார்படுத்த வேண்டிய நிலையில் இருப்பதால் சீரான மின்சாரத்தை வழங்க வேண்டும் என மாணவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சீரற்ற மின்சாரம் வழங்கப்படுவதால் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் மேலும் தெரிவிக்கின்றனர். (100)

## இணுவில் அறநெறிச்சமூகத்தின் பாரம்பரிய கலாசார விழா

(யாழ்ப்பாணம்)


இணுவில் அறநெறிச்சமூகம் நடாத்தும் பாரம்பரிய கலை கலாசார விழா நாளை ஞாயிற றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இணுவில் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ந.சச்சிதானந்தன், கலாநிதி ஆறு.திருமுருகன், கௌரவ விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் எம்.நந்தகோபாலன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கலைவாணி இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் அறநெறிப்பாலர் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் மேலும் உயர்கல்வி மாணவர்களின் பேச்சு என்பனவும் இடம்பெறவுள்ளது.

திருமுறைப்பாடல்கள் நூல் வெளியீட்டு நிகழ்வில் கலாநிதி ஆறு.திருமுருகன் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை வைத்திய கலாநிதி மூ.பஞ்சலிங்கம் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து இணுவில் பகுதியில் கடந்த வருட க.பொ.த (சாதாரணதரம்) பரீட்சையில் சித்தி பெற்ற செல்வி யதுஷா சண்முகநாதனுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படவுள்ளது. மேலும் சிறப்புக் கௌரவம் மற்றும் பாரம்பரிய கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.



இலங்கைக்கான வெளிநாட்டுத்தூதுவர்கள் நேற்று முன்தினம் நெடுந்தீவு பகுதிக்கு விஜயம் மேற்கொண்டனர். இவர்களை குறிகாட்டுவான் இறங்குதுறையில் ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி வேலணைப் பிரதேச அமைப்பாளரும், வேலணை பிரதேச சபை தவிசாளருமான சிவராசா (போல்), வேலணை பிரதேச சபை உறுப்பினர் மோகன், ஈ.பி.டி.பி புங்குடுதீவு அமைப்பாளர் நவம் மற்றும் அதிகாரிகள் மாலை அணிவித்து வரவேற்று வடதாரகை கப்பலின் ஊடாக நெடுந்தீவிற்கு வழியனுப்பி வைப்பதைக்காணலாம்.

## க.பொ.த. உயர்தர மாணவர்களிற்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் இந்துநாகரிகம், இந்துசமயம் கற்கும் மாணவர்களிற்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இக்கருத்தரங்கு, எதிர்வரும் 20ஆம் திகதி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் காலை 8.00 மணி முதல் நடைபெறவுள்ளது. இந்துநாகரிக பாடத்தை நீண்டகாலம் மாணவர்களிற்குக் கற்பித்து, நிறைந்த அனுபவத்தையுடைய உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி ஆசிரியர் கே.ஜோதீஸ்வரன் இக்கருத்தரங்கில் உரையாற்றவுள்ளார்.

பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர் களையும், இப்பாடங்களைக் கற்பிற்கும் ஆசிரியர்களையும் கருத்தரங்கில் பங்கு பற்றுவதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளு மாறு பாடசாலை அதிபர்களுக்கு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (06)

செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான். செய்யத் தெரியாதவன் போதிக்கிறான். - கர்னல் கீல்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, தொலைநகல் : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## ஊடகங்களுக்கான பொறுப்புணர்வு!

இன்றைய தினத்தில் உலக மாந்தர் அனைவரினதும் வாழ்வைப் பயமுறுத்திக் கொண்டிருப்பது எது என்று கேட்டால், அணுவாயுத உற்பத்தி, இன – மத – தேச நம்பிக்கைகளுக்காக ஒருவரையொருவர் கொன்றுவிடத் துடிக்கும் மனோபாவம், மாசடையும் சுற்றுச் சூழல், பூகோள வெப்பமாதல் என்று பல்வேறு பதில்களையும் சொல்வோம்.

ஆனால், இவற்றையும்விட இன்னொரு பயங்கரம்தான் மிகவும் பயப்பட வேண்டியதாக இருக்கிறது என்கிறார்கள் இன்றைய மானிடவியல் அறிஞர்கள். இத்தருணத்தில் நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருப்பது over communication என்பதுதான் என்கிறார்கள். அதாவது, உலகின் ஒரு புள்ளியில் இருந்து கொண்டு உலகின் மற்றெல்லாப் பகுதிகளிலும் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிற குணம்தான்.

நாங்கள் எல்லோருமே தொடர்புசாதனங்களின் வலையில் விரும்பிச் சென்று வீழ்பவர்களாக இருக்கிறோம். அவை இல்லாமல், எங்கு என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளாமல் ஒரு நாளைக் கூட கழிக்க முடியாத நிலைமை. ஆனால் இந்த தொடர்பூடகங்கள் நம்மை என்ன செய்கின்றன?

பொலிஸ், இராணுவம், சட்டம், சிறைச்சாலை போன்றவற்றை விட அதிகமான ஒடுக்குதலையும் கெடுதியையும் இந்தத் தொடர்பு சாதனங்களே மறைமுகமாகச் செய்கின்றன என்கிறார்கள் அறிஞர்கள். மதம், கல்வி, குடும்பம், தொடர்புச் சாதனங்கள் போன்ற மறைமுக ஒடுக்குதல் கருவிகளே மனிதகுலத்திற்குப் பெருந்தீங்கை விளைவிக்கவும் பயன்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

இவற்றில் மக்கள் தங்களைத் தாங்களே சீரழித்துக் கொள்ளும் வகையிலான கருத்துக்களை விழுங்க வைத்துக் கெடுதி செய்யும் சாத்தியங்களை அதிகம் கொண்டிருப்பவை தொடர்புச் சாதனங்களே.

குடும்பம், கல்வி, மதம் போன்றவற்றிலிருந்து தம்மை விலக்கித் துண்டித்துக் கொள்ள முடிகிறவர்களும் கூட தொடர்புச் சாதனங்களிடமிருந்து தம்மைத் துண்டித்துக்கொள்ள முடிவதில்லை. செய்திகளுக்கும், பொழுதுபோக்கு கேளிக்கைக்குமென்பதாக முன்வைக்கப்படுகிற இச்சாதனங்கள் மற்ற எவற்றையும் விட வலிமை வாய்ந்தனவாய் நம்மை ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

என்ன சாப்பிடுவது, எதை உடுத்துவது, எந்த சோப், பற்பசை, சருமப்பசைகளைப் பயன்படுத்துவது, வாங்க வேண்டிய மின்சாதனங்கள் என்று அவையே நமக்குச் சொல்லித் தருகின்றன. தினந்தோறும் கொலை, கடத்தல், கொள்ளை, வல்லுறவு என்று பல்வேறு விதமாகத் தகவல்கள் நமக்குள் சேகரமாகின்றன. நம் மனங்களை வன்முறைக் கிட்டங்கிகளாகவும், நுகர்வுப் பைத்தியமாகவும், ஆதிக்கப் பிரிவினரின் கருத்தியலுக்குத் தாளங்களாகவும் ஆக்கிவிடுகின்றன.

அமெரிக்காவின் ஈராக் மீதான யுத்தம், அவர்களது குண்டு வீச்சும் படைநகர்வும் தொடங்குவதற்கு முன்பே பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளிலும் தொடங்கப்பட்டதை சுட்டிக் காட்டுகிறார்கள். வியட்நாம் யுத்தத்தின் போது போருக்கெதிராக அமெரிக்காவில் மக்கள் திரண்டதைப் போல ஈராக் யுத்தத்தின் போது நடக்கவில்லை. முன்பு மக்களைத் திரட்டி வீதிக்கு இறக்கியதில் பத்திரிகைகளுக்குப் பெரும் பங்கிருந்ததைத் தெரிந்துகொண்டிருந்த அமெரிக்கா, இம்முறை ஊடகங்களில் கவனமெடுத்துக் கொண்டது.

ஈராக் யுத்தத்தை நடத்தி முடித்த அமெரிக்கத் தளபதிகளில் ஒருவர் சொன்னார்: “வியட்நாம் யுத்தத்திலிருந்து நாம் கற்றுக் கொண்ட பாடம் இதுதான். யுத்தத்தில் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பவை துப்பாக்கிகளும் வெடிகுண்டுகளும் மட்டுமில்லை, பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் கூடத்தான்...”

அரசியல்வாதிகளை விடவும், மதத் தலைவர்களை விடவும் அதிக பொறுப்புணர்வு இன்று ஊடகங்களைக் கையாள்பவர்களுக்கே தேவைப்படுகிறது.

– ஆசிரியர்

# ஆசனப்பகிர்வில் தொடரும் இழுபறி கூட்டமைப்பின் முடிவு அடுத்தவாரம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசனங்களைப் பகிர்வதில் உருவாகியிருக்கும் இழுபறி காரணமாக கிழக்கு மாகாண சபைக்கான வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நெருக்கடிகளை எதிர்கொண்டிருப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால், நாளைய தினத்திற்கு பின்னர்தான் இறுதிப்பட்டியல் தயாரிக்கப்படும் எனவும் இந்த வட்டாரங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனேயே அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள கட்சிகளிடையே முறுகல்நிலை உருவாகியது. தமிழரசுக் கட்சி அதிகளவு ஆசனங்களுக்கு உரிமை கோர ஏனைய கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன அதனை ஏற்க மறுத்ததையடுத்து இந்த இழுபறி நிலை ஆரம்பமாகியது.

இருந்த போதிலும் கடந்த திங்கட்கிழமை திருமலையிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இதற்கு இணக்கமான தீர்வு ஒன்று காணப்பட்டது. இதன்படி திருமலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்படும் 14 பேரில் 10 பேர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் எனவும் ஏனைய கட்சிகளுக்கு 4 இடங்கள் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சிக்கு 7 ஆசனங்களையும், ஏனைய கட்சிகளுக்கு 7 ஆசனங்களையும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்திலும் பேரம் பேசாமல் இணக்கமான தீர்வு எட்டப்பட்டது.

இணக்கமான முறையில் இந்தத் தீர்வு காணப்பட்ட பின்னணியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உருவாகவிருந்த பிளவு தவிர்க்கப்பட்டது என செய்திகள் வெளியாகியிருந்தன. இருந்தபோதிலும் இந்த இணக்கப் பாட்டுக்கு முரணாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமக்கு 9 ஆசனங்களும் ஏனைய கட்சிகளுக்கு 5 ஆசனங்களுமே தர முடியும் என தமிழரசுக் கட்சியினர் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டதையடுத்தே தற்போதைய நெருக்கடி உருவாகியிருக்கின்றது.

கடந்த இரு நாட்களாக தீவிரமடைந்துவரும் இந்த இழுபறி நிலையைத் தீர்த்து வைப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் நேற்றுக்காலை வரை வெற்றியளிக்கவில்லை. இரு தரப்பினரும் தமது நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக இருப்பதால் இழுபறி நிலை தொடர்கின்றது. இந்த நிலையில் நாளைய தினத்திற்குப் பின்னரே இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட்டு முடிவு அறிவிக்கப்படும் என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# மயக்க மருந்து தெளித்து துப்பாக்கி அபகரிப்பு

(கொழும்பு)

வரக்காபொலை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் வைத்திருந்த ரி-56 ரக துப்பாக்கியை கடந்த புதன்கிழமை இரவு 11.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பாதுகாப்பு கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் முகத்தில் இரசாயன பாதார்த்தமொன்றை விசிறிவிட்டு துப்பாக்கியை அபகரித்துள்ளனர்.

பொலிஸ் கான்ஸ்டபிளுடன் இருந்த ஊர்காவல் படை வீரர் அருகிலுள்ள கிணற்றுக்கு நீர் எடுக்கச்சென்ற போது இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது. வரக்காபொலை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் தர்மரத்ன என்பவரே இச்சம்பவத்திற்கு முகங்கொடுத்துள்ளார். இவர் சிகிச்சைக்காக கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கியை அபகரித்தவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மங்கெதர ஹுணுவல பகுதியில் கைவிடப்பட்டிருந்த போது பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. வரக்காபொலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னோடிக் கருத்தரங்குகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் கோட்டத்திலிருந்து இவ்வருடம் க.பொ.த(உயர்தரம்) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடி மீட்டல் கருத்தரங்குகளினை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய லண்டன் பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றனர்.

இக் கருத்தரங்குகள் இம்மாதம் 28ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் எனவும், கருத்தரங்குகளில் கையேடுகளும், மாதிரி வினாத்தாள்களும் இலவசமாக வழங்கப்படும் எனவும் இதில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மாணவர்கள் மட்டும் அன்றி ஒட்டுசுட்டான் கோட்டத்தில் உள்ள சகல உயர்தர வகுப்பு மாணவர்களும் கலந்து கொண்டு பயன்பெற முடியும் எனவும் இக் கருத்தரங்கின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (42)

# மாணவிமீது துஷ்பிரயோகம்; பொலிஸார் கைதானார்

(கொழும்பு)

14 வயதுடைய பாடசாலை மாணவியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் நாவலப்பிட்டி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கடமை நிமித்தம் வெளியில் சென்றவேளை குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளான குறித்த சிறுமியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கண்டிப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# போதைப்பொருள் விற்பனைதாரிகளுடன் தொடர்பைப் பேணிய சார்ஜன்ட் கைது

(கொழும்பு)

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவரின் தொலைபேசி மற்றும் சிம் அட்டையைப் பயன்படுத்தி, போதைப்பொருள் விற்பனையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் பன்னிப்பிட்டியவைச் சேர்ந்த போதைப்பொருள் விற்பனையாரான சந்தேக நபர் ஒருவரின் மனைவி முறைப்பாடொன்றை செய்திருந்தார்.

பொலிஸ் போதை ஒழிப்பு பணியகத்தினால் தனது கணவர் 25.10.2010 ஆம் திகதி கைது செய்யப்பட்டதாகவும் அப்பணியகத்தை சேர்ந்த அதிகாரிகளால் எடுத்துச் செல்லப்பட்ட இரு தொலைபேசிகளும் இரு சிம் அட்டைகளும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

முறைப்பாட்டாளரின் வீட்டிலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட தொலைபேசிகளை பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பயன்படுத்துவதை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகள் மூலம் கண்டறிந்தனர்.

கொழும்பிலுள்ள போதைப் பொருள் விற்பனையாளர்களுடன் மேற்படி சார்ஜன்ட் நெருங்கிய தொடர்புகொண்டிருப்பதும் பொலிஸ் முற்றுகையொன்று குறித்த தகவல் வழங்குவதற்காக போதைப் பொருள் விற்பனையாளரிடமிருந்து அவர் 15,000 ரூபா பணம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பொலிஸ் சார்ஜன்ட் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர் 50,000 ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.



- ஹேமந்த வர்ணகுலசூரிய



# இனஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான சவால்கள்...

பேரினவாதிகள், ஆரோக்கியமற்ற இனவாதிகள் ஏன் இவ்விரு குழுக்களினதும் கருத்துக்களில் பங்கேற்காத மிதவாதிகளால்கூட எப்போதும் எழுப்பப்படும் ஒரு விடையில்லாக் கேள்வி, சிங்களவர்களுடன் ஒப்பிடும் போது தமிழர்களுக்கு மறுக்கப்பட்டுள்ள உரிமைகள் எவை என்பதே? இதற்கு தயாராக ஒரு பதில் இல்லாததால் சில சமயங்களில் இப்படியான கருத்துக்களுக்கு முன்னால் நான் ஊமையாக நின்றிருக்கிறேன்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியின்போது, சிங்கள பரப்புரையாளர்கள் “எங்களிடம் ஒரு தமிழ் தலைமை நீதிபதி, காவல்துறை கண்காணிப்பாளர் நாயகம், மற்றும் ஒரு தமிழ் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் உள்ளனர், ஒரு ஈழம்வாதியை தவிர வேறு யாராவது நாங்கள் தமிழர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுகிறோம் என்று சொல்ல முடியுமா” எனக் கூறி வந்தார்கள்.

அந்தக் கேள்வி தொடர்ந்து வந்து கொண்டே உள்ளது. தமிழர்கள் சிங்களவர்களின் பிரச்சாரத்தை நம்புவதில்லை, சிங்களவர்களுக்கு தமிழர்களின் துயரத்தை கவனிப்பதற்கான காரணமோ அல்லது நேரமோ இருப்பதில்லை.

> **குண்டு வெடிப்பு என்னை அதிர்ச்சி அடைய வைத்ததுடன் திடீரென இன ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் பற்றிய எனது தத்துவம், அந்த இளம் சிறார்கள் எல்.ரீ.ரீ.ஈயினால் துண்டு துண்டாக வெடிக்க வைக்கப்பட்ட காட்சியினால், அடி வாங்கியதைப்போல தெரிந்தது. பல மாதங்களுக்கு நான் மௌனமாகவே இருந்தேன்.**

இந்தக்கேள்வியை நான் இந்தத் தொழிலில் காலடி வைத்தது முதல் எனது நண்பராக உள்ள ஒரு தமிழ் சட்டத்தரணியிடம் கேட்டபோது, அவர் கூறிய பதில், “ஒரு சிங்களவராகவோ அல்லது ஒரு தமிழராகவோ இருப்பதற்கு வேண்டிய முக்கிய வேறுபாட்டை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமாயின், நீங்கள் கட்டாயம் ஒரு தமிழராக பிறக்க வேண்டும். இல்லாவிட்டால் சிங்கள ஆட்சியின் கீழ் நாங்கள் அனுபவிக்கும் அந்த துன்பங்களையும், பாகுபாட்டையும் உங்களால் ஒருபோதும் உணர முடியாது.

13ஆவது திருத்தத்தை எடுத்துக் கொண்டால், எல்.ரீ.ரீ.ஈ, ஜேவிபி, மற்றும் டிஜேவி என்பன அதை எதிர்த்தபோதும், எல்.ரீ.ரீ.ஈ யின் பயங்கரவாதத்தை எதிர்க்கும் அநேக தமிழர்கள் இந்த 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழர்களின் பிரச்சினைகள் பெருமளவு தூரத்துக்கு தீர்ந்துவிடும் என எதிர்பார்த்தார்கள். ஜேஆர், இந்தியாவுக்கு தான் வழங்கிய வாக்குறுதியை சிங்கள பேரினவாதிகளின் விருப்பத்தின் பேரில், தான் சொன்னதுக்கு மாறாக போகமாட்டார் என்பதை ராஜீவ் காந்தி உறுதிப்படுத்துவார் என நாங்கள் நம்பினோம். மறுபக்கத்தில் இந்த 13ஆவது திருத்தத்தை இறுதியில் ஜேஆர், ஒரு செயற்படாத கடிதம் போல் மாற்றவேண்டும் என பிரபாகரன் எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டிருந்தார். அதில் பிரபாகரன்தான் வெற்றி பெற்றார், எல்லா மிதவாத தமிழர்களும் தோற்றுப் போனார்கள். 13ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்த எல்லாத் தமிழர்களும் ஈழப் பிரச்சினையை காட்டிக்கொடுத்தவர்களாக கருதப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்”.

நான் நீதிமன்றத்தில் இருந்தபோது ஒருசமயம் ஆண்களும் பெண்களுமாக சுமார் 15பேர் அங்கு ஆஜர்ப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் தோட்டப்பகுதியை சேர்ந்த தமிழர்கள், வெளிநாட்டு வேலை தேடி கொழும் புக்கு வந்தவர்கள். கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் படியாக அவர்கள் செய்த குற்றம் அவர்களில் சிலரிடம் அடையாள அட்டைகள் இல்லாமல் இருந்ததே. சில பெண்கள் சிறு குழந்தைகளையும் வைத்திருந்தார்கள். அவர்களில் யாருக்கும் சிங்களமோ ஆங்கிலமோ தெரியவில்லை. நீதிமன்ற மொழிபெயர்ப்பை செய்யும் முதலியாருக்கு தமிழ் தெரியவில்லை என்பது மற்றொரு வேடிக்கை. அவர்கள் பி.ப 3.00 மணியளவில் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்கள். ஒரு வழக்கறிஞரின் உதவியையும் அவர்களால் பெற முடியவில்லை. இந்த நாதியற்ற தோட்டப்பகுதியை சோந்த ஆண்களும் பெண்களும், குற்றவியல் சட்டத்தின் கீழ் எதுவித குற்றமும் புரியாமல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுவதை நான் திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். எனது உதவியாளர்களிடம் அவர்கள் சார்பாக ஆஜராகும்படி கேட்டுக் கொண்டேன்.

காவல்துறையினர் இரண்டு மனிதர்களையும் மற்றொருவரையும் அடையாள அட்டை இல்லாதவர்கள் என அடையாளம் காண்பித்தனர். அவர்கள் தமிழ் மொழியில் ஏதோ சொல்லுவதற்கு முயன்ற போதிலும் யாருக்கும் அது புரியவில்லை. ஆனால் மற்றவர்களிடம் தேசிய அடையாள அட்டைஇருந்தது, இருந்தாலும் அவர்கள் அனைவ்ரையும் காவலில் வைக்கவேண்டுமென்று காவல்துறையினர் கோரினார்கள். எனது உதவியாளர் அதை ஆட்சேபித்தபோது, அவர்கள் ஏதாவது குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளார்களா என்பதை அறிய அவர்களைப் பற்றிய விபரங்களை ஏனைய காவல் நிலையங்களுக்கு அனுப்பி இருப்பதாகவும் அங்கிருந்து தகவல்கள் வந்தால்தான் அவர்களை விடுவிக்க முடியும் என காவல்துறையினர் தெரிவித்தார்கள். இதுதான் பயங்கரவாத காலம்.

ஒவ்வொரு தமிழ் பெண்ணும் தற்கொலை குண்டுதாரியாகவே கருதப்பட்டார்கள். நீதவான் எனது உதவியாளரின் வேண்டுதலை புறக்கணித்து அவர்களை 14நாள் காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களுடைய சங்கடமான நிலைமையை எண்ணி சிலர்கதறி அழுதார்கள். அடுத்த தவணையை நான் குறித்துக் கொண்டு என்ன நடக்கிறது என்பதை அறிய அன்றைய தினம் நீதிமன்றத்துக்கு சென்றேன்.

அவர்களால் தங்களுக்கென வழக்கறிஞர்களை நியமிக்க கூடியதாக இருந்தது. நீதிமன்றம் தனது வழக்கமான நடைமுறைப்படி அவர்களை பிணையில் விடுவதற்கு ஒவ்வொருவருக்கும் இரண்டு ஆட்கள் உத்தரவாதம் தரவேண்டுமென்றும் மற்றும் அவர்களின் வதிவிடங்களை கிராமசேவகர் அத்தாட்சிப் படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியது. 14 நாட்களுக்குப் பின்னர் அவர்களை மேலும் சிறையிலடைக்க காவல்துறையினரால் எதுவித புதிய தடயங்களும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அடையாள அட்டை இல்லை என்று கருதப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் அன்று நீதிமன்றில் சொல்ல முயன்றது, தங்கள் அடையாள அட்டைகளை வேலை தரும் முகவரிடம் தங்கள் கடவுச்சீட்டுடன் கையளித்துள்ளோம் என்பதை தெரிவிப்பதற்காகவே. இதைத்தான் அவர்கள் விளக்க முயன்றார்கள். நீதவான் அதன்பின் அவர்களுக்கு பிணை நிற்கும் ஒவ்வொருவரிடமும் குற்றம் சாட்டப்பட்டவருக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு முறையினை பற்றி விசாரித்தார். கிராமசேவகரின் அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்த அவர்களில் ஒருவரிடம் நீதவான் அவர்களது கிராமத்தின் அருகே ஒரு நீர் வீழ்ச்சி உள்ளதா என வினவினார். அதற்கு அவர் தமிழில் எதையோ முணுமுணுத்தார், அது யாருக்கும் புரியவில்லை. எனவே அந்த பிணை நிற்பவரது வதிவிடத்தை பற்றி கிராமசேவகர் உறுதிப்படுத்தியிருப்பது பொய்யானதோ என நீதவான் சந்தேகப்படலானார். அதே போல நீதவானின் கண்காணிப்புக்கு ஒத்துவராத மற்றும் சிலரும் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டனர்.

வெகுதூரத்திலுள்ள வெலிமடயிலிருந்து வந்திருந்த அந்த ஆண்களும் பெண்களும் கதறி அழுதார்கள். அவர்களை கைது செய்து காவலில் அடைத்த அந்த காவல்துறை கண்காணிப்பாளர், உண்மையில் நீதிமன்றத்தை அவமதித்துள்ளார். நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக அவர் தண்டிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட வேண்டும். இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் முக்கிய காரணம் அந்த ஆண்களும் பெண்களும் என்ன சொல்ல முயன்றார்கள் என்பதை யாரும் புரிந்து கொள்ளவில்லை என்பதோடு தகுதிவாய்ந்த ஒரு மொழிபெயர்க்கும் முதலியாரும் இல்லாமல் போனதும்தான்.

அதன்பின் நீதிமன்றத்தில் தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் இல்லையா என்பதை கண்டறிய நான் சில விசாரணைகளை மேற்கொண்டேன். தமிழ் மொழி பெயர்ப்பாளர்களுக்கு பெரும் பஞ்சம் நிலவுவதாகவும், தமிழ் சாட்சி ஒருவர் இருந்தால் மட்டுமே நீதிச்சேவைகள் ஆணைக்குழு ஒரு தமிழ் மொழி பெயர்ப்பாளரை வழங்குகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தங்கள் வாழ்வுக்கு வளம்தேடி கொழும்புக்கு வந்த அந்த ஆதரவற்றவர்களுக்கு வழங்கப்பட்ட அந்த பயங்கரமான நீதியைக் கண்டு நான் அதிர்ந்து போனேன். சில நாட்களின் பின்கோட்டை ரயில் நிலையத்தில் ஒரு குண்டு வெடிப்பு இடம் பெற்றது. ஒரு தற்கொலை குண்டுதாரி தன்னைத் தானே வெடிக்க வைத்ததுடன் டி.எஸ் சேனநாயக்கா வித்தியாலயத்தின் கூடைப் பந்தாட்டக் குழுவினர் அனைவரையும் கொன்றொழித்தார். அந்த கணம் வரை வழக்கறிஞர்களின் அறையில் பிரதான விவாதத் தலைப்பாக இடம்பெற்றது, அந்த ஆதரவற்ற மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றிய கண்டனமே. எனது சமகாலத்தவர்களில் பலர் என்னுடன் வாதித்தது, முன்னோடியில்லாத சூழ்நிலைகளில் முன்னோடியில்லாத நடவடிக்கைகளே இடம்பெறும் என்று. இல்லாவிட்டால் கொழும்பு பயங்கரவாதிகளின் சொர்க்கமாக மாறியிருக்காது. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு காவல்துறையினரதும் மற்றும் நீதிமன்றத்தினதும் நடவடிக்கைகளை புரிந்துகொள்ள நான் முயற்சித்தேன்.

அநேகமான தோட்டத் தொழிலாளர்கள் பயங்கரவாதிகளின் வேண்டுகோளுக்கு வளைந்து கொடுக்கிறார்கள் என்றும் எனக்குச்சொல்லப்பட்டது.காவல்துறையினரின் செயல்கள் பகுத்தறிவுக்கு உட்பட்டவை என்று சொல்லப்பட்டதுடன் காவல்துறையினர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் பாதுகாக்கசாத்தியமான ஒவ்வொரு படியினையும் செய்ய வேண்டியுள்ளது என்றும் சொல்லப்பட்டது.

குண்டுவெடிப்பு என்னை அதிர்ச்சி அடையவைத்ததுடன் திடீரென இனஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் பற்றிய எனது தத்துவம், அந்த இளம்சிறார்கள் எல்.ரீ.ரீ.ஈயினால் துண்டு துண்டாக வெடிக்க வைக்கப்பட்ட காட்சியினால், அடி வாங்கியதைப் போல தெரிந்தது.பல மாதங்களுக்கு நான் மௌனமாகவே இருந்தேன். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது தான் அந்த இரகசியம் வெளியானது, தற்கொலை குண்டுதாரியை இங்கு ஏற்றிக் கொண்டு வந்தவர், ஒரு தமிழரல்ல, ஆனால் ஒரு சிங்களவர். அரசாங்க வர்த்தமானியில் பெயர் வெளியாகியது. அவர் காவல்துறை கடமை புரியும் ஒரு அதிகாரி.

# பாதுகாப்புச் செயலாளரை பணி நீக்கம் செய்ய வேண்டும்

## மங்கள எம்.பி. கோரிக்கை



(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளரை பணி நீக்கம் செய்ய வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

நாகரீகமான சமூகக் கட்டமைப்பிற்கு ஒவ்வாத காரியங்களை பாதுகாப்புச் செயலாளர் மேற்கொண்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கோத்தாபய ராஜபக்ஷ போன்ற வினைத்திறனற்ற அரச ஊழியர்களை தொடர்ந்தும் பதவியில் நீடிப்பது பயனற்றது என ஒரு மாத காலத்திற்கு முன்னர் தாம் எச்சரிக்கை விடுததிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் வினைத்திறனற்ற தன்மை மீண்டும் புலனாகியுள்ளது.

இணைய ஊடகங்கள் மூலம் சிங்கள காலாசார சீரழிவு ஏற்படுவதாக குற்றம் சுமத்தி வரும் தரப்பினர், பாதுகாப்புச் செயலாளர் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் விதம் பற்றி ஏன் கண்டு கொள்வதில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சண்டேலீடர் பத்திரிகை ஆசிரியர் பெட்ரிக்காஜேன்ஸை, அண்மையில் பாதுகாப்புச் செயலாளர் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளதாகவும், அநாகரீகமாக மொழிப் பிரயோகத்தின் ஊடாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் நிறுவன ஒழுக்க விதிகள் மற்றும் சட்டங்களை மீறி அரச ஊழியர் ஒருவர் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றார்.

நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலை சீர்குலைந்துள்ளமை தொடர்பில் ஆச்சரியப்படத் தேவையில்லை.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை தொடர்ந்தும் நீடித்து வருகிறது.

பாதுகாப்புச் செயலாளரை ஜனாதிபதி பதவி விலக்கவேண்டும் அல்லது பாதுகாப்புச் செயலாளரை பதவி விலகுமாறு மக்கள் கோரிக்கை விடுக்க வேண்டியது அவசியமானது என வலியுறுத்த நேரிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மக்களின் கவனத்தை திசை திருப்பவே தேர்தல்

## என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

மக்கள் அதிருப்தி அடைந்துள்ள நிலையில் அவர்களின் கவனத்தை வேறு திசையில் திருப்பும் நோக்கில் கட்டம் கட்டமாகதேர்தல்கள் நடத்தப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினதோ அல்லது ஆளும் கட்சி அரசியல் வாதிகளினதோ பணத்தைக் கொண்டு அரசாங்கம் தேர்தல் நடத்தவில்லை.

பொதுமக்களின் பணத்தைக் கொண்டே தேர்தல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.


நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதாகஅரசாங்கம் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. மாறாக குற்றவாளிகளுக்கு அரசாங்கம் அடைக்கலம் வழங்கி வருகின்றது.

நாட்டில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பாரியளவில் அதிகரித்துள்ளன.

அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் பாலியல் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்திருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விடுதலைப் புலிகள் துரோகிகள் முன்னாள் போராளி விமர்சனம்






(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஒரு துரோகிகள் என முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் அவ்வியக்கத்தை கடுமையாக விமர்சித்துள்ளார்.

நிரோமி டி சொய்சா என்பவர் எழுதியுள்ள 308 பக்கங்களைக் கொண்ட தமிழ் ரைகஸ (Tamil Tigress) என்ற புத்தகத்திலேயே விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக சில சம்பவங்களை இவர் விபரித்துள்ளார்.

உளவாளிகளை விடுதலைப் புலிகள் படுகொலை செயததுடன், தமிழ்வர்த்தக நிலையங்களில் களவாடினர் என நியோமி டி சொய்சா தெரிவித்துள்ளார்.

இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையில் நிலை கொண்டிருந்த தருணத்தில் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

1987 ஆம் ஆண்டு 17 வயதில் நிரோமி டி சொய்சா புலிகள் இயக்கத்தில் இணைநது கொண்டதாக தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். சொய்சா தற்போது அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து வருகின்றார்.

வன்முறைகளின் மூலம் தமிழீழத்தை எட்ட முடியாது என அறிந்து கொண்டதன் பின்னர் தாம் இயக்கத்தை விட்டு விலகியதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் படையினருக்கு உளவு பார்த்த குற்றத்திற்காக விடுதலைப் புலிகளின் இள[illegible] உறுப்பினர் ஒருவரை சிரேஸ்ட உறுப்பினர்கள் சித்திரவதை செய்ததனை தாம் நேரில் கணடதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கரப்பான் பூச்சியை கொல்வது போன்று குறித்த இளைஞரை புலிகள் கொலை செய்தத[illegible]கத் தெரிவித்துள்ளார்.

சக பெண் போரா[illegible]களை காதலித்த இளைஞர் ஒருவரையும் புலிகள் சுட்டுக் கொன்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அமைதி காக்கும் படையினருடனான யுத்தத்தை நி[illegible]துமாறு யாழ்ப்பாண மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்ததாகவும் அவர் தனது நூலில் தெரிவித்துள்ளார்.

# அரசியல்வாதிகளின் தரம் குறைவடைந்து வருகிறது

## அமைச்சர் டலஸ் கவலை



(கொழும்பு)

அரசியல்வாதிகள் தீர்க்கதரிசன வாதிகளாக இருக்க வேண்டுமென இளைஞர் விவகார மறறும் தொழில் விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இளைஞர் விவகார மற்றும் தொழில் விருத்தி அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினராக நாடாளுமன்ற உறுப்பினர் மோஹறான்லால் கிரேரோ, உததி யோகபூர்வமாக பதவி ஏற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல் வாதிகளின் வரலாற்றை நோக்கும் போது, கடந்த 3 தசாப்த காலமாக அவர்களின் தரம் குறைவடைந்து வருகிறது.

தற்போது, செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்படும் கேலிச் சித்திரங்கள் அதற்கு ஒரு நல்ல உதாரணமாகக் கொள்ளலாம்.

இந்த நிலையில், மீண்டும் மக்களின் நன்மதிப்பைப் பெற அரசியல்வாதிகள் தீர்க்கதரிசனத்துடன் செயறபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மத்திய வங்கி ஆளுநர் மீது வழக்குத் தொடர முடிவு

(கொழும்பு)

இலங்கை மத்திய வஙகியின் ஆளுநர் அஜித நிவாட் கப்ராலின் செயற்பாடுகள் குறித்து அரசியல் மற்றும் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கலந்துரையாடி அடுத்து நடைபெறவுள்ள கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர் நிதி சட்ட திட்டங்களை மீறி கணக்காளர் நாயகத்தின் கருத்தைக் கணக்கில் எடுக்காது கிறீஸ் வங்கிகளில் முதலீடு செய்துள்ளதாகக் கூறப்படும் 430 கோடி ரூபா நட்டம் தொடர்பில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# விஜயதாஸ எம்.பி.யின் மகன் சட்டத்தரணியாக நியமனம்




(கொழும்பு)

இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கத் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷவின் மகன் ரபித நிர்மல ராஜபக்ஷ, உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான நீதியரசர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஒருவரின் மகன் இவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து இலங்கை சட்ட மன்றக் கல்லூரிப் பரீட்சையின் மூலம் சித்தியடைந்து சட்டத்தரணியாக நியமனம் பெற்றுக் கொண்டார்.

# மீள்குடியமர்வு கருத்தரங்கில் உரையாற்ற சுவாமிக்கு அழைப்பு



(கொழும்பு)

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டவரகளை மீள் குடியமர்த்துவது தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் உரையாற்ற வருமாறு ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமிக்கு இராணுவம் அழைப்பு விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான போர் 2009 இல் முடிவுக்கு வந்த போது சுமார் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

அதன் பின்னர் போரால் புலம் பெயர்ந்தவர்களை அவரவர் சொந்த ஊரில் மறுகுடியமர்த்தும் பணி நடைபெற்று வருகிறது. போர் முடிந்து 3 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில், இன்னமும் பலர் முகாம்களில் உள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இந்நிலையில், போருக்கு பிந்தைய மீள் குடியமாவு, மீள்கட்டுமானம் மற்றும் சமரசம் தொடர்பான சர்வதேச கருத்தரங்கு எதிர்வரும் ஆகஸ்ட் 8 முதல் 10 வரையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கலந்துகொண்டு பேசுமாறு ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமிக்கு இராணுவம் அழைப்பு விடுத்துள்ளது.

# தேர்ச்சியடையாத இடைநிலை மாணவர்களுக்கு

# ஏ.எல்.பி.செயற்றிட்டம் வரப்பிரசாதமானது

## – யுனிசெப் செயற்றிட்ட அதிகாரி

(வலிகாமம்)

ஆரம்பக்கல்வியில் உரிய காலத்தில் உரிய தேர்ச்சியை அடையாத மாணவர்களை குறுகிய காலத்தில் தேர்ச்சியடையச் செய்யும் நோக்குடன் செயற்படுத்தப்பட்டு வருவதே ஏ.எல்.பி· (ALP) செயற்றிட்டமாகும். இதன் மூலம் மாணவர்கள இழந்த கல்வியை மீளப் பெறமுடியும் என யுனிசெப் செயற்றிட்ட அதிகாரி எஸ்.வதனச்செல்வன் தெரிவித்தார்.

யா/இராமநாதன் கல்லூரியில நேற்று முன்தினம் நடைபெற்ற ஆரம் பக்கல்வி மாணவர்களிற்கான கற்றல் உபகரண வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆரம்பக்கல்வி மாணவர்களில தாம் பெற வேண்டிய வயதிற்கான தேர்ச்சிகளைப் பெறத் தவறிய மாணவர்களிற்கான சிறப்பான இச்செயற்றிட்டம் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது.

இதற்கேற்பவே ALP செயற்றிட்ட செயல் நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை வெற்றிகரமாகப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இடைநிலைக்கல்வியில் மொழி விருத்தியில் பிள்ளைகள் எதிர்நோக்கும் இடர்பாடுகள், பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.


இச்செயற்றிட்டம் எல்லா வலயங்களிலும் எமது நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்பட்டுவந்தாலும், வலிகாமம் கல்வி வலயத்திலேயே சிறப்பாகச் செயற்படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வகையில் எமது நிதி பயனுடையதாக இருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆரம்ப வகுப்பில் உள்ள பிள்ளைகள் முதன்மை நிலை I இற்குரிய தேர்ச்சிகளை அடைந்தால் தான் முதன்மை நிலை II இற்குச் செல்ல முடியும்.

இதனைக்கருத்திற் கொண்டு ஆரம்பக்கல்வியில் அனுபவம் வாய்ந்தவர்களினால் இந்தச் செயற்றிட்ட பயிற்சி நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ஆரம்பக்கல்வி மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமையும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், யுனிசெப் கல்விச் செயற்றிட்ட அதிகாரி திருமதி ராதிகா, பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். (06)



பாரம்பரிய சுதேச வித்துவான்கள் சங்கத்தினால் பிறந்த நாட்டிற்கும் மக்களுக்கும் அளப்பரிய சேவையாற்றியவர்களை கௌரவிக்கும் முகமாக அண்மையில் வண்ணார்பண்ணை சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மக்கள் தொடர்பு நிலையத்தின் இயக்குநர் திவாகர், அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கப் பொதுச் செயலாளர் லயன்.ஜெயசங்கருக்கு (சமாதான நீதவான்) சமூகஜோதி விருது வழங்கிக் கௌரவிப்பதனைக் காணலாம். (116)

# படையினர் பயிற்சி மக்கள் பதற்றம்


(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் கட்டைக்காடு இயக்கச்சி வீதியில் அடிக்கடி துப்பாக்கிச் சத்தங்கள கேட்பதால் அப்பகுதி மக்கள் பதற்றமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படையினர் பயிற்சி எடுப்பதாவும் இதனால் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்பதாகவும் குறித்த வீதியில் புல்லா வெளியை அண்டிய பகுதிகளிலேயே துப்பாக்கிச் சத்தம் கேட்பதாகவும் அவ்வேளை அவ்வீதியூடான போக்குவரத்துக்கள் தடைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீதிப் போக்குவரத்து தடைப்படும் வேளையில் போக்குவத்துக்கு இடையூறு ஏற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (100)

## பரமர் சங்கமம்



"கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை" எண்டொரு பழமொழி இருக்கு. இதன அர்த்தத்தைப் போலதான் இந்தக் கால வானொலி இரசிகர்களின் நிலையும் வந்திட்டுது.

கூழ் குடிக்க ஆசைப்பட்டால் மீசை பழுதடையும். கூழ் தடிப்பான உணவுப் பதார்த்தம். அதன் கழித்தன்மை மீசையில் பட்டால் அதனை போக்காட்ட மிகுந்த சிரமப்படவேண்டியிருக்கும்.

இதனால் மீசை வைத்துக் கொண்டவர்களால் கூழை உண்டு அனுபவிக்க முடியாமல் போய் விடுகிறது. இது போலவே இன்றைய வானொலிநேயர்கள் அதைக்கேட்பதா இதைக் கேட்பதா என்று அல்லாட வேண்டி நேர்கிறது.

1950 களில் இலங்கை வானொலியில் முற்பகல் 9.00 மணியில் இருந்து 10 மணி வரையான ஒரு மணிநேரம் மட்டுமே வானெலி நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன.

அதாவது சினிமாப் பாடல்களை ஒலிபரப்பும் வர்த்தக சேவை இந்த ஒரு மணி நேரத்திலேயே இடம்பெற்று வந்தது. இப்போதையைப் போல கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

பிற்காலத்தில் வந்த "ரான்சிஷ்டர்" ரேடியோக்களின் அளவுகளில் பற்றறி வானொலிக்கான பற்றறி இருந்தது. புதிதாக வாங்கினால் மூன்று, ஆறு மாதங்கள் பாவிக்கும். அதற்குப் பின்பாக வெய்யிலில் காய வைத்துப் பாவிப்பதைப் பரவலாகக் காணக்கூடியதாக இருக்கும்.

"வால்பு" ரான்சிஷடர்" தயாரிப்புக்கள் வந்த பின்பாகவே கையடக்கத் தொலைபேசி அளவுகளிலும் வானொலிப் பெட்டிகள் வெளிவரத் தொடங்கின.

அதுவும் இல்லாமல் எப்.எம் என்னும் பண்பலை அலைவரிசை ஒலிபரப்புக்களும் ஆரம்பித்தன. வர்த்தக சேவையைத் தவிர தேசிய சேவை என்னும் ஒலிபரப்பும் இடம்பெற்று வந்தது. ஆயினும் அதில் செய்திகள் மற்றும் பேச்சு, பாட்டு, வாத்திய இசை போன்ற கிராமிய மட்ட நிகழ்ச்சிகளாக அமைந்ததால் சினிமாப் பாடல்கள் ஒலிபரப்பப்படும். வர்த்தக சேவை போன்று எல்லோராலும் கேட்கப்படும் ஜனரஞ்சக ஒலிபரப்பாக இருக்கவில்லை.

பிற்பாடு, பண்பலை ஒலிபரப்புக்கள் பரவலாக வந்த பின்னால் சக்தி, சூரியன் என்னும் சினிமாப் பாடல்களை 24 மணிநேரமும் ஒலிபரப்பும் இரு ஒலிபரப்புக்கள் மில்லேனியம் ஆண்டில் தோன்றி வானொலிப் பிரியர்களை முழுநாளுமே மூழ்கடித்துக் கொண்டிருந்தன.

அதன் பின்பாக வசந்தம், வெற்றி ஆகிய அலைவரிசைகளும் தோன்றின. இப்போ அலை என்னும் புதிய ஒலிபரப்பும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நிலையில் எதைக் கேட்பது எதை விடுவதென்பதால் "கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை" எண்ட திரிசங்கு நிலை ஏற்பட்டுள்ளது.

"இருப்பவனுக்கு ஆயிரம் கோடி, இல்லாதவனுக்கு ஒரு கோடி" என்பது போல ஆயிரம் ஒலிபரப்புக்கள் வந்தாலும் 50 களில் இலங்கை வானொலி வர்த்தக சேவை நிகழ்ச்சி இன்றைக்கும் காதுகளில் ரீங்காரமிடுகுதெண்டால் பொய்யில்லைப் பாருங்கோ...

# நினைவுப் பேருரையும் கல்விக் கௌரவிப்பும்

(பருத்தித்துறை)

அமரர் மணியம் கணபதிப் பிள்ளையின் 5 ஆவது ஆண்டு நினைவாக நினைவுப் பேருரையும் கல்விக் கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியத்தலைவர் ராஜ்.எஸ்.குகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், கௌரவ விருநதினராக தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர் க.க.யோகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நெல்லியடி பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவசிறிதியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியர் சு.இராமகிருஸ்ணன் வசந்தகுமாரி மாணிக்கவாசகர் ஆகியோர் ஆசிரியர் சேவைக்காக கௌரவிக்கப்படவுள்ளனர். தொடர்ந்து சமூக சேவை மற்றும கலைத் துறையில் சேவையாற்றியவர்களுக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ளன. (109)

# திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாட்டு மக்கள் நலம் வேண்டிப் பிரார்த்தித்து மாதம் ஒரு கோயில் மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றது.

அந்த வகையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.கந்தர்மடம் அருள்மிகு ஸ்ரீ செல்வ நாக பூசணி அம்பாள் ஆலய தேவஸ தானத்திற்கு நாயன்மார் நால்வர் திருமுறைச் சுவடிகள் எழுந்தருளி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு நடைபெறவுள்ள ஆலயப் பூசையைத் தொடர்ந்து நான்காம் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகித் தினமும் மாலை பூசையைத் தொடர்ந்து முற்றோதல் நிகழ்வு நடைபெறுமென ஆலய அறங்காவலர்களும், திருமுறை மன்றத்தினரும் தெரிவித்துள்ளனர.

# முரசின் இன்றைய பலன்

(14.07.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 30 ஆம் திகதி. ஏகாதசி
பின்னிரவு 4.59 வரை. நட்சத்திரம் கார்த்திகை. பின்னிரவு 3.51 வரை.
அமிர்தயோகம். கார்த்திகை விரதம்.ஏகாதசி விரதம்.
இராகுகாலம் 9.00 - 10.30 வரை. சுபநேரம் 3.00 - 4.30 வரை.
எமகண்டம் 1.30 - 3.00 வரை. குளிகன் காலம் 6.00 - 7.30 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குழப்பம், எதிர்பாராத இடமாற்றம், ஆரோக்கியத்தில் கவனம், வேலைப்பளு அதிகரிக்கும். |
| ரிஷபம் | கவலை, உத்தியோகத்தில் உயர்வு, நாணயம் காப்பாற்றுவீர்கள், சுபகாரியங்கள். |
| மிதுனம் | மறைமுக எதிர்ப்புகள், பயண அனுகூலம், உறவினர் ஆதரவு, பிரச்சினைகளைத் தவிர்க்கவும். |
| கடகம் | உற்சாகம், ஆரோக்கியத்தில் பாதிப்பு, உறவினருடன் விரோதம், வீண்செலவுகள். |
| சிம்மம் | பகைவரால் தொல்லை, ஆன்மிகத்தில் ஈடுபாடு, நினைத்தவை நிறைவேறும், பதவியுயர்வு. |
| கன்னி | காரியானுகூலம், பணவரவில் நெருக்கழ, புத்திரர் மகிழ்ச்சி, ஆரோக்கியத்தில் கவனம். |
| துலாம் | சந்திராட்டமம், கவனம் தேவை, சிந்தித்து செயற்படவும், எதிர்பாராத இடமாற்றம். |
| விருச்சிகம் | சுலப நன்மை, பொன்பொருள் சேரும், வெளியிடத் தொடர்புகள், இடமாற்றம். |
| தனுசு | சிறு பயணம், நினைத்தது நிறைவேறும், கௌரவமான பதவி கிட்டும், புத்திரரால் பூரிப்பு. |
| மகரம் | உறவினர் வருகை, நெருக்கழகள் ஏற்படும், சுபகாரியத்தடை, பொருளாதார மேம்பாடு. |
| கும்பம் | சுகவிருத்தி, உறவினர்களை அனுசரிக்கவும், குடும்பத்தில் பிரச்சினை, எதிர்பாராத பயணம். |
| மீனம் | வாகன சுகம், மருத்துவச் செலவுகள், நிதானம் தேவை, நிம்மதிக்குறைவு. |

## ஒலிம்பிக் சீருடை தயாரிப்பு அமெரிக்காவில் சர்ச்சை

ஒலிம்பிக்கிற்காக லண்டன் செல்லும் அமெரிக்க விளையாட்டு வீரர்களுக்கு என்று பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட தேசிய சீருடை புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

2012ஆம் ஆண்டிற்கான ஒலிம்பிக் போட்டிகள் பிரிட்டன் தலைநகர் லண்டனில் நடைபெற உள்ளது.

ஒலிம்பிக் போட்டிக்கான, அமெரிக்காவின் பிரபல ரால்ஃப் லௌரென் லேபலை கொண்ட சீருடைகள் அனைத்தும் சீனாவில் தயாரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் Made in China என்று எழுதப்பட்டிருப்பது, கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து புதிய சர்ச்சை எழுந்துள்ளது.இதையடுத்து, அமெரிக்க ஜனநாயக மற்றும் குடியரசு கட்சி தலைவர்கள், அமெரிக்க ஒலிம்பிக் வாரியம் மீது கடும் விமர்சனத்தை முன் வைத்துள்ளனர். அமெரிக்காவின்தேசிய சீருடைகளை, அந்நாட்டில் தயாரிக்க முடியாதா எனும் கேள்வி நம் நாட்டுக்கு வெட்கக்கேடு என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஒலிம்பிக் பாதுகாப்புப் பணியில் பதினேழாயிரம் காவலர்கள்

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் பாதுகாப்புப் பணியில் 17 ஆயிரம் காவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஒலிம்பிக் போட்டிக்கு அல் கொய்தாபயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதால் வான் வழி, நீர்வழி, தரைவழி பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. ஒலிம்பிக் மைதானத்தின் அருகில் உள்ள வீடுகளின் மாடிகளில் ஏவுகணைகளும் நிறுத்தப்படுகின்றன.

இந்த நிலையில் ஒலிம்பிக் பாதுகாப்பு பணிக்காக ஜி4எஸ் என்ற தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த நிறுவனத்தால் பேசியபடி காவலர்களை கொடுக்க முடியாததால், இப்போது மேலும் 3,500 இராணுவ வீரர்களை பாதுகாப்பு பணிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




இங்கிலாந்தின் நினைவுச் சின்னமான ஸ்டொனெஞ்சுக்கு அருகில் ஒலிம்பிக் தீபத்துடன் நிற்கும் அமெரிக்காவின் முன்னாள் தடகள வீரர் மைக்கல் ஜோன்சன.



## பங்களாதேஷ் அணிக்கான சுழற்பந்து பயிற்றுநர் முஸ்தாக்

(டாக்கா)

பங்களாதேஷ் தேசியக் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான சக்லைன் முஸ்தாக்கிற்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது. சக்லைன் முஸ்தாக்கின் நியமனத்தினை பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் செயற்குழு அங்கீகரித்ததை அடுத்தே இந்த அழைப்பினை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை விடுத்துள்ளது.

இதன்படி சக்லைன் முஸ்தாக்கிற்கான ஆரம்பகட்டமாக 3 மாதகாலங்கள் கொண்ட ஒப்பந்தத்தினை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை வழங்கியுள்ளது. இந்த 3 மாதகாலங்கள் அவருக்குரிய பயிற்சிக் காலமாக அமையும் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடமிருந்து நியமனத்திற்கான கடிதம் கிடைக்கப்பெற்றமையை உறுதிப்படுத் திய சக்லைன் முஸ்தாக், வழங்கப்பட்ட நியமனக்கடிதத்தில் காணப்படும் சில அம்சங்களை உறுதிப்படுத்த வேண்டியுள்ளதன்காரணமாக தனது முகவர் பங்களாதஷ் கிரிக்கெட் சபையுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார் எனவும், அவை தீர்க்கப்பட்டதும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளதாகவும் தெரிவித்தார். பங்களாதேஷ் அணி ஐரோப்பாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் அந்தத் தொடரிலேயே முஸ்தாக் தங்களோடு இணைந்து கொள்வார் என்ற நம்பிக்கை காணப்படுவதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

## தெற்காசிய விளையாட்டில் முன்னாள் போராளிகள்

(கொழும்பு)

தெற்காசிய போட்டியில் பங்கேற்கும் இலங்கை அணியில் புனர்வாழ்வு முன்னாள் போராளிகள் 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்த தகவலை இலங்கை விளையாட்டுதுறை சேர்ந்த ஹர்ஷா அபேகோன் தெரிவித்தார்.

புதுடில்லியில் அடுத்த ஆண்டு தெற்காசிய கூட்டமைப்பின் சார்பில் விளையாட்டு போட்டிகள் நடைபெற உள்ளன. இதில் பங்கேற்கும் அணிகள் தேர்வு செய்வதில் இலங்கை ஈடுபட்டுள்ளது. இதுகுறித்து அவர் கூறும்போது, அடுத்த ஆண்டு டில்லியில் நடைபெற உள்ள தெற்காசிய விளையாட்டு போட்டியில் முன்னாள் போராளிகள் 8 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 2009ஆம் ஆண்டு நடந்த இறுதி கட்ட போருக்கு பிறகு பல்வேறு முகாம்களில் இருந்த இவர்கள் மறுவாழ்வு பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களில் 133 பேரில் இருந்து திறமையானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 4 பேர் துப்பாக்கி சுடுவதில் திறமையானவர்கள். தலா 2 பேர் கிரிக்கெட், கராத்தே வீரர்கள் ஆவர் என்று தெரிவித்தார்.



## மீண்டும் உலக சம்பியன் ஆனந்த் நம்பிக்கை

நான் மீண்டும் உலக சம்பியன் ஆவேன். மீண்டும் சம்பியன் ஆவதில் நான் ஆர்வமாக உள்ளேன் என சதுரங்க வீரர் விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்தார். ஐந்து முறை உலக சம்பியனான விஸ்வநாதன் ஆனந்த் தனது 42ஆவது வயதிலும் தொடர்ந்து சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்பதில் ஆர்வமாக உள்ளார். ஆகஸ்ட் 27ஆம் திகதி முதல் டிசம்பர் 10ஆம் திகதி வரை துருக்கியில் நடக்க உள்ள சதுரங்க சம்பியன்ஷிப்பில் நான் பங்கேற்கப் போவதில்லை. இதுபோன்ற வடி விலான தொடர்களில் நான் பலமுறை விளையாடியுள்ளேன். எனவே வேறு தொடர்களில் கவனம் செலுத்த நான் விரும்புகிறேன். நீங்கள் ஒரு விளையாட்டை நேசித்து, கடினமாக உழைத்தால் அந்த விளையாட்டில் சிறப்பாக செயற்பட முடியும். அப்போது வயது ஒரு தடையாக இருக்காது. அதனால்தான் 42 வயதிலும் என்னால் சிறப்பாகச் செயற்பட முடிகிறது எனத் தெரிவித்தார்.

## ஒலிம்பிக்கில் தங்கம் பிரேசில் நம்பிக்கை

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்லும் முழு முயற்சியில்பிரேசில் கால்பந்து அணி ஈடுபடும் என பிரேசில் கால்பந்து சம்மேளனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

கால்பந்து உலகில் வல்லரசு என்று வர்ணிக்கப்படும் பிரேசில் அணி இதுவரை ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதில்லை.

இது குறித்து பிரேசில் கால்பந்து சம்மேளனம் விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்காக சிறந்த அணி தெரிவாகியுள்ளது. இந்த ஆண்டு நிச்சயம் தங்கம் வெல்லும் முனைப்புடன் எமது அணி களமிறங்குகின்றது. சிறந்த வீரர்களைக் கொண்ட இந்த அணி தங்கம் வெல்லும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளில் இதுவ்ரை தங்கம் வெல்லவில்லை என்ற குறையை இந்த ஆண்டு நிச்சயம் மாற்றியமைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒலிம்பிக் போட்டிக்கான பிரேசில் கால்பந்து அணி சிறப்பான முறையில் தெரிவு செய்யப்பட்டவில்லை என சில பிரேசில் நாட்டு கால்பந்து வல்லுநர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிவப்புக் கலரை கண்டால் வெறுப்படையும் யுவராஜ்

(மும்பை)

முன்பு எனக்கு பிடித்தமான நிறம் சிவப்பாகும். ஆனால் எனது சிகிச்சையின் போது அடிக்கடி இரத்தத்தைப்பார்த்துப் பார்த்து எனக்கு தற்போது சிவப்பு நிறத்தைப் பார்த்தாலே வெறுப்பு ஏற்படுகிறது. சிவப்பு கலர் எனக்கு எரிச்சலை உண்டாக்குகிறது என அதிரடி வீரர் யுவராஜ்சிங் தெரிவித்தார். சிகிச்சைக்கு பின்னர் கிரிக்கெட் ஆட்டத்தின் மீதான எனது அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. நோயில் இருந்து மீண்டு வந்துள்ள நான் இந்திய அணியில் இடம் பிடித்து முதல் ஆட்டத்தில் எப்போது ஆடுகிறேனோ? அது என்னைப் பொறுத்தமட்டில் மிகப்பெரிய சாதனையாகும்.

சிகிச்சையில் இருந்த நேரத்தில் எனக்கு மூச்சு விடுவதே சிரமமாக இருந்தது. தற்போது என்னால் சிரமமின்றி சுவாசிக்க முடிகிறது. சிகிச்சையின் போது நான் உணவின் நறுமணத்தை நுகர முடிந்தது. ஆனால் சாப்பிடவில்லை. தற்போது மற்றவர்களைப் போல் சகஜ நிலைமைக்கு திரும்பி இருப்பது எனக்கு நிம்மதி அளிக்கிறது. 6 மாதங்கள் வரை முழு ஓய்வில் இருந்த நான் மீண்டும் என்னால் விளையாட முடியும் என்று கற்பனை கூட செய்யவில்லை. தற்போது எனது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. பயிற்சியில் எனக்கு களைப்பு ஏற்படுவது கிடையாது. இலங்கையில் நடைபெறும் ருவென்ரி - 20 உலக கோப்பைக்கான இந்திய அணியில் இடம் பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.





## பிரெட்லீ ஓய்வு

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அவுஸ்ரேலிய புயல்வேக பந்துவீச்சாளர் பிரெட் லீ திடீரென அறிவித்துள்ளது கிரிக்கெட் இரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. 1999ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டியில் காலடி எடுத்து வைத்த அவுஸ்ரேலியா வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ, இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதன் முதலில் விளையாடி இரண்டு இன்னிங்சில் 7 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். கடைசியாக 2008ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடினார். அதன் பிறகு காயம் காரணமாக டெஸ்ட் போட்டியில் விளையாடாமல் இருந்து வந்தார். 2000 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பிரெட் லீ காலடி எடுத்து வைத்தார். முதல் போட்டியில் 10 ஓவர்கள் வீசிய அவர், 39 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து விக்கெட் எதுவும் கைப்பற்றவில்லை. கடைசியாக 2012 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக விளையாடினார். தசைப்பிடிப்பு காரணமாக அவதிப்பட்டு வந்த 35 வயதுடைய பிரெட் லீ திடீரென்று நேற்று முன்தினம் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். தசைப்பிடிப்பு காரணமாக ஒருநாள், டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்துள்ளது கிரிக்கெட் இரசிகர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ஏற்கனவே ஓய்வு பெற்றுவிட்ட மெக்ராத் 381 விக்கெட்டுகளை எடுத்து அவுஸ்ரேலியாவில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் என்ற சிறப்பைப் பெற்றிருந்தார். அந்த சாதனையை முறியடிக்க பிரெட் லீக்கு இன்னும் ஒரு விக்கெட்டே தேவை. ஆனால் அதற்குள் அவர் ஓய்வு பெற்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## றோயல் சலஞ்சர் வீரர்களுக்கு இன்னமும் ஊதியம் இல்லை

(பெங்களூர்)

ஐ.பி.எல். அணியான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி சார்பாக இந்தப் பருவகாலத்தில் போட்டிகளில் பங்குபற்றிய முன்னணி இந்திய, வெளிநாட்டு வீரர்களுக்கான ஊதியங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு தாமதம் குறித்து வீரர்களுக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நியூசிலாந்தைச் சேர்ந்த டானியல் விட்டோரி, அன்ட்ரு மன்டொனால்ட் உட்பட வீரர்கள் பலருக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு பயிற்றுவிப்பாளர்கள், பயிற்றுவிப்புக் குழுவினர் பலருக்கும் இதே நிலை ஏற்பட்டுள்ளது.

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் உரிமையாளரான விஜய் மல்லையாவின் நிறுவனம் கடனில் சிக்கிக் காணப்படும் நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஏற்கனவே விஜய் மல்லையாவின் விமான சேவையான கிங் பிஷர்ஸ் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாததன் காரணமாக விமானமோட்டிகள் சேவையில் ஈடுபட மறுப்புத் தெரிவித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



தாவடி விநாயகர் முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் முன்பள்ளி முன்றலில் வெகுசிறப்பாக நடைபெற்றது. இப்போட்டி நிகழ்வில் சிறார்களின் வண்ணமயமான பல விளையாட்டுக்கள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது. மைதான நிகழ்வுக்கு சிறார்கள் தயாராக இருப்பதைக் காணலாம்.

# மயூரன் சிறப்பான பந்து வீச்சு; 58 ஓட்டங்களால் மகாஜனா வெற்றி

(யாழ்ப்பாணம்)

மயூரனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் யூனியன் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி 58 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணி களுக்கிடையிலான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகின்றது.

கடந்த 11ஆம் திகதி மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மகாஜனாக் கல்லூரி அணி, சிந்துஜனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மகாஜனாக் கல்லூரி அணி 39 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிந்துஜன் 23 பந்துகளில் 46 ஓட்டங்களையும், கஜந்தன் 36, சாரங்கன் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தனுசன், கஜானன் தலா மூன்று, ரகுபதி இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 276 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யூனியன் கல்லூரி அணி ரகுபதியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் நல்ல நிலையைப் பெற்றது. அணியின் நிலையை உணர்ந்து அதிரடியாக ஆடி ரகுபதிக்கு ஏனைய அணி வீரர்கள் சிறப்பான இணைப் பாட்டம் வழங்காமையால் யூனியன் கல்லூரி அணி தோல்வியடைய நேரிட்டது. இறுதியில் யூனியன் கல்லூரி அணி 39 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சிறப்பாக ஆடிய ரகுபதி ஆட்டமிழக்காது சதம் (102) அடித்தார். மற்றும் பிரவீன் 22, பிரதாப் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் ஆறு, கஜந்தன் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (93)

# மிஸ்பா உல்ஹக் நீக்கம்

(லாகூர்)

எதிர்வரும் செப்டெம்பரில் இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி தொடருக்கான பாகிஸ்தானின் தற்காலிக அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 30 பேர் கொண்ட அணியாக அறிவிக்கப்பட்டுள்ள இவ்வணியில் மிஸ்பா உல் ஹக்கிற்கு இடம்வழங்கப்படவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில்பாகிஸ்தான் அணி சார்பாக அண்மைக்காலமாக போட்டிகளில் பங்குபற்றத்தேர்வுசெய்யப் பட்டிருக்காத விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மல், சகலதுறை வீரர் அப்துல் ரசாக், ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் இம்ரான் ஆகியோர் அணியில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

டெஸ்ட், ஒரு நாள் போட்டிக்கான பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் இவ் உத்தேச அணியில் இடம்பெறவில்லை. இளம் வீரர்களை அதிகம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே அவர் நீக்கப்பட்டார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

# கரப்பந்து பயிற்சி முகாம் நெடுந்தீவில் இன்று

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தில் கரப்பந்தாட்டத்தை வளர்க்கும் முகமாக நெடுந்தீவு பிரதேச இளைஞர் சம்மேளனம் விசேட கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றை இன்றைய தினம் நடத்தவுள்ளது.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இன்றைய தினம் இடம்பெறவுள்ள இக்கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் நெடுந்தீவு பிரதேச இளைஞர் விளையாட்டு அதிகாரி அ. அமலயான் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் விளையாட்டு அதிகாரியும், மகாஜனாக் கல்லூரியின் கரப்பந்தாட்ட பயிற்றுநருமான சி. தயாளபாலன், வேலணைப் பிரதேச இளைஞர் விளையாட்டு அதிகாரி க. கபிலன் ஆகியோர் கலந்து கொண்டு கரப்பந்தாட்ட நுணுக்கங்கள், அதன் நவீன முறை குறித்து விளக்கமளிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி முகாமில் குறைந்தளவு நூறுக்கும் அதிகமாக வீர, வீராங்கனைகள் பங்குகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும், பங்குபற்ற விரும்புவோர் கலந்துகொள்ள முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

# உதைபந்தாட்டத்திலும் தொழில்நுட்பம்

உதைபந்தாட்ட போட்டிகளிலும் கோல்கள் அடிக்கப்படுவதை, அதாவது முழுமையாகப் பந்து கோல் கோட்டை தாண்டியதா? இல்லையா? என்பதை முடிவு செய்வதற்கு தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது தொழில்நுட்ப முறைகள் தொடர்பாக பரிசீலித்து வருவதாகவும், சரியான முறை மற்றும் அவற்றை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது தொடர்பாகவும், பரீட்சார்த்த நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும் எந்த முறை அமுல்படுத்தப்படப் போவதாக இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை எனவும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் செப் ப்ளாட்டர் தெரிவித்துள்ளார்.

மிக விரைவில் இங்கிலாந்து பிரீமியர் லீக் போட்டிகளில் இந்த முறை அமுலுக்கு வரலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இம்முறை பிரீமியர் லீக் போட்டி தொடரில் கூட ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரீமியர் லீக் போட்டிகளில் அமுலுக்கு வந்து அது நல்ல முறையில் அமைந்தால், நிச்சயம் மிக விரைவில் சர்வதேசப் போட்டிகளுக்கு அமுலில் வரும் இது தொடர்பாக பல தடவை பல கருத்துகள் முன்வந்த போதும்சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் போட்டியின் வேகம் குறையக் கூடாது என்பதற்காக இந்த முறைமையை அமுல்படுத்தவில்லை. உதைபந்தாட்டத்தை பொறுத்தளவில் கிரிக்கெட் அளவு தவறுகள் இல்லாவிட்டாலும், சில போட்டி முடிவுகள் மாறுகின்றன.

கடந்த இரண்டு வருடங்களில் உதாரணம் காட்ட, கூடிய போட்டிகள் இரண்டு மட்டுமே இருந்தும் கூட தொழில்நுட்ப முறை ஆராயப்பட்டு வருகிறது. முடிவுகள் மாறுகின்றன. ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயம். ஆனால் இந்த முறை வந்தால் சுவாரசியமான வேகமான போட்டி என்ன ஆகும் என்பது கேள்வியே?

# இனவாதியல்ல நான்

(லண்டன்)

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும், செல்ஷி அணியின் தலைவருமான ஜோன் ரெறி, தான் இனவாதியல்லன் எனத் தெரிவித்துள்ளார். ஆபிரிக்க கால்பந்தாட்ட வீரர்களுக்கும், ஆபிரிக்க நலத்திட்டங்களுக்கும் தான் வழங்கிய உதவிகளை அவர் ஞாபக மூட்டி இதைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் பிறீமியர் லீக் போட்டியொன்றில் குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணியைச் சேர்ந்த அன்ரொன் பேர்டினனட் என்ற வீரரை இனரீதியாகத் திட்டினார் என்ற குற்றச்சாட்டினை அடுத்து ஜோன் ரெறி இங்கிலாந்து அணித்தலைமைப் பதவியை இழந்திருந்தார்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாகக் காவல்துறையினருக்கு வழங்கிய அறிக்கையில், தான் பயன்படுத்திய வார்த்தை மோசமானதல்ல எனவும், இனரீதியாக அவமானப்படுத்தும் நோக்கத்துடன் பயன்படுத்தப்படவில்லை எனவும் தெரிவித்தார். அத்தோடு பேர்டினன்ட்டை இனரீதியாகத் தூற்றும் எண்ணம் தனக்குக் காணப்பட்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

தனது நடத்தை தொடர்பாக காவல்துறைக்கு விளக்கமளித்த அவர், செல்ஷி அணியின் பல்லின வீரர்களுடன் இணைந்து செயற்பட்டு அவ்வணியை வழிநடத்தும் பொறுப்புக் காணப்படுவதாகவும், தன்னோடு முன்னர் இணைந்து விளையாடிய கறுப்பின வீரர்களான மர்சல் டேசைலி, டிடியர் ட்ரோக்பா ஆகியோருடன் இணைந்து நற்பணிகளில் ஈடுபட்டதையும் அவர் ஞாபகமூட்டியுள்ளார்.

சிங்கர் நிறுவன அனுசரணையுடன் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டத்தொடரில் சம்பியன் பட்டம் வென்ற ஆவரங்கால் மத்தி அணி விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம். கைதடிச் சந்தியில் அமைந்துள்ள மின்னொளி விளையாட்டு மைதானத்தில் அண்டையில் நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி, ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகள் மோதின. இதில் ஆவரங்கால் மத்தி அணி 3-1 என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (93)



ஆவரங்கால் மத்தி அணி

# ஒரு சக்தியில் மட்டும் தங்கியிருக்கும் மூலோபாயம் சரியானது அல்ல!

ஒரு மாதத்துக்கு முன்பாக தமிழ் புலம் பெயர்ந்தவர்களின் எதிர்ப்பு காரணமாக மகிந்த ராஜபக்ஷவின் மற்றொரு பேச்சும் இரத்துச் செய்யப்பட்டது, இலங்கையின்



வெளியுறவுக் கொள்கைகளில் தீவிர விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

அந்தக் கொள்கைகளில் மாற்றம் அவசியமா? அல்லது அது நாட்டின் இராஜதந்திரிகளால் மிகவும் மோசமாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

இப்போது அரசாங்கம்கூட சில விடயங்கள் ஒழுங்கற்று இருப்பதாக நினைப்பதுபோலத் தோன்றுகிறது. அதனால்தான் அதன் தூதரகத் தலைவர்களுக்கு, அரசாங்கம் இனிமேல் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி போதிப்பதற்காக ஒரு பயிற்சிப் பட்டறையை நடத்த ஏற்பாடு செய்திருப்பதாக அறியக்கூடியதாக உள்ளது.

கடந்த மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அது வாக்குகளை இழந்த அந்தக் கணமே இந்த அறிவு வந்திருக்க வேண்டும், அதன் விளைவாக, அரசாங்கம் தனது நல்லிணக்க முயற்சிகளில் இன்னும் நல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கூறப்பட்டது.

இறுதிக்கட்ட போர் முழுவதும் அரசாங்கம் 13ஆவது திருத்தத்துக்கு உட்பட்ட ஒரு அரசியல் தீர்வினை ஏற்படுத்துவதாக இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்திருந்தது. இப்போது மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இன்னும் மோசமானதாக, அரசாங்கத்தின் ஒரு பொதுவான நடைமுறையாக இப்போது மாறியிருப்பது, இந்தியாவிலிருந்து வருகை தரும் ஒவ்வொரு பிரதிநிதியிடமும் 13ஆவது திருத்தத்தையும் தாண்டிய அதன் நடவடிக்கைகளைப் பற்றிய அதன் உறுதிப்பாட்டுக்கு உத்தரவாதம் வழங்குவதும், மற்றும் அவர்கள் வீடு செல்வதற்காக விமானத்தில் காலடி வைத்ததும் உடனடியாக அதை மறுப்பதுமே ஆகும். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம் கிருஷ்ணா கடந்த ஜனவரியில் இந்த சோதனையால் பாதிக்கப்பட்டிருந்தார்.

அணு ஆயுத வல்லரசாகவும், மற்றும் ஐ.நா பாதுகாப்பு சபையில் அதன் நிரந்தர பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கான நிலையிலுமுள்ள இந்தியா, எவ்வளவு துணிச்சல் இவர்களுக்கு! எங்களது நாட்டின் ஒரு சிறுபகுதியில் உள்ள மக்களைக் காட்டிலும் குறைவான மக்களையே தனது முழு நாட்டிலும் வைத்திருக்கும் அந்த மகிந்த ராஜபக்ஷவை சகித்துக் கொள்ள முடியாது! அவரது பொருளாதாரம் பெருகுவதை விட நாங்கள் எங்கள் நாட்டில் இடம்பெறும் ஊழல் ஒன்றில் அதிகப் பணத்தை இழக்கிறோம் என்று நினைக்கக் கூடும் என்பதை கற்பனை செய்வது சுலபம்.

உண்மையில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை கால வரையறையின்றி ஒத்தி வைக்க வேண்டுமென்று ஆலோசனை தெரிவித்து விவாதங்கள் இப்போது மேலெழுந்துள்ளன. ஏனெனில் நாட்டை பிளவு படுத்துவதற்கு மேற்கு ரி.என்.ஏ தலைமையிலான நிர்வாகத்தை பயன்படுத்தக் கூடும் என்பதால். அவர்களின் எண்ணங்களிலுள்ள சந்தேகங்கள் அநேகமாக இயற்கையானதும் மற்றும் புத்திசாலித்தனமானதும் என்றே சொல்லலாம் - அப்படியான பிரித்தாளும் தந்திரத்தை தாங்கள் இலக்காக கொண்டிருக்கும் நாடுகள் மீது பயன்படுத்த உண்மையில் அவர்களும் விரும்புகிறார்கள். தற்பொழுது அவர்கள் இலங்கையையும் தங்கள் இலக்காக கொண்டிருக்கிறார்கள் போலத் தோன்றுகிறது.

எனினும் இந்த விளையாட்டில் உள்ள ஒரே ஆட்டக்காரர்கள் அவர்கள் மட்டுமல்ல. தங்களின் வாடிக்கையாளர் நாடுகள் என்கிற வரிசையில் தங்களிடம் அடிபணிய மறுக்கும் நாடுகள் மீது கருணைகாட்டாத வேறு பல சக்திகளும் உள்ளன. அவர்களிடமும் மற்றைய நாடுகளில் தலையீடு செய்ததற்கான ஒரு சரித்திரம் உள்ளது.

இந்த வகையான ஆபத்துகள் நல்ல நோக்கம் (அல்லது மோசமான) என அழைக்கப் படுகின்றன, என்னைக் கேட்டால் ஏற்கனவே மிகவும் தாமதமாகிவிட்டது என்றே சொல்வேன். கடந்த வாரம் எதிர்கட்சியினர் சொன்னதைப்போல, வேறு எங்கையும் விட வடக்கிற்குத்தான் தேர்தல் அவசியம். ஐக்கியமான இலங்கைக்காக பாடுபடும் ஒரு நாடு என்கிற வகையில் நாங்கள் இந்தியாவுடனான உறவையும் மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதையும் நான் சேர்த்துக் கொள்வேன்.

இப்போது இழந்து விட்ட விடயங்களாக உள்ள மேற்கையும் இந்தியாவையும் கைவிட்டு, சீனாவுடனான உறவை மேம்படுத்த வேண்டுமென்பதில் சிலர் ஆர்வமாக உள்ளனர். இந்த



ஆட்கள் மேற்கத்தைய தூதரகங்களை மூடவேண்டும் என்கிற முடிவுகளையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.


இலங்கைக்கு மேற்கு அவசியமில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள், இருந்தாலும் உண்மையில் இலங்கை அதன் ஏற்றுமதிகளுக்காக மேற்கத்தைய சந்தை வாய்ப்புகளில் முற்றாகத் தங்கியிருப்பதால் மேற்கினால் இலங்கையின் பொருளாதாரத்தை தகர்க்க முடியும். எப்படி மேற்கானது தற்போது மிகவும் கடுமையான பணியாக ஈரானின் பொருளாதாரத்தை தகர்ப்பதற்காக மற்றைய நாடுகள் யாவும் அதன் எண்ணெயை வாங்குவதை முறைப்படி நிறுத்தி வருகிறது என்பதை நாங்கள் அவதானிக்க வேண்டும்.

ஆசியா மீதான ஆர்வம் மேற்கு நாடுகளில் வளர்ந்து வருவதால் அதிலிருந்து பயன்பெற, மற்றும் சிலருக்கு இலங்கையின் சிறந்த நண்பராக மேற்கு வருவதில் விருப்பம் உள்ளது. தீவின் மூலோபாய நிலையினைப் பற்றி அதிகம் பேசப்படுவதால் மற்றும் அதே போன்ற இராணுவ ஒத்துழைப்பு சிறிதளவாவது இருக்க வேண்டும் என்கிற ஆர்வம் உள்ளதால் ஒருவேளை இந்த நபர்கள் இலங்கையை மற்றொரு டியாகோ கார்ஷியாவாக மாறவேண்டும் என்று கனவு காண்கிறார்கள், ஆனால் மேற்கின் இலட்சியம் மிகவும் சிறியது என டியாகோ கார்ஷியா நிரூபித்துள்ளது.

அதிருஷ்டவசமாக அரசாங்கம் அதுபோன்ற முட்டாள்தனமான வேலைகளில் இறங்கவில்லை. ஒரு சக்தியில் மட்டும் தங்கியிருக்கும் மூலோபாயம் குறுகிய நோக்கமுடையது என நிரூபிக்கப் பட்டுள்ளது - பலவற்றை சமநிலைப்படுத்துவதே அவசியம்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை பற்றிய விபரங்களில் ஏராளமான குறைபாடுகள் இருந்தாலும்கூட, உண்மையில் பிரச்சினை இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையும் அதை அமுல்படுத்தும் முறையும் மட்டுமல்ல. இராஜதந்திரம் பல விடயங்களை செய்யக்கூடியதாக இருந்தாலும்கூட பெரும்பாலும் அது ஒரு சவாலான விடயம். ஆனால் அதனால் கள நிலைகளின் உண்மையை மாற்ற முடியாது. உண்மையில் இவற்றை அடிப்படையாக கொண்டே இராஜதந்திரம் உருவாக்கப்பட வேண்டும்.

டேவிட் கமரோனும் ஏனைய தலைவர்களும் தமிழ் புலம் பெயர்ந்தவர்களின் அழுத்தங்களுக்கு காலத்துக்கு காலம் தலை வணங்கலாம், ஆனால் அரசாங்கம் தவறைக் காட்டிலும் சரியானதின் பக்கமே அதிகம் சார்ந்துள்ளபோது, அவர்களால் இலங்கைக்கு எதிராக உலகத்தை திருப்ப முடியாது. இதைத்தான் போரின்போது ஜனாதிபதி அடைந்ததும், மற்றும் அவரது சிக்கல்கள் அவ்வப்போது இரத்து செய்யப்படும் பேச்சுக்களுக்கு அப்பால் செல்லக்கூடாது என்பதை அவர் உறுதிப் படுத்திக் கொள்ள விரும்பினால் திரும்பவும் செய்ய வேண்டியதும் ஆகும்.




# கடவுளே உனக்கு கருணையே இல்லையா?

– அதிஷா –

இந்த ஆண்டு தொடங்கியதிலிருந்தே யதார்த்த படங்களாக பார்த்து பார்த்து கண்ணு ரெண்டும் அவிஞ்சிபோச்சு.. விளிம்பு நிலை மக்களின் சொல்லப்படாத பக்கங்களை புரட்டி புரட்டி.. விரல்கள் பத்தும் வீங்கிபோச்சு. அழுக்கு முகங்களையும் இருட்டு மனிதர்களையும் இரத்தம் சொட்டும் அரிவாள்களையும் பார்த்து பார்த்து கிட்டத் தட்ட அரைமென்டலாகித்தான் அலைந்து கொண்டிருக்கிறோம். இதுமாதிரி நேரத்தில் கொஞ்சம் ரிலாக்ஸாக மூச்சுவிடவும் உழைச்ச களைப்பு தீரவும் வீங்கின நெஞ்சை ஆசுவாசப்படுத்திக் கொள்ளவும்... நாலு பாட்டு, அஞ்சு பைட்டு, நிறைய காமெடி, கொஞ்சம் ரொமான்ஸ், ஒரு கவர்ச்சி டான்ஸ் என நல்ல மசாலா படமொன்று வராதா என ஏங்கிக்கொண்டிருந்தோம்.

உன்னதமான ஆகச்சிறந்த மசாலா படம் வேண்டி பெருமாள் கோயிலுக்கு பொங்க வைத்து கடாவெட்டி பிரார்த்தித்தோம். தவமாய் தவமிருந்தோம். இந்த கடவுள் இருக்கிறாரே... கடவுள்.. கொஞ்சம் கூட கருணையேயில்லாதவர். முதலில் விக்ரம் வாழ்ந்த ராஜபாட்டையை நமக்கு பரிசளித்தார்.. அய்யோ அம்மா.. என்று கதறினோம்.. நம்முடைய குரல் கடவுளின் காதுகளை எட்டவேயில்லை. பிறகு சிம்பு நடித்த ஒஸ்தியை வழங்கினார்.. கடவுளே எங்கள விட்டுடு... தெரியாம கேட்டுட்டோம் என தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டோம்..

எங்களுக்கு மசாலாவும் வேண்டாம் மண்ணாங்கட்டியும் வேண்டாம் ஆளவுடு என கெஞ்சினோம்.. ஆனால் கொஞ்சம் கூட இதயத்தில் ஈவு இரக்கமேயில்லாத கடவுள் இதோ இப்போது சகுனியை கொடுத்திருக்கிறார்.. நாங்க என்ன பாவம் செஞ்சோம்.. கடவுளே... முடியல...

“மைநேம் இஸ் ரஜினி... ஐயாம் கமல்...” என மிரட்டலாக... ட்ரைலரிலேயே அடடே போட வைத்த சகுனி சென்ற வாரம் ரிலீஸானது. உதயம் தியேட்டரில் நுழையும் போதே ஒரே கூச்சல்... ஆரவாரம்... குத்தாட்டம்தான்... கும்மாளம்தான்... அடேங்கப்பா கார்த்திக்கு இவ்வளவு இரசிகர்களா என ஆச்சர்யகுறியை தலைக்குமேல் போட்டு உள்ளே நுழைந்தோம்.. படம் ஆரம்பித்து. பத்தே நிமிடங்கள்தான்... ஜஸ்ட் டென்மினிட்ஸ்... கூச்சலும் கும்மாளமும் அடங்கியது. ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா என்னும் பாடலுக்கேற்ப நாம் இருப்பது உதயம் தியேட்டரா அல்லது கண்ணம்மாபேட்டை சுடுகாடா என்கிற சந்தேகமே வந்துவிட்டது!

ஓக்கே திஸ் டைரக்டர் நமக்கு வேற ஏதோ வித்தியாசமான படம் காட்டப்போறார் போல.. நாமதான் வேற எதையோ எதிர்பார்த்து வந்துட்டோம்.. லெட் அஸ் கான் சென்ட்ரேட் ஆன் திஸ் மூவி என்று மும்முரமாக படத்தை பார்க்கத் தொடங்கினோம். கடவுள் சிரித்தார்!

தன் வீட்டை இடிக்கப் போகிறார்கள் என மந்திரியிடம் மனு கொண்டு போய் கொடுக்கிறார் ஹீரோ.. மந்திரி மனுவை வாங்கிக்கொள்கிறார்.. ஹீரோ மகிழ்ச்சியாக மந்திரிவீட்டு வாசலில் இருக்கிற தள்ளுவண்டி பஜ்ஜி கடையில் பஜ்ஜி சாப்பிடுகிறார்.. பஜ்ஜி ஆயிலை கசக்க பேப்பரை எடுத்தால் ஹீரோ கொடுத்த மனு! ஹீரோ அப்படியே ஷாக் ஆகிறார். வாவ் வாட் ஏ சீன்.. நூறாண்டு இந்திய சினிமா இப்படியொரு பிரமாதமான காட்சியைக் கண்டதுண்டா! இதுமாதிரி பல காட்சிகள் அடங்கிய அற்புதமான திரைப்படம்தான் சகுனி!

படத்தின் முதல் பாதி முழுக்க அப்பாவியாகவே திரிகிறார் ஹீரோ.. எலி ஏன் அப்படி திரியுது என்றால் இரண்டாம் பாதியில் முதலமைச்சரை எதிர்த்து சண்டை போடுகிறார்.



முதலமைச்சரே இவரை பார்த்து அஞ்சுகிறார். எதிர்க்கட்சி தலைவரை முதல்வராக்குகிறார். அதற்காக அவர் செய்யும் சகுனி வேலைகள்.. தமிழ்சினிமா காணாதது!

ஹீரோ கார்த்தி சிரிச்ச மூஞ்சியாகவே ஒரே ரியாக்சனுடம் படம் முழுக்க வருகிறார். விஜயை போலவே வளைந்து வளைந்து நடனமாடுகிறார்.. பஞ்ச் டயலாக் பேசுகிறார்! நல்ல வேளை இந்த படம் செம ஃ... இல்லாட்டி போன இன்னு... படத்திலாவது இதேமாதிரி டயலாக் பேசி டான்ஸ் ஆடி தாலியறுத்திருப்பார்! விஷா... பரத் வரிசையில் இந்த தள... இணைந்து நாட்டுக்கு நன்... செய்வார் என்பது தெரிகிற...


படமும் சரியல்லை.. ஹீ... சரியில்லை.. இயக்குநருக்கு போபியோவோ என்னவோ ராதிகா என சீரியல் ஆன்டி... வேறு அள்ளிக்கொண்டு வ... வைத்திருக்கிறார். ம்ம்.. என்... சொல்ல.. வில்லனாக பிரகா... இந்தப் படத்திலும் முட்டா... வாழ்கிறார். கத்துகிறார். ச... றார். டேய்.. என்கிற வார்த்... விதவிதமான மாடுலேஷன்... சொல்கிறார்.

இந்த உலகப்படம் பார்... ஜீவிகள்தான் மசாலா படம்... வனை முட்டாளாக நினைத்... விடுவதை இச்சமூகம் கண்... வரவர மசாலா பட இயக்கு... தன்னுடைய இரசிகனை மு... நினைக்கத் தொடங்கியிருப்... மசாலா பட இரசிகர்களை... கொள்ளச் செய்துள்ளது..

பைனலாக ஒன்றே ஒன்... கடவுளே உனக்கு கருணை... யா.. மொக்கை மசாலா பட... மிருந்து எங்களை காப்பாற்... யதார்த்தப் பட மொக்கைக... நாங்களே பார்த்துக் கொள்...

# மதுர பாவா!

- ஆர்.அபிலாஷ்


டி.வி பேட்டியின் போது முகமூடி கழற்றும் ஆர்த்தி ராவ்

ஆர்த்தி ராவ் என்கிற ஒரு நித்தியானந்தா சிஷ்யை அவருக்கு எதிராக திரும்பியிருப்பது நமக்குத் தெரியும் அவர் நித்தியானந்தா தன்னை பாலியல் ரீதியாய் பயன்படுத்தியதாக கூறியிருக்கிறார். நீங்கள் ஏன் அதை ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் அவர் "மதுர பாவா" எனும் ஒரு கருத்தாக்கத்தை வலியுறுத்தி என்னை ஈடுபட வைத்தார் என்கிறார். இந்த மதுரபாவா என்பது பக்தையை கடவுளின் காதலியாக சித்தரிக்கும் ஒரு கருத்தாக்கம். எல்லா உலக சமூகங்களிலும் இப்படியான கருத்தாக்கம் உள்ளது. கடவுளை குழந்தையாக, காதலனாக காண்பது இதில் பிரபலம். மீரா, ஆண்டாளில் இருந்து சமீபமாக ஏசுதாஸ் வரை இந்த மித்தை நீட்டித்திருக்கிறார்கள்.

சற்று உன்னிப்பாக பார்த்தால் இது ஒரு உருவகம் என்பது விளங்கும். இறைவன் எனும் பிரபஞ்ச உண்மையுடனான.'. நிலையுடனான உறவாடலை உக்கிரமாக சித்தரிக்க இந்த (காதல், தாய்-சேய்) உறவுநிலையை உருவகமாக பயன்படுத்தி இருக்கிறார்கள். ஒரு கருத்துநிலை இப்படி உருவகமாக மாறிய உடன் இந்தியர்கள் அதை மறைமுக கருத்து என்று மறந்து மித்தாக மாற்றி விடுவார்கள். அடுத்து இந்த மித்தை நேரடியாக உணர்வுரீதியாக நம்புவார்கள். குருவுக்கு தந்தை ஸ்தானம் கொடுப்பது, சாமியின் லௌகீக உருவான சாமியாரை கணவனாக வரிப்பது எல்லாம் இதன் விளைவுகள் தாம்.

நித்தியானந்தா போல ஒரு சாமியாரால் அமெரிக்காவில் எம்.டெக் படித்த ஒரு பெண்ணை எளிதில் இந்த மித்தை நேரடி உண்மையாக நம்ப வைக்க முடியும். ஆர்த்திராவ் ஒன்றும் முட்டாளோ பேதையோ அல்ல. அவள் பல்லாண்டு கால இந்திய மரபின் ஒரு பிரதிநிதி. அவள் அப்படி செயல்படுவதில் ஒன்றும் விநோதமில்லை. நித்தியானந்தா சமீபமாக தன் சந்நியாசினிகளை மீடியாவுக்கு பேட்டி கொடுக்க செய்தார். அப்போது ஒவ்வொருவரின் Phd, Btech போன்ற பட்டங்களை குறிப்பிடுவதில் கவனம் செலுத்தினார். தன்னை நம்புகிறார்கள் மெத்தப்படித்தவர்கள் ஆக தன்னை மறுக்கிறவர்கள் முட்டாள்கள் என்று காட்டுவதற்காக அவர் இதை செய்தாலும் இந்தியாவின் கல்விபெற்ற உயர்வர்க்க இளந்தலைமுறையினரின் சாயம் வெளுத்துப் போகவே அது பயன்பட்டது.

நித்தியானந்தாவிடம் மாட்டாமல் இருக்கும் பிற பெண்கள் கூட சந்தர்ப்பம் வாய்த்தால் பாலியலாக அல்லாவிட்டாலும் வேறு ஏதாவது ஒருவகை சுரண்டலுக்கு ஆளாகி விடுவார்கள். நமது மரபு பெண்களின் மிகப்பெரிய பலவீனம். குறிப்பாக இந்திய பெண்கள் கணவனுடனான உறவையே ஒரு மித்தின் நீட்சியாகத் தான் பார்க்கிறார்கள். கணவனின் தவறுகளை, அத்துமீறல்களை பொறுத்துக் கொள்ளும் பெண்கள் பாமரர்கள் அல்ல. நன்கு படித்த, மேற்தட்டை சேர்ந்த அநேகம்



பெண்கள் தாம் இப்படி அடிமைத்தனமாக நடந்து கொள்கிறார்கள். சமீபமாக ஒரு பிரபல தமிழ் பெண்ணியவாதி தன் கணவனால் கடுமையான (பெல்டால் விளாசுவது, சிகரெட் சூடுகள், கழுத்தை நெரிப்பது உள்ளிட்ட) உடல் வதைகளுக்கு உள்ளாகியும் அதை ஒரு மாதமாக பொறுத்துக் கொண்டு விட்டு தான் வெளியே வந்தார். ஏன் முதல் நாளே வெளியேற இல்லை? ஏனென்றால் கணவன் என்னதான் வதை செய்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பது இந்தியப் பெண்ணின் நனவிலியில் உள்ளது. அவள் தர்க்கரீதியாக அல்ல, தொன்மத்தின் மொழியில் சிந்திப்பவள். பெண்களை விமர்சிப்பதற்காக நான் இதை சொல்லவில்லை. நமது இந்திய மன-அமைப்பின் உதாரணமாகவே இவர்களைப் பார்க்கிறேன். இவர்கள் வேறெப்படியும் செயல்பட்டிருக்க முடியாது.

# கிண்டல் பரிசுகள்!

நெருங்கிய நண்பர்களின் திருமண நாள் கொண்டாட்டத்தில் பங்கேற்க சென்றால். அவர்களுக்கு பரிசளித்து. வாழ்த்து தெரிவிக்கும் நடைமுறை. பெரும்பாலான நாடுகளில் பின்பற்றப்படு கிறது. பரிசுப் பொருட்கள் என்றால். பெரும்பாலும், வீட்டில் பயன்படுத்தும் பொருட்கள். அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடிய பொருட்கள் போன்றவை தான். இடம் பெறும். ஆனால், சமீபகால மாக இங்கிலாந்தில். திருமண நாளை கொண்டாடுவோருக்கு. வித்தியாசமான பரிசுப் பொருளை கொடுத்து. அசத்த ஆரம்பித்துள்ளனர்.

திருமண நாள் கொண்டாட்டத்துக்கு வரும்போதே. பெரிய அட்டைப் பெட்டிகளில். வித்தியாசமான முறையில் வடிவமைக் கப்பட்ட கேக்குகளை எடுத்து வருகின்றனர். திருமண நாள் கொண்டாடும். தங்கள் நண்பர் அல்லது தோழியை. கிண்டலடிக் கும் விதமாக. அவர்களின் வாழ்க்கை முறையை





சித்தரிக்கும் வகையிலான கேக்குகளை வடிவமைத்து. அவற்றை பரிசாக கொடுத்து மகிழ்கின்றனர். மனைவி. கண வனின் சட்டைக் கொலரை பிடித்து இழுத்துச் செல்வது. தூண்டில் போட்டு இழுப்பது. காலில் கயிறு கட்டி இழுத்துச் செல்வது. கணவனின் காலில் விலங்கு பூட்டி. அதன் சாவியை. கையில் வைத்து. சுழற்றிக் கொண்டிருப்பது... இப்படி விதம் விதமாக உருவாக்கப்பட்ட கேக்குகளை பரிசளிக்கின்றனர்.

கிண்டலடிக்கும் வகை யிலான கேக்குகள் மட்டுமல்லாமல், கணவனும். மனைவியும். முத்தமிட்டுக் கொள்வது. இடுப்பில் அன்பாக கைபோட்டு அரவணைத்து செல்வது போன்ற. "ரொமான்டிக்" கான கேக்குகளும் உண்டு. அழகாக உருவாக்கப்பட்ட இந்த கேக்குகளை. "பிரிட்ஜ்"க்குள் வைத்துப் பாதுகாப்பர் என. நினைக்க வேண்டாம். பார்ட்டி முடிவடைவதற்குள். கேக்குகள் வயிற்றுக்குள் போய்விடும்.

# விடுதலைக்கான சூழல் உருவாகுவதை தடுப்பதற்கு வேலை செய்யும் சக்திகள்!

- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.

பிரதான பிரச்சினையாக இருப்பது, தமிழ் கைதிகளினதும் தடுப்புக் காவலில் உள்ளவர்களினதும் பிரச்சினைதான். நூற்றுக் கணக்கான தமிழர்கள் எல்.ரீ.ரீ.ஈ தொடர்பான குற்றங்கள் அல்லது புலிகளுடன் தொடர்புகள் வைத்திருந்தார்கள் என்கிற சந்தேகத்தின் பெயரில் சிறையில் வாடுகிறார்கள். அரசாங்கத்தை பொறுத்தவரை இவை யாவும் பயங்கரவாத குற்றங்கள் மற்றும் சிறையில் உள்ளவர்கள் யாவரும் பயங்கரவாத குற்றவாளிகள் அல்லது பயங்கரவாத சந்தேக நபர்கள். தமிழ் அரசியல் பிரசங்கத்தில் அவர்கள் யாவரும் அரசியல் கைதிகள். இந்த வித்தியாசத்தை பற்றிய ஒரு சொல்வழக்கு "ஒரு மனிதனுக்கு பயங்கரவாதியாக தெரிபவன் மற்றொரு மனிதனுக்கு விடுதலைப் போராளியாக தெரிவான்" என்றுள்ளது.

அத்தகைய கைதிகளின் மற்றும் தடுத்து வைத்துள்ளவர்கள் தொடர்பான எண்ணிக்கை நிலையானதாக இல்லாமால் ஏற்ற இறக்கத்துக்கு உட்பட்டதாக உள்ளன. எனினும் சமீபத்தைய கணக்கெடுப்பின்படி, 328 தண்டனைக் கைதிகளும் மற்றும் 638 சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டவர்களும் உள்ளனர். இதில் சிக்கலை ஏற்படுத்துவது யாதெனில், இவர்கள் யாவ ரும் இன்னமும் கம்பிகளின் பின்னே வாடும் அதேவேளை, மே 2009 இல் எல்.ரீ.ரீ.ஈ யின் தோல்வியை தொடர்ந்து சரணடைந்த முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ போராளிகள் 10,000 இற்கு மேற்பட்டவர்கள், ஒரு புனர்வாழ்வு நடவடிக்கையை மேற்கொண்டதன் பின்னர் விடுவிக்கப் பட்டுள்ளார்கள். பெரும்பாலான தமிழர்கள் மத்தியில் இந்த ஆட்கள் தண்டனை குறைப்பு வழியாகவோ, அல்லது பொது மன்னிப்பு வழங்கியோ அல்லது சட்ட நடவடிக்கைகளை விரைவு படுத்துவதன் மூலமாகவோ விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்கிற ஒரு பொதுவான உணர்வு உள்ளது.

இந்தப் பிரச்சினையை, ரி.என்.ஏ தலைவர் சம்பந்தனும் மற்றும் அதன் தேசிய பட்டியல் உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ சுமந்திரனும், பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை சில மாதங்களுக்கு முன்பு சந்தித்து கருணையின் அடிப்படையில் கனிவு காட்டுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர். நிலைமையை சாதகமாக மீளாய்வு செய்து திருப்திகரமான ஒரு தீர்வுக்கு வருவதற்கு பாதுகாப்பு செயலாளார் சம்மதம் தெரிவித்திருந்தார்.

எனினும் 234 தமிழ் தடுப்புக் காவல் கைதிகள் மே மாதம் நடத்திய ஒரு சாகும்வரையான உண்ணாவிரத போராட்டம் காரணமாக நிகழ்வுகள் ஒரு புதிய திருப்பம் பெற்றது. கடந்த காலங்களில் இந்த விடயம் தொடர்பாக . பல அடையாள அல்லது தொடர் உண்ணாவிரத போராட்டங்கள் இடம் பெற்றிருந்தன, ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் தீவிரமான விகிதத்தை எட்டியிருப்பதாக அனுமானிக்கப்பட்டது. கொழும்பு காவல் சிறையில் 179 பேரும், வவுனியாவில் 33 பேரும் களுத்துறையில் 22 பேரும் உண்ணாவிரத போரட்டத்தை ஆரம்பித்தார்கள். உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கு ஆதரவாக ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதத்தில் ரி.என்.ஏ யும் ஒரு அடையாள உண்ணாவிரதத்தை நடத்தியது.

இதற்கிடையில், குறிப்பிட்ட காலம் புனர்வாழ்வு வழங்கியதின் பின்னர் அவர்களை விடுதலை செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி அதிகாரிகள் ஆராயத் தொடங்கியிருந்தார்கள். இந்த எண்ணம் நியாயமானதாக இருந்தாலும், அது தொடர்பான செயற்பாடுகள் அதிகார வர்க்கத்தின் வழக்கமான சோம்பல் காரணமாக மிகவும் மந்த கதியிலேயே நடைபெற்று வருகிறது. பாதுகாப்பு செயலாளர், தானாகவே மறுவாழ்வு பெற முன்வரும் தடுப்புக் காவல் கைதிகளை விடுதலை செய்ய தான் பரிந்துரைப்பதாகத் தெரிவித்தார்.

பாதுகாப்பு செயுலாளர், தனது அனுமதியை வழங்கியது, தமிழினியை போன்ற ஏனைய தடுப்புக் காவல் கைதிகளையும் குற்றச்சாட்டுக்கு உட்படுத்தாது, மறுவாழ்வு பெற்றதின் பின்னர் விடுதலை செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு வசதிப்படும் வகையில்தான். இந்த தீர்மானத்தை பற்றி பல்வேறு சிறைக்கூடங்களிலுமுள்ள தடுப்புக் காவல் கைதிகளிடம் அந்தந்த சிறை கண்காணிப்பாளர்களால் தெரியப்படுத்தப்பட்டது. மறுவாழ்வு பெற விருப்பமுடையவர்கள் அதற்கான வேண்டுதல்களை எழுத்து மூலம் தெரிவிப்பதற்காக அவர்களிடம் கடிதம் எழுதுவதற்காக வெற்றுத்தாள்கள் கையளிக்கப்பட்டன. தடுப்புக் காவல் கைதிகள் அந்த வாய்ப்பை மகிழ்வுடன் பற்றிக் கொண்டனர். பனிமுகடு போல காகிதக் கூட்டம் உருவாகியது.

வருந்தத் தக்க வகையில் புனர் வாழ்வின் பின் விடுதலை செய்யும் திட்டம் வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற கிளர்ச்சியினை தொடர்ந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு செயலாளரின் குறிப்பிடத்தக்க தீர்மானத்தினால் சாதகமான சூழ்நிலை உருவாகி வருவதை தடுப்பதற்காகவும் தடுப்புக் காவல் கைதிகளின் விடுதலை திட்டம் முன்னேற்றமடைவதை கெடுப்பதற்காகவும் சில தீய சக்திகள் வேலை செய்து வருகின்றன. வவுனியா சம்பவத்தை தொடர்ந்து நிலமைகளை மீளாய்வு செய்யும் அவசியத்தை உணரும் அதேவேளை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவிருந்த கருணைக் கொள்கையை தொடர்ந்தும் முன்னெடுக்கும்படி இந்தப் பத்தி வலியுறுத்துகிறது. வவுனியா சம்பவத்துக்கு பொறுப்பானவர்களை தண்டிக்க முடியும் ஆனால் வவுனியாவிலும் ஏனைய இடங்களிலும் இருந்த மற்றவர்கள் இந்தச் சம்பவத்துடன் எதுவித தொடர்பையும் கொண்டிராதவர்கள், அதனால் மறுவாழ்வின் பின்னர் விடுதலை பெறும் வாய்ப்பு அவர்களுக்கு மறுக்கப்படக் கூடாது.

ந்த படம் செம ஃப்ளாப்!
டி போன இன்னும் பத்து
வது இதேமாதிரி பஞ்ச்
பேசி டான்ஸ் ஆடி நம்மை
ந்திருப்பார்! விஷால்,
செயில் இந்த தளபதியும்
நாட்டுக்கு நன்மை
என்பது தெரிகிறது.
ம் சரியல்லை.. ஹீரோயினும்
.. இயக்குநருக்கு ஆன்ட்டி
ாவோ என்னவோ ரோஜா,
ன சீரியல் ஆன்டிகளை
ளிக்கொண்டு வந்து நடிக்க
கிறார். ம்ம்.. என்னத்த
வில்லனாக பிரகாஷ்ராஜ்
த்திலும் முட்டாளாகவே
. கத்துகிறார். சவால் விடுகி
.. என்கிற வார்த்தையை
ன மாடுலேஷன்களில்
ர்.
லகப்படம் பார்க்கிற அறிவு
ன் மசாலா படம் பார்க்கிற
ளாக நினைத்து பீட்டர்
இச்சமூகம் கண்டிருக்கிறது..
லா பட இயக்குநர்களே
ய இரசிகனை முட்டாளாக
தொடங்கியிருப்பது
இரசிகர்களை வெறி
செய்துள்ளது..
ாக ஒன்றே ஒன்றுதான்..
னக்கு கருணையே இல்லை
கை மசாலா படங்களிட
களை காப்பாற்று,
பட மொக்கைகளை
ார்த்துக் கொள்கிறோம்!




01) திருமணத்தின் போது தேசிய கீதம் பாடப்படும் நாடு எது?

(......................................................)

02) உலகில் முதல் பிரபஞ்சப் பேரழகிப் போட்டி நடைபெற்ற நாடு எது?

(......................................................)

03) மனதிற்கு மகிழ்ச்சியை அளித்து ஊக்கமூட்டும் நிறங்கள் எவை?

(......................................................)

04) வருடம் தோறும் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் நாடு எது?

(......................................................)

05) வருடம் தோறும் பூமியில் புதைந்து வரும் நாடு எது?

(......................................................)

06) உலகில் அதிகமான மக்களால் உடனுக்குடன் தயாரித்துச் சாப்பிடும் உணவு எது?

(......................................................)

07) உலக மக்கள் அமைதியாக வாழ்வதற்கு சிறந்த நாடு எது?

(......................................................)

08) உலகில் தட்டையான சம தளமான நாடு எது?

(......................................................)

09) தினசரிப் பத்திரிகைகள் இல்லாத படிக்கத் தெரியாத மக்கள் உள்ள நாடு எது?

(......................................................)

10) கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை அறிமுகப்படுத்திய நாடு எது?

(......................................................)

கீழே கேட்கப்படும் வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இங்கு தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களில் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் 1 தொடக்கம் 9 வரையான எண்பெறுமானம் வழங்கப்பட்டுள்ளது. அந்த எண் பெறுமானங்களின் கூட்டுத் தொகைகள் நிரையாகவும் நிரலாகவும் தரப்பட்டுள்ளன. அவற்றை பரிசீலித்து ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைப் பெறுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | C T | O | R | S | | 32 |
| A | T T | E | S | T | | 31 |
| S | E | A | S | O | N | 29 |
| C | E | N | T | E | R | 20 |
| R | O | S | T | E | R | 34 |
| S | A | L | O | O | N | 34 |
| 33 | 19 | 36 | 31 | 27 | 34 | |

இங்கு E = 1, T = 6, 5 = 8

01) L இன் பெறுமானம் யாது? (..............................)

02) A இன் பெறுமானம் யாது? (..............................)


03) C இன் பெறுமானம் யாது? (..............................)

04) O இன் பெறுமானம் யாது? (..............................)

05) R இன் பெறுமானம் யாது? (..............................)

06) N இன் பெறுமானம் யாது? (..............................)

கிழேயுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் கீழே தரப்பட்டுள்ள 1,2,3,4,5 எனும் வரிப்படங்களை அடிப்படையாகக் கொண்டவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புக்கு பொருத்தமான வரிப்படத்தை தெரிந்தெடுத்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை புள்ளிக் கோட்டின் மீது இடுக.




1.) பாடசாலை பிள்ளைகள் - பெண் பாடசாலைப்பிள்ளைகள்- ஆண் பாடசாலைப் பிள்ளைகள் (......................)

2) மாகாணசபை - மாகாண அமைச்சு- குடிவரவு-குடியகல்வு திணைக்களம் (......................)

3) கமரா -சைக்கிள் - சஞ்சிகை (......................)

4) கிலோ மீற்றர் - மீற்றர் - மில்லி மீற்றர் (......................)

5) எழுதுநர்கள் - ஆசிரியர்கள் - பட்டதாரிகள் (......................)

* கீழே உள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள எண் பெறுமானங்களுக்கிடையே உள்ள தொடர்புடைமைகளை விளங்கிக் கொண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 27 | 19 | 82 | (2) | 4 | 26 | 6 |
| | 23 | 14 | 16 | | 7 | 65 | 9 |
| | 92 | 21 | 28 | | 3 | 17 | 5 |
| | 43 | ---- | 56 | | 11 | ---- | 13 |
| (3) | 8 | 75 | 7 | (4) | 39 | 34 | 12 |
| | 9 | 65 | 4 | | 42 | 40 | 18 |
| | 2 | 55 | 9 | | 21 | 38 | 36 |
| | 6 | ---- | 5 | | 54 | ---- | 81 |
| (5) | 30 | 8 | 18 | (6) | 14 | 15 | 12 |
| | 12 | 11 | 54 | | 18 | 81 | 27 |
| | 42 | 12 | 30 | | 26 | 40 | 32 |
| | 29 | ---- | 13 | | 81 | ---- | 24 |

**மாணவர் விபரம்**

மாணவர் முழுப்பெயர்:-..........................................

பாடசாலையின் பெயர்:-..........................................

தரம் :-..........................................

தொலைபேசி எண் :-..........................................

முகவரி :-..........................................

மேற்படி புதிருக்கான விடைகளை இதேதாளில் எழுதி இப்பக்கத்தை கடித உறையினுள் இட்டு தங்களுடைய புகைப்படத்தினையும் இணைத்து எதிர்வரும் 19.07.2012இற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும் அதிக புள்ளிகளைப் பெற்ற திறமை சாலிகள் மூவரின் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் கூடிய தடவை அதி உயர்ந்த புள்ளிகளைப் பெற்ற மூவருக்கு காரியாலயத்தில் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:- புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல.373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு:-

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்தில் உள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியில் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் பேடலாம். K.K.S வீதியில் உள்ள தினமுரசு விளம்பர பணிமனையில் உள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம்.

# சுண்டுக்குழி விதானையார் வீதி யாழ்.மாநகர சபையால் புனரமைப்பு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் மநாகர சபைக்குட்பட்ட விதானையார் வீதி பலகாலமாக திருத்தப்படாமல் நீர் தேங்கியிருக்கும் இடமாகவும், குன்றும் குழியுமாக காணப்படுவதனை யாழ். மாநகர முதல்வர் திருமதி பற்குணராசாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து இவ் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியின் முக்கியத் துவத்தினைக் கருத்தில் கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புக்கிணங்க யாழ்.மாநகர சபையினால் முதல்வரின் நேரடிக் கண்காணிப்பில் செப்பனிடப்பட்டுள்ளது.

இவ்வீதியானது செப்பனிடப்பட்டதன் சிறப்பு அம்சமாக பத்துக்கும் மேற்பட்ட குறுக்கு ஒழுங்கைகளைக் கொண்ட இவ்வீதியின் சகல குறுக்கு ஒழுங்கைகளும் கிரவல் மண் இடப்பட்டு உயர்த்தப்பட்டு தார் வீதிகளாக ஆக்கப்பட்டுள்ளமையினைக்காண முடிகின்றது.

இவ்வாறு இவ்வீதியினை செப்பனிட்டு தந்தமைக்கு நன்றி தெரிவித்த இக்கிராம மக்கள் இதேபோல் ஈச்ச மோட்டை கிராமத்தையும், கொய்யாத் தோட்டம் கிராமத்தினையும் இணைக்கும் வீதியினையும் செப்பனிட்டு தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியானது தற்பொழுது மக்கள் குடியிருப்புக்களினை புதிதாக அமைக்கும் இடமாக காணப்படுவதுடன் இந்து சமய ஆலயம்,கிறிஸ்தவ ஆலயம் மற்றும் இப்பகுதி வைத்திய தேவையை பூர்த்தி செய்யும் திருக்குடும்ப கன்னியர் மடம் வைத்தியசாலைக்குச் செல்லும் பாதையாகவும் காணப்படுவதால் ஈச்சமோட்டை, கொய்யாத் தோட்டம் மக்களின் நீண்டகால தேவையாக உள்ள இவ்வீதியினையும், செப்பனிடப்பட்டுத் தருமாறு மக்கள் யாழ். மாநகர சபையினை கோரியுள்ளனர். (42)

# ஆரிய குளப்பகுதியில் சூடுபிடிக்கும் சோளம் அன்னாசி விற்பனை

(கிரு-சிகரம்)



தற்போது யாழ்ப்பாணத்தில் சோளம அன்னாசிப் பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் ஏராளமான சோளம் மற்றும் அன்னாசி விற்பனையானதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

சோளம் விற்ப்னையில் ஈடுபட்டிந்த மதவாச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், தற்போது மதவாச்சி பிரதேசத்தில் அதிகளவான சோளம் அறுவடை செய்யப்படுவதாகவும், யாழ்ப்பாணத்தில் இவற்றுக்கு அதிகம் மவுசு காணப்படுவதால் அங்கிருந்து தாம் கொண்டு வந்து விற்பனை செய்வதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, தாம் கொண்டுவரும் சோளத்தினை யாழ்ப்பாண மக்களுக்கு மிகக்குறைந்த விலையில் விற்பதாகவும், 100 ரூபாவிற்கு 15 சோளப் பொத்திகள் கொடுப்பதாகவும் குறிப்பிட்ட அவர், தான் மட்டுல்ல தன்னைப் போன்று பல் வேறு வியாபாரிகள் இந்த சோளம் விற்பனையில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன், இந்த ஆரியகுளம் சந்தியில் அன்னாசி மற்றும் இளநீர் விற்பனையும் நடைபெறுகிறது. கொழும்பில் இருந்து கொண்டு வரப்படுகின்ற அன்னாசி ஒன்று 50 ரூபா, 60ரூபா, 100ரூபா என பல விலைகளில் விற்பனை செய்யப படுவதுடன், மதவாச்சியிலிருந்து கொண்டுவரப்படும் இளநீர் ஒன்று 30 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.பலர் இவற்றைக் கொள்வனவு செய்து செல்கின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது.

# சர்வதேச பல்கலைக்கழக பட்டங்களை வழங்கும் INTI

(சிகரம்)



ஐக்கிய இராச்சியம், அவுஸ்ரேலியா, அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் முன்னணி வகிக்கும் 25 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக பட்டக்கல்வியை வழங்கும் மலேசியாவின் பிரசித்தமான சர்வதேச பல்கலைக்கழகமே INTI மலேசியாவில் கல்வி கற்கும் சுமார் 80,000 வரையிலான சர்வதேச மாணவர்களில் 2,000க்கும் மேற்பட்டவர்கள் INTIயின் மாணவர்களாவர்.

சர்வதேச அளவில் பரந்தளவிலான பல்கலைக்கழகங்களை ஒன்றிணைக்கும் வலைப்பின்னலான Laureate International niversities (LIU)க்கு இதுவும் இணைந்திருப்பதால் , INTIயில் கல்வி கற்பவர்கள் ,உலகளாவிய இந்தப் பரந்த பல்கலைக்கழக வலைப்பின்னலின் நன்மைகளையும் அனுபவிக்க முடியும்.

வடஅமெரிக்கா,இலத்தீன் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியக்கண்டங்களை உள்ளடக்கி,உலகளவில் 25இற்கும் மேற்பட்ட நாடுகளில்,50இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் அங்கீகாரம் பெற்ற LIU வலைப் பின்னலின் கீழ்,6 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்ட,மேற்படிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.இநதப் பரந்த வலைப்பின்னலின் கீழ் கலை,வர்த்தகம்,பொறியியல்,தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், சட்டம், ஹோட்டல் முகாமைத்துவம் உள்ளிட்ட துறைகளில் 130 இற்கும் அதிகமான கற்கைநெறிகள் போதிக்கப்படுகின்றன.

போட்டி மிகுந்த தொழில் சந்தையில் இலகுவாகத் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையிலேயே INTIயின் அனைத்துக் கற்கைநெறிகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக,சர்வதேச கம்பனிகளின் உதவியுடன் தொழிலொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டத்தையும் கற்கைநெறியுடனேயே அது மாணவர்களுக்காக இணைத்துள்ளது.

INTIயில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகக் கற்கைநெறி ஒன்றைத் தொடரும் மாணவர்கள் தமது ஒரு செமெஸ்டரை குறிப்பிட்ட பல்கலைக்கழகம் அமைந்துள்ள நாட்டிலேயே தொடர்வதற்கான வசதியை INTIவழங்குகிறது.

இதன்மூலம்,தான் கற்கைநெறியைத் தொடரும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தின் நேரடி அனுபவத்தையும் மாணவரொருவர் பெற்றுக் கொள்ள முடிகிறது.மாணவர்கள் விரும்பின் குறிப்பிட்ட நாட்டின் பல்கலைக்கழகத்துக்கே தமது கற்கைநெறியை மாற்றலாக்கிச் செல்லவும் முடியும்.

இங்கே கல்வி கற்கும்மாணவரொருவர் ஐக்கிய இராச்சியம்,அவுஸ்ரேலியா,அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலுள்ள பல்கலைக்கழகத்துக்கு மாற்றலாக்கிச் செல்ல விரும்பின்,அதற்கான உதவிகளை வழங்குவதற்கென பிரத்தியேகமான அலுவலகம் INTIயில் உண்டு.மாணவர்கள் தங்கியிருந்து கற்பதற்கான தங்குமிட வசதிகளும் இங்கே வழங்கப்படுகிறது.

# மெய்தான் பாருங்கோ...

## இப்படியும் பெற்றோர்கள்



மனிதருடைய வாழ்க்கையில் பல அடிப்படைத் தேவைகள் இருக்குது பாருங்கோ இத் தேவைகளை ஈடுசெய்யாமல் மனிதன் வாழேலாது எண்டது உண்மை தான். தமது அத்தியாவசியதேவைகளைப் பூர்த்தி பண்ணுறதுக்காக எந்த வழியையும் கையாளலாம். எண்டு செயற்படுகிற செயல்களைத் தான் பிழை எண்டு சொல்லுறன்.

உணவு உட்பட்ட அத்தியாவசிய தேவைகளைப்பூர்த்தி பண்ணுறதுக்குப் பணம் இல்லையெண்டால் காதிலை கழுத்திலை கிடக்கிறதுகளை விற்றோ அல்லாட்டில் அடைவு வைத்தோ காசைப் பெற்றுச் செலவழிக்கலாம். இல்லாவிட்டால் நியாயமான வழியிலை உழைச்சுப் பணத்தைத் தேடலாம் அப்படியில்லாமல் ஒரு நல்ல நோக்கத்திற்காக ஒருவர் அன்பளிக்கிறதை நாங்கள் எங்கடை தேவைக்காக விற்றுச் செலவு செய்தல் எவ்வளவுக்குச் சரி எண்டது கேள்விக்குறியோடை நிமிர்ந்து நிக்குதெல்லே.

அன்பளிப்புகளும் தான தர்மங்களும் தனியாள் செய்தால் என்ன ஒரு தொகுதி மக்கள் செய்தால் என்ன அல்லாட்டில் ஒரு நாடு இன்னொரு நாட்டிற்குச் செய்தால் என்ன அந்தச் செயலுக்கு வலுவான ஒரு நோக்கம் இருக்குமல்லே. நோக்கம் இல்லாமல் செயல் ஏதும் இல்லை எண்டது பெரிய உண்மைதானே. இப்பிடி நல்ல நோக்கத்தோடை செய்யப்படுகின்றவற்றின் உயர்ந்த தன்மையை நாங்கள் துஷ்பிரயோகம் செய்யலாமே!

எங்கடை நாடு உலகிலை பெரிய பணக்கார நாடே? இல்லை எங்கடை அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய இயலாமல் மிகவும் கஷ்டப்படுகிற சனங்கள் வாழுற நாடு. ம்க்கள் மத்தியிலும் குறிப்பாய் இளஞ் சிறார்கள் மத்தியிலும் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துகள் போதியளவு கிடையாமல் நல்ல வளர்ச்சி பெறுவதற்கு இயலாமல் இருக்கிறதைப் பார்க்கிறமல்லே! இதுகளைக் கருத்திலை கொண்டு எங்கடை பாடசாலைப் பிள்ளையளுக்கு எண்டு பேரீச்சம் பழங்களை மத்திய கிழக்கு நாடொன்று வழங்குது.

இப்ப பாடசாலைகளிலை ஒரு மாணவனுக்கு மாதம் இரண்டு கிலோப்படி பேரீச்சம்பழம் வழங்கப்படுகுது. இது எல்லாரும் அறிஞ்ச விசயம். மாணவர்களுக்குத் தேவையான இரும்புச்சத்தை அவர்கள் பெற்றுக்கொள்வதற்காக இலவசமாக வழங்கப்படும் இப் பேரீச்சம்பழம் 600 ரூபா வரையில் பெறுமதி வாய்ந்தது. இப்படி வழங்கப்படும் பேரீச்சம்பழத்தை வீட்டிற்குக்கொண்டு செல்லும் மாணவர்கள் எல்லோருக்கும் அது வீடுகளில் உண்ண வழங்கப்படுகுதா எண்டால் அது இல்லை. இப் பேரீச்சம் பழங்களைப் பல பெற்றோர் வாங்கிக் கடையளுக்கு விக்கினம். ஒரு பைக்கட் பேரீச்சம்பழம் 300ரூபா தொடக்கம் 400 ரூபா வரை கொடுத்து வியாபாரிகள் வாங்குகிறார்கள்.

இப்படி தனது பிள்ளைக்குக் கொடுக்கப்பட்ட பேரீச்சம் பழத்தை விற்பனை செய்த ஒரு தாயிடம் விசாரித்த போது வீட்டிலே நாலைந்து பேர் பட்டினியாய்க் கிடக்கேக்கை பேரீச்சம் பழத்தை உணவாக உண்ண முடியுமா, அதாலைதான் இதை வித்துப்போட்டு சமைக்கிறதுக்கு அரிசி சாமான் வேண்டுகிறேன் என்றார். அந்தத் தாயின் பதிலிலும் நிறைய மனிதாபிமானம் இருக்கிறது. மறுப்பதற்கில்லை. தனது குடும்பத்திற்கான அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்தி பண்ணுவதற்கு வகையறியாத அந்த ஏழைத்தாயின் செயலிலும் நியாயம் உள்ளது தான்.

ஆனால் இதேவேளை மது அருந்தி தனது குடும்பத்தைக் கவனியாது தறிகெட்டு வாழுகின்ற ஒரு தந்தை இப் பேரீச்சம் பழத்தை விற்று அதிற் கிடைத்தபணத்தைக் கொண்டு தனது மதுத் தேவையைப் பூர்த்தி செய்வது எந்த வகையில் நியாயமானது? பாடசாலையில் அரசாங்கம் மாணவனுக்கு அன்பளிப்பாக அவனது உடற் தேவைக்குரிய இரும்புச் சத்தைப் பெறுவதற்கு என வழங்கிய பேரீச்சம் பழத்தை குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் ஏற்காத இழிவான மது அருந்தும் செயலுக்குப் பயன்படுத்திய ஒரு தகப்பனால் பேரீச்சம் பழத்தைப் பார்த்த திருப்தியோடு தன்னை ஆசுவாசப்படுத்தி தன் உள ஆசையை அடக்கி வாழ முயலும் மாணவ சமூதாயத்தினை என்ன சொல்வது? என்று தீருமோ இந்த இழிவு

- ரிஷிகர்.

# விவசாயிகளிடமிருந்து கடன் அறவீடு இடைநிறுத்த ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

விவசாயிகளிடமிருந்து கடன் அறவீடு செய்யும் நடவடிக்கையை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் நிலவி வரும் வரட்சி நிலைமை காரணமாக இந்தத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி விவசாய நோக்கத்திற்காக பெற்றுக் கொள் ளப்பட்ட வங்கிக் கடன்களைஅறவீடு செய்யும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட உள்ளது.

அநுராதபுரம், பொலனறுவை உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் வரட்சிகாரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வரட்சி நிலைமை குறித்து கவனம் செலுத்தி நாள் தோறும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்

# 29 மில்லியன் புத்தகங்கள் 2013 இல் அச்சிடப்படும்

(கொழும்பு)

2013 ஆம் ஆண்டுக்குத் தேவையான பாடசாலைப் புத்தகங்கள் அச்சிடவென அமைச்சரவை அனுமதியுடன் 18 அச்சகங்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் ஆலோசனைக்கு அமைய 29 மில்லியன் புத்தகங்கள் அச்சிடப்படவுள்ளன.

அடுத்த வருடத்திற்கான பாடசாலைப் புத்தகங்கள் இவ்வருடம் டிசம்பர் மாத இறுதியில் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

இதற்கென 1500 மில்லியன் செலவிடப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது

# கல்லூரி கண்ணாடிகள் சேதம் பொலிஸார் விசாரணை

வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக் கட்டடத்தின் கண்ணாடிகள் மற்றும் வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகள் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த புதன்கிழமை நடைபெறவிருந்த உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்று கூடலுக்கான ஏற்பாடுகளை மாணவர்களும் ஆசிரியர்களும் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், மறுநாள் பாடசாலையின் அதிபர் பாடசாலைக்குச் சென்றிருந்தபோது இப்பாடசாலையின் கணினி அறையின் கண்ணாடிகளும் வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகளும் இனந்தெரியாதோரினால் சேதமாக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிமனைக்கு அறிவித்ததுடன், வவுனியா பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்தார்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் சிலர் மீது சந்தேகமுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

# வெளிநாடு செல்லவுள்ள பணியாளர்களுக்கு பயிற்சி

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் இலங்கை பணியாளர்களுக்கு விசேட பயிற்சி வழங்கும் நோக்கில் மாவட்ட ரீதியில் பயிற்சி வள மத்திய நிலையங்களை அமைக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்பேணல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

வருடத்தில் 2,65,000 பேர் வெளிநாட்டு வேலைக்காக செல்வதோடு அதில் 1,13,000 பேர் வீட்டு வேலைக்குச் செல்கின்றனர்.

இவர்களுக்கு வெளிநாட்டில் சென்று வீடுகளில் பணிபுரியும் விதம் மற்றும் மொழி குறித்து பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இவ்வாறான மத்திய நிலையமொன்று தங்காலையில் தற்போது அமைக்கப்பட்டு வரும் நிலையில் இரத்தினபுரியில் அடுத்த மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ளது.

200 பெண்கள் தங்கியிருந்து பயிற்சி பெறும் வசதிகளுடன் இந்தப் பயிற்சி வள மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது




**வீதி புனரமைப்புப் பணிகள் இடம்பெறும் பகுதிகளில் அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் வீதிக் கண்காணிப்பாளர்களின் அசமந்தமும் வாகனச் சாரதிகளின் அசமந்தமும் இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

**நேற்றுக் காலை 8 மணியளவில் பிரதான வீதியில் இவ்வாறான வீதி விபத்தொன்று இடம்பெற்ற வேளை மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உட்பட இருவர் மயிரிழையில் உயிர்தப்பியமை குறிப்பிடத்தக்கது.**

# வலிகாமம் கல்வி வலய ஆங்கில தினப் போட்டிகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர் களுக்கிடையே ஆங்கில மொழித்தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வலயக் கல்விப் பணிமனையால் அறிவிக்கப் பட்டுள்ளது.

மாணவர்களின் ஆங்கில மொழிவிருத்தியை மேம்படுத்தும் பொருட்டு பதினாறு வகைப் போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன. இதில் முதன் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**எழுத்துப் போட்டி முடிவுகள்**

தரம் 3

ச.வைஷ்ணவி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), த.தரணிகா (டாக்டர் தங்கம்மா அப்பாக்குட்டி), வ.சிவாகர் (உடுவில் மத்திய கல்லூரி).

தரம் - 4

ப.அனுஷை (உடுவில் மகளிர் கல்லூரி), சி.சோபிகா (டாக்டர் தங்கம்மா அப்பாக்குட்டி), சி.திவ்யா (அளவெட்டி தெற்கு றோ.க).

தரம் - 5

அ.செளமியா (உடுவில் மகளிர் கல்லூரி), வி.ஜெனனிகா (அருணோதயா கல்லூரி), ப.கிஷானி (அகியசங்க சைவ விததி).

தரம் - 6

அ.கீதாராணி (யாழ்ப்பாணக் கல்லூரி), ஈ.செளமயா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ரா.மதுர்ஜா (ஸ்கந்தவரோதயா கல்லூரி).

தரம் - 7

ர.சைலஜா (யாழ்ப்பாணக் கல்லூரி), மு.நிதுலா (உடுவில் மகளிர் கல்லூரி), வே.லதீபா (மகாஜனக் கல்லூரி).

தரம் - 8

பி.கோபிகா (யாழ்ப்பாணக் கல்லூரி), ஜெ.ஜெனிஸ்ரிகா (உடுவில் முருகமூர்த்தி வித்தி), பி.வக்ஷாயினி (யாழ்ப்பாணக் கல்லூரி). இ.யோகிதா (உடுவில் மகளிர் கல்லூரி)

தரம் - 9

க.யசோதா (விக்ரோறியாக் கல்லூரி), ஸ்.சேகரன் (அருணோதயாக் கல்லூரி), பா.கம்ஷியா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ர.டிஸ்மி (உடுவில் முருகமூர்த்தி வித்தி).

தரம் - 10

பெ.சுரேகா (இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), யோ.ஜிந்துஜா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), க.சஞ்சீவன் (ஸ்கந்தவ ரோதயா கல்லூரி).

தரம் - 11

இ.திவ்யா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஞா.லாவன்யா (விக்ரோறியாக் கல்லூரி), சி.அபிராமி (உடுவில் மகளிர் கல்லூரி).

தரம் -12

க.கசிந்தினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ச.அனுஷா (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), பா.இளங்கீதா (அருணோதயாக் கல்லூரி).

தரம் -13

ஜெ.பிறினியா (யூனியன் கல்லூரி), செ.ஆர்த்திகா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), க.தவலட்சியா (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை).

(தொடரும்.......)

# தனியார் ஊழியர் ஓய்வூதியம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

தனியார் ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்று இவ்வருடம் செப்ரெம்பர் மாதம், தனிநபர் சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என ஜே.வி.பியுடன் இணைந்துள்ள அனைத்து கம்பனி ஊழியர்கள் சங்கம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

இந்தச் சங்கம் நியமித்த நிபுணர்கள் குழுவினால் வரையப்பட்ட இந்த ஓய்வூதியத் திட்டமானது ஊழியர்கள் மற்றும் தொழில்தருநர்கள் ஆகிய இரு தரப்பினரும் பங்களிப்புச் செய்யும் முறையில் அமைந்ததாகும்.

அரசாங்கம் முன்னர் கொண்டுவந்த ஓய்வூதியத் திட்டத்தை தனியார்துறை ஊழியுர்கள் எதிர்த்திருந்தனர். தொழிலாளர்கள் இளைப்பாறும்போது கிடைக்கும் ஊழியர் சேமலாப நிதியை அரசாங்கம் எடுத்துக்கொள்வதை மறைப்பதற்கான ஒரு வழியாகவே அரசாங்கம் அந்த ஓய்வூதியத் திட்டத்தை கொண்டு வந்தது என அனைத்து கம்பனி ஊழியர்கள் சங்கத்தின் தலைவரான வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் பெரும்பான்மையான தொழிலாளர்கள் தனியார் துறையிலேயே காணப்படுகின்றனர். இப்போதே வாழ்க்கைச் செலவு தாங்க முடியாததாக உள்ளபோது, இளைப்பாறிய பின் அவர்கள் வாழ்வது எப்படி என சமரசிங்க கேள்வி எழுப்பினார்.

# பாதுகாப்பற்றவர்களாக 90 ஆயிரம் சிறார்கள்

(கொழும்பு)

பல்வேறு காரணங்களினால் 90,000 சிறுவர், சிறுமியர் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக சிறுவர் நலன்புரி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்மூலம் தெரிய வந்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ளதாக சிறுவர் நலன்புரி திணைக்கள ஆணையாளர் நாயகம் யமுனா பெரேரா தெரிவித்துள்ளார்.

அறியாமையினாலேயே இவர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகியுள்ளதாகவும் இவர்களுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் யமுனா பெரேரா தெரிவித்துள்ளார்.

பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகியுள்ள சிறுமிகளின் உளவளத்தை மேம்படுத்த பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper
கல்வி முரசு
Grade - 13
அளவையியலும் விஞ்ஞான முறையும்
02 T II
நேரம் : 2 மணி
ஆசிரியர் : M.W.காண்டீபன்

(தொடர்ச்சி....)

**சி.வி. இராமன் (1888 -1970)**

- இவர் உலகப் பிரசித்தி பெற்ற இந்திய பௌதீகவியலறிஞர்.
- அணுக்களைப் பற்றியும் ஒளியைப் பற்றியும் ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டறிந்தார்.
- இராமன் விளைவு என்பதனைக் கண்டு பிடித்தார். ஒளியை புகவிடக்கூடிய திண்ம அல்லது திரவ வாயு ஊடகத்தின் ஊடாக ஒளியைச் செலுத்தும் போது அது சிதறலடைந்து அவற்றின் அலை நீளம், அதிர்வெண் என்பவற்றில் மாற்றமேற்படுகின்றது. இம்மாற்றமே இராமன் விளைவு எனப்படுகின்றது.
- பௌதீகவியலில் மேற்கொண்ட ஆய்வுகளுக்காக நோபல் பரிசு பெற்றவர்.
- கடல் நீர் ஏன் நீலநிறமாக தோன்ற வேண்டும் என்பதற்கான காரணங்களை பரிசோதனை மூலம் நிறுவிக்காட்டினார். இதேபோன்று கனடா சென்றபோது மனிமலைகள் பச்சையும் நீலமும் கலந்த நிறத்தைத் தோற்றுவிப்பதற்கு சூரிய ஒளியைக் காரணம் எனக் குறிப்பிட்டார்.
- இவர் இந்திய நாட்டைச் சேர்ந்த தத்துவவாதியாவர்.
- இந்திய தத்துவமான கீழைத்தேச சிந்தனை முறையில் இவரது பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.
- வேதாந்த தத்துவத்தின் அடிப்படையில் மனித வாழ்க்கையை நெறிப்படுத்தும் தத்துவங்களை ஒழுக்க எண்ணக்கருக்களுடன் விளக்கினார்.

**கெப்லர் / கெப்லரின் வழி (1571 -1630)**

- ஜேர்மன் தேசத்தைச் சேர்ந்த வானியல் அறிஞராவார்.
- சூரியனைப் பற்றியும் ஏனைய கோள்களைப் பற்றியும் நன்கு ஆராய்ந்து வானிலை துறையில் விதிகளை உருவாக்கினார். அண்டத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் இயக்கத்துக்கு உள்ளாக வேண்டும் எனக் குறிப்பிட்டார். கெப்லரின் விதிகளில் முக்கியமானது மூன்று ஆகும். அவை வருமாறு:

**நீள் வளைய விதி**
கோள்கள் யாவும் சூரியனைச் சுற்றி நீள்வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன என்பதே இவ்விதியின் பொருளாகும்.

**பரப்பு விதி**
கோள்கள் யாவும் சூரியனை அண்மிக்கும் போது ஓட்டவேகம் அதிகரிக்கின்றது. சூரியனை விட்டு விலகிச் செல்லும் போது ஓட்டவேகம் குறைந்து செல்கின்றது.

**இசைவு விதி**
ஒரு கோள் சூரியனைச் சுற்றி வர எடுக்கும் நேரமானது சூரியனுக்கும் அக்கோளுக்கும் இடைப்பட்ட தூரத்தில் தங்கியுள்ளது.

இவரது இவ் ஆய்விற்கு பிராங்கேயின் தரவுகள் உதவிற்று.

**இலவோசியர் (1743 - 1794)**

- இவர் பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்தவர்
- நவீன இரசாயனவியலின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.
- ஒட்சிசன் வாயுவைக் கண்டு பிடித்தவர். அத்துடன் வளிமண்டலத்தில் உள்ள ஒட்சிசன் எரிதலுக்கு காரணம் எனவும் விளக்கியவர் இவரது இக்கண்டுபிடிப்பின் மூலம் புளோஜிஸ்டோன் கொள்கை வலுவிழந்தது.
- ஒரு பொருளை எரிக்கும்போது உண்டாகும் சாம்பல் புகை வாயுக்கள் என்பவற்றின் மொத்தக் கூட்டுத்தொகை (நிறையானது) அக்குறிப்பிட்ட பொருளின் மொத்த நிறைக்கு சமமாகும் என்பதை செம்மையான நிறுவனகளின் மூலம் காட்டியவர். இதன் மூலம் சடப்பொருட்களை அழிக்க முடியாது எனவும் இதன் அமைப்பு வடிவத்தில் மட்டுமே மாற்றங்களை ஏற்படுத்த முடியும் எனவும் கூறினார். இது திணிவு காப்பு கொள்கை எனப்படும்.
- நீரானது ஒட்சிசன் வாயுவினால் ஐதரசன் வாயுவினால் ஆனது எனக் காட்டியவர்.
- இரசாயன பதார்த்தங்களை அட்டவணைப் படுத்தியவர்.
- வைரமும் நிலக்கரியும் ஒரே இரசாயன அமைப்பு உடையது என்பதை பரிசோதனை வாயிலாக நிரூபித்தார்.
- இவர் உடலியல், உயிர் இரசாயனவியல் ஆகிய துறைகளில் ஆய்வுகளை நடத்தியவர்.

**மேரி கியூரி (1867 -1934)**

- இவர் போலந்து தேசத்தைச் சேர்ந்த ஒரு பெண் இரசாயன அறிஞர்

மிக அருமையாகக் காணப்படும் பெருவிலை மதிப்புடைய றேடியம் எனும் உலோகத்தைக் கண்டு பிடித்தார். இன்று இவ் உலோகம் புற்றுநோய் சிகிச்சை முறைகளில் பயன்படுத்தப்படுகின்றது. மில்லின் முறைகளில் ஒன்றான எச்சமுறையைப் பயன்படுத்தி றேடியத்தைக் கண்டு பிடித்தார். அதாவது யுரேனியத்தின் கதிரியக்க ஆய்வில் ஈடுபட்டிருந்த போது அதன் தாதுக்களில் ஒன்றான 'பிச்பிளேண்ட்' அதிக கதிரியக்கம் கொண்டிருப்பது தெரிந்து இது யுரேனியத்தின் கதிரியக்கத்தைவிட பன்மடங்கு அதிகமாக இருந்து எனவே பிச்பிளேண்ட் தாதுவில் வேறு கதிரியக்கப் பொருள் இருக்கலாம் அனுமானித்தார். இதனை ஆராய்ந்த போது ஒரு தொன் பிச்பிளேண்டில் இருந்து 1.5 கிராம் அளவுள்ள ஒரு புதிய கதிரியக்கப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. அப்பொருளின் கதிரியக்கம் யுரேனியத்தின் கதிரியக்கத்தை விட 20 இலட்சம் மடங்கு அதிகமாக இருந்தது அதுவே ரேடியம் ஆகும்.

- இரசாயன துறையில் மேற்கொண்ட ஆய்விற்காக நோபல் பரிசினைப் பெற்றவர்.
- 1903 இல் றோயல் கழகத்தினர் டேவி தங்கப்பதக்கத்தை கியூரிக்கு வழங்கினார்.

**சிக்மண்ட் புறொயிட் (1856- 1939)**

- இவர் ஆஸ்திரியா தேசத்தைச் சேர்ந்த உள மருத்துவமும் பிரபல்யமான ஓர் உளவியல் அறிஞருமாவார்.
- மனித மனமானது எவ்வாறு செயற்படுகின்றது என்பது பற்றிப் புரட்சிகரமான கருத்துக்களை வெளியிட்டவர். இதன் மூலம் உளவியற் சிந்தனையில் ஓர் உண்மையான மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். இதனால் இவர் மன இயக்க ஆராய்ச்சியின் தந்தை எனப் போற்றப்படுகின்றார்.
- உள மருத்துவத் துறையில் இவர் மேற்கொண்ட ஆய்வுகள் கோடிக்கணக்கான மனநோயாளர்களுக்கு உதவியது. உளமருத்துவத் துறையில் உளப் பகுப்பாய்வு எனும் ஆய்வுமுறையினைப் புகுத்தியவர்.
- அநேகமான மனித நடத்தைகளை தீர்மானிப்பதில் உணர்விலி மனப்பாங்கு முக்கியபங்கினை வகிக்கின்றது எனும் கொள்கையை விளக்கியவர்.
- இவரது உளவியற் கொள்கைகள் குழந்தை வளர்ப்பு, கல்வி, சமூகவியல் போன்றவற்றில் புதிய மாற்றங்களைப் புகுத்துவதற்கு உதவியாகின்றது. இவர் கனவுகள், காதல், உறவுகள், உள்ளுணர்வுகள், பால் உணர்வுகள் போன்ற பல விடயங்களை ஆராய்ந்து அவை பற்றிய பல நூல்களை எழுதினார்.
- குழந்தைப் பருவ பாலியல் உந்துதல்கள் நசுக்கப்படுவது உளப்பிறழ்வுக்கு இட்டுச் செல்வதாகக் கூறினார்.
- ஆளுமை செய்யப்பட்ட இட், ஈகோ, சுப்பர் ஈகோ என மூன்றாகப் பிரித்து பிளக்கியவர். அதாவது ஆளுமைக் கொள்கையில் ஆளுமை என்பது ஒருவருடைய ஒழுங்கான நடத்தயின் முழுமையான அமைப்பாகும். மனிதனது ஆளுமையில்,

- இட் (ID) என்பது உயிரியல் தேவை சார்ந்த அதாவது நியாயத்துக்கு கட்டுப்பட்டதாகவும் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்யும் படி நாப்பந்திக்கும் தன்மையுடையதாக இட் உள்ளது.
- சுப்பர் ஈகோ (Syper Ego) (அதிகம்) நாம் வழமையாக கூறும் மனச்சாட்சி ஆகும். எது சரி எது பிழை என விளங்கிக் கொள்ளும் நிலையாகும். ஒருவரது சிறந்த இலட்சியங்கள், அறநெறிகள் ஒழுங்குகள் என இதில் தங்கியுள்ளது.
- ஈகோ (Ego) (அகம்) இது இப்பகுதியையும் அதிக பகுதியையும் சமநிலையில் வைத்துக் கொள்ளும். இட் அதிகம் என்பவற்றின் முரண்பாடான தேவைகளை அகம் எவ்வாறு நடுநிலைப்படுத்துகின்றதோ அதற்கேற்ப ஆளுமையும் விரக்தியிலின்றது.

**ஆக்கிமிடிஸ் (கி.மு.287 - 212)**

- இவர் கிரேக்க தேசத்தைச் சேர்ந்த ஓர் பௌதீக விஞ்ஞானியும் கணித அறிஞருமாவார்.
- பரிசோதனை முறையில் கொண்ட ஈடுபாடு காரணமாக வரலாற்றாசிரியர் சிலர் இவர் விஞ்ஞான பரிசோதனை முறையின் தந்தை எனவும் போற்றப்படுகிறார்.
- நெம்புகோல் தொகுதி கப்பித்தொகுதி போன்ற பொறித் தொகுதி பற்றிய விதிகளை கண்டு பிடித்தார். இக்கண்டு பிடிப்புக்கள், மிகவும் பாரமான பொருட்களை இலகுவாக நகர்த்திச் செல்வதற்கு உதவியாகிறது.
- நீர் நிலையியல் பற்றிய அடிப்படைத் தத்துவங்களைக் கண்டு பிடித்தவர். நீர் நிலையியல் என்பது பௌதிகவியலில் அடங்கும் ஓர் பிரிவாகும். இவற்றில் ஒன்றான ஆக்கிமிடிசின் தத்துவம் பொருட்களின் மிதப்பு பற்றியதாகும். ஒரு பொருள் நீரினுள் மூழ்கி இருக்கும்போது அதன் நிறை குறை வடைகின்றது. இக்குறைவு அதனால் இடப்பெயர்ச்சி செய்யப்பட்ட நீரின் நிறைக்கும் சமன் என்பதே இத்தத்துவமாகும்.
- ஆக்கிமிடிஸ் கணித ரீதியான விளக்கங்களை கண்டுபிடித்து விளக்கியவர். π (பை) இன்பெறுமானத்தை மிகச் சரியான முறையில் நிர்ணயித்தார்.
- நுண்கணித முறையினை முதன் முதலாக கையாண்டவர். இவர் கேத்திர கணிதம் சம்பநதமாக அநேக ஆராய்ச்சியை மேற்கொண்டு பல உண்மைகளை எழுதியவர். இவர் எழுதிய நூல்கள் பலவாகும். அவற்றுள் சில வருமாறு,

| | |
|---|---|
| கோளையும் உருளையும் | வட்டத்தின் அளவீடுகள் |
| தளங்களின் சமத்தன்மை | எண்களைப் பற்றி |
| கூர்ப்புகளும் கோளங்களும் | உருக்களை பற்றி |

**மைக்கல் பரடே (1791 -1867)**

- ஆங்கிலேய நாட்டைச் சேர்ந்த பௌதீகவியல் அறிஞரும் இரசாயன வியல் அறிஞரும் ஆவார்.
- டேவி என்ற விஞ்ஞானியின் பணியாளராக இருந்து பரடே டேவி செய்த ஆய்வுகளை அவதானித்து தனது விஞ்ஞான அறிவை வளர்த்துக் கொண்டே பரடே றோயல் சங்கத்தின் அங்கத்தவரானது மின்சாரம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இதன் மூலம் பொட்டாசியம் என்பதை முதல் முதலில் கண்டுபிடித்தவர்.
- இயந்திரத்தைக் கொண்டு மின்சாரத்தைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டுபிடித்தார். மின்சார சக்தியை இரசாயனப் பொருட்களில் கரைத்து நீரினுள் செலுத்தும்போது உண்டாகும் மாற்றங்கள் பற்றி ஆய்வு செய்து அதன் மூலம் தங்கமுலாம் பூசும் முறைகளை கண்டு பிடித்தார்.
- காந்த சக்தியைக் கொண்டு மின் சக்தியை உண்டாக்கும். பரடேயின் முறையைப் பயன்படுத்தியே "டைனமோ" எனும் மின் உற்பத்திக் கருவி செய்யப்பட்டது.
- இவர் பகுப்பு விதிகளைக் கண்டுபிடித்தவர்.
- அணுவிலுள்ள இலத்திரனைப் பற்றிய கருத்துக்களின் விளக்கங்களிலும் மின் அணுக்கள் பற்றிய படிப்பிலும் பரடேயின் பரிசோதனைகள் அடிப்படையாய் அமைந்தன.
- பரடேயும்மெக்ஸ் வெல்லும் மின்சாரத்தின் அசைவையும் சக்திகளின் விஷேட தன்மையையும் ஆய்வு முறைகளையும் வெளியிட்டார். இயந்திர சக்தியிலிருந்து அசைவுடைய எல்லாச் சக்திகளையும் போலவே பொருள் ஒன்றுக்கொன்று உருவாக்க முடியும் என இவ்வாய்வுகள் மூலம் தெளிவுபடுத்திய அதேவேளையில் இடம் சக்தி என்பவற்றுக்கிடையேயான தொடர்புகளையும் ஐன்ஸ்ரைன் அணுவாதத்திற்குள் புகத்துவதற்கு முன் புற்றி விபரத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஜீன் பியாஜே (1896 -1930)**


- இவர் சுவிஸ்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓர் உளவியல் அறிஞர் ஆவார்.
- அறிக்கை உளவியலை வளப்படுத்தியவர் புலன் காட்சி வழியாக பெற்ற தகவல்களுக்கு எண்ணக்கரு வடிவம் கொடுக்கும் செயறபாடுகளுடன் சம்பந்தப்பட்டதே அறிக்கையாகும். எனவே அறிக்கை என்பது அறிவுசார் உளத் தொழிற்பாடு எனக் கூறலாம்.

- குழந்தை உளவியல் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டவர்.
- ஒரு பருவத்திலுள்ள உளவளர்ச்சியானது அதற்கு முந்திய பருவத்திலுள்ள உளவளர்ச்சியிலிருந்து தொடர்கின்றது.
- குழந்தை பிறந்தது முதல் கட்டிளம் பருவம் வரை உளவளர்ச்சியானது ஒழுங்கான முறையில் மாற்றம் அடைகின்றது.
- குழந்தையின் செயல்களும் திறன்களும் சூழலின் கிடைக்கக்கூடிய வசதி வாய்ப்புக்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.
- முயற்சித்தல் தவறுதல் எனும் தொடர்பினைப் படிகளினூடாக குழந்தை கற்றலை ஆரம்பிக்கின்றது.
- நுண்மதியின் தோற்றம், விருத்தி, அறிவாராய்ச்சியல் போன்ற துறைகளிலும் இவரது ஆய்வுகள் விரிந்து சென்றன.


## விதிகளும் கோட்பாடுகளும்,

**கேள்வி நிரம்பல் விதிகள் (The aw of supply and demand)**

இவை பொருளியலோடு தொடர்புடைய இரு விதிகளாகும். ஏனைய காரணிகள் மாறாத நிலையில் ஒரு பொருளின் விலை குறைவடைவதால் அதன் கேள்வித்தொகை அதிகரிக்கும். மாறாக அப்பொருளின் விலை குறைவடைந்தால் அதன் கேள்வித்தொகை அதிகரிக்கும். மாறாக அப்பொருளின விலை அதிகரித்தால் அதன் கேள்வித்தொகை குறைவடையும். விலைக்கும் கேள்வித் தொகைக்குமிடையிலான இத்தொடர்பே கேள்வி விதி எனப்படும். அதாவது விலைக்கும் கேள்வித்தொகைக்குமிடையில் எதிர்க்கணியத் தொடர்பு காணப்படும்.




ஏனைய காரணிகள் மாறாத நிலையில் ஒரு பொருளின் விலை குறைவடைந்தால் அதன் நிரம்பல் தொகையும் குறைவடையும். மாறாக அப்பொருளின் விலை அதிகரித்தால் அதன் நிரம்பல் தொகையும் குறைவடையும். மாறாக அப்பொருளின் விலை அதிகரித்தால் அதன் நிரம்பல் தொகையும் விலைக்கும் நிரம்பல் தொகைக்குமிடையிலான இத்தொடர்பே நிரம்பல் விதி எனப்படும். அதாவது விலைக்கும் நிரம்பல் தொகைக்குமிடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படும்.




பொருளின் சக்திகளான கேள்வி நிரம்பல் ஆகிய இரண்டும் ஒரு பொருளின் விலையைத் தீர்மானிக்கின்றன. சந்தையில் வெவ்வேறுபட்ட விலைகளில் வெவ்வேறளவான பொருட்கள் வாங்குவதற்கும் விற்பதற்கும் விரும்பப்படுகின்றது. ஆனால் ஓர் குறித்த விலையில் வாங்குவோரால் கொள்வனவு செய்யப்படும் பொருட்களின் அளவு விற்போரால் வழங்கப்படும் பொருட்களின் அளவிற்குச் சமனாக அமையும். இக்குறித்த விலை மட்டமே சமநிலைவிலை எனப்படம். நுகர்வோரின் சுவைப் பழக்கவழக்கங்கள், வருமானம், ஏனைய பொருட்களின் விலை உற்பத்திச் செலவுகள் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்கள் சமநிலை விலையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**புறொய்டின் கொள்கையில் உணர்வுளியும் உணர்விலியும்**
**(The consoious and the unconscious in freudian theory)**
**அல்லது உளப்படுபாய்வு (Phychonalysis) அல்லது புறொய்டிபாக் கோப்பாட்டில் நனவும் மறை நனவும்**

உளவியலில் "உளப்பகுப்பாய்வு" எனும் ஆய்வுமுறையினைத் தோற்றுவித்தவர் உளவியல் அறிஞரும் உள மருத்துவருமான சிக்மன்ட் என்பவரே மன நடத்தைகளை அறிந்து கொள்வதில் உணர்விலி மனம் முக்கிய பங்கினை வகிக்கின்றது என்பதனை இவ்வாய்வு அடிப்படை யாகக் கொண்டு உளப்பகுவாய்வானது உணர்விலி மனத்தில் அமிழ்ந்து மறைந்து கிடக்கும் மனக்கிளர்ச்சியையும் கடந்தகால உண்மைகள். அனுபவங்கள் போன்றவற்றையும் உணர்வுளி மனத்திற்கு (Conxcious) கொண்டு வந்து வெளிப்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்ட ஓர் உளச் சிகிச்சை முறையாகும்.

(தொடரும்...)

— புரூலியா ஆயுத வீச்சு எதிரொலி —

# டென்மார்க் தூதரக உறவை குறைத்துக்கொள்ள முடிவு

(புதுடில்லி)

மேற்கு வங்கத்தில் புரூலியா பகுதியில் கடந்த 1995 ஆம் ஆண்டு தீவிரவாதிகளுக்கு வானிலிருந்து ஆயுதங்களை வீசிய வழக்கில் முக்கிய குற்றவாளியான கிம் டேவியை டென்மார்க் நாட்டிலிருந்து இந்தியா கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அவரை இந்தியாவிடம் ஒப்படைக்க டென்மார்க் நீதிமன்றமும், அரசும் மறுத்து வருகின்றன.

இதையடுத்து டென்மார்க்குடனான தூதரக உறவுகளை படிப்படியாகக் குறைத்துக் கொள்ள இந்தியா முடிவு செய்துள்ளது.

கடந்த 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேற்குவங்க மாநிலம் புரூலியா மாவட்டத்தில் விமானம் மூலமாக மர்மமான முறையில் ஆயுதங்கள் வீசப்பட்டன. இதில் ஏ.கே.-47 துப்பாக்கிகள், கையெறிகுண்டுகளும் அடங்கும்.

இது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தி டென்மார்க் நாட்டைச் சேர்ந்த கிம் டேவி மீது வழக்குப் பதிவு செய்து. அவர் தற்போது டென்மார்க்கில் உள்ளதால் அவரை நாடு கடத்தி இந்தியா கொண்டு வர சி.பி.ஐ அதிகாரிகள், இன்டர்போல் மூலம் நடவடிக்கை எடுத்தனர்.

இதை எதிர்த்து கிம் டேவி டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் உள்ள உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இதை விசாரித்த நீதிமன்றம், இந்திய சிறைச்சாலைகளின் தரம், மனித உரிமை மீறல்களை காரணம் காட்டி கிம் டேவியை இந்தியாவிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டது.


இதையடுத்து டென்மார்க் உச்ச நீதிமன்றத்தில் இந்த வழக்கை அப்பீல் செய்து டேவியை இந்தியாவிடம் ஒப்படைக்க உதவ வேண்டும் என்று இந்தியா கோரிக்கை விடுத்தது. ஆனால், அந்தக் கோரிக்கையை டென்மார்க் அரசு ஏற்க மறுத்து வருகிறது.



இதையடுத்து டென்மார்க்குடனான தூதரக உறவுகளை படிப்படியாகக் குறைத்துக் கொள்ள இந்தியா முடிவு செய்துள்ளது. இந்த விஷயத்தில் இந்தியாவின் அதிருப்தியை தூதர் மூலம் டென்மார்க் அரசிடம் மத்திய அரசு தெரிவித்துவிட்டது. மேலும் டென்மார்க்கில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ஊழியர்கள் எண்ணிக்கையையும் பணிகளையும் பணிகளைக் குறைத்துக் கொள்ளுமாறும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

மேலும் இந்தியாவில் உள்ள டென்மார்க் தூதரக அதிகாரிகளை இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் சந்திக்கக் கூடாது என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

# ராகுல்காந்தியை மருமகனாக்க உண்ணாவிரதமிருக்கும் பெண்!



காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல் காந்தியை தனது மகளுக்கு மணம் செய்து வைக்க, ஓம் சாந்தி ஷர்மா என்ற பெண் டில்லி ஜந்தர் மந்தரில் அமர்ந்து கடவுளிடம் பிரார்த்தனை செய்து வருகிறார். ராகுல் தனது கோரிக்கையை ஏற்றுக் கொண்டால் அவருக்கு ரூபா 15 கோடி வரதட்சணை தரவும் தயாராக உள்ளாராம்.

சாதாரணமாக மஞ்சள் வண்ணத்தில் புடவை கட்டியுள்ள சாந்தி சர்மா; இதுதொடர்பாக கடவுளிடம் பிரார்த்தனை செய்தபடி ஜூலை 9 ஆம் திகதியிலிருந்து காலவரையற்ற உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டுள்ளார். மேலும் எவரிடமும் பேசாமல் மௌன விரதமும் மேற்கொண்டுள்ளார். பின் எப்படி அவரின் கோரிக்கைகள் வெளியே தெரிந்தன என்றால் தான் அமர்ந்திருக்கும் இடத்தில் தனது கோரிக்கைகளை அட்டைகளில் எழுதி வைத்துள்ளார். அந்த அட்டைகளில் தனது மகளுக்கு ராகுல்காந்தி மணமகனாக வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது.

மேலும் தான் ராஜஸ்தானைச் சேர்ந்தவர் என்றும் ராகுல் தனக்கு மாப்பிள்ளையானால் தனது மற்றும் குடும்பத்தினரின் சொத்துக்களை அளிக்கத் தயாராக இருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து சந்தோஷ் முராத் என்பவர் கூறுகையில், சாந்தி சர்மா மௌன விரதம் இருப்பதால் யாருடனும் அவர் பேசுவதில்லை. நாள் முழுவதும் அமர்ந்து பிரார்த்தனை செய்தபடி இருக்கிறார் என்றார்.

# விண்வெளி ஆராய்ச்சித்துறையில் தன்னிறைவு பெற்றுள்ளது இந்தியா

## விஞ்ஞானி சிவதாணுபிள்ளை பெருமிதம்



(கோவை)

இந்தியா விண்வெளி ஆராய்ச்சித்துறையில் தன்னிறைவு பெற்றுவருகிறது. பி.எஸ்.எல்.வி, வி.எஸ்.எல்.வி. போன்ற செயற்கை கோள்களை ஏவியதன் காரணமாக இந்த துறையில் நாம் முழுமை அடைந்துள்ளோம்.

இந்தியாவில் இஸ்ரோ ஆராய்ச்சி மைய தகவல் மையங்கள் 173 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் பல்வேறு தகவல்கள் அளிக்கப்படுவதாக இந்திய பிரமோஸ் ஏவுகணை விஞ்ஞானியும்,இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மைய கட்டுப்பாட்டு அதிகாரியுமான ஏ.சிவதாணு பிள்ளை தெரிவித்தார் இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது

கன்னியாகுமரியில் உள்ள மீனவர்களுக்கு, செயற்கைகோள் மூலம் அளிக்கப்படும் தகவல் மூலம் கடலில் எந்த இடத்தில் அதிக மீன்கள் கிடைக்கும் என்ற தகவலின் அடிப்படையில் மீன் பிடித்து வருகிறார்கள்.

மேலும் அந்த மீன்களை எந்த இடத்தில் விற்றால் அதிக இலாபம் கிடைக்கும் 'என்ற தகவல்களும் அளிக்கப்படுகின்றன.

விண்வெளி ஆராய்ச்சியில் அடுத்தகட்டமான நடவடிக்கையில் இந்தியா ஈடுபட்டு வருகிறது. வருங்காலத்தில் விண்வெளி சுற்றுலா முக்கியமானவையாக விளங்கும். விண்வெளி சுற்றுலாவுக்கு 1 மில்லியன் டொலர் நிர்ணயித்து விண்ணில் இருந்து பூமியைப் பார்க்க சர்வதேச அளவில் வசதிகளை செய்து வருகிறார்கள்.இதற்கான செலவுத் தொகையைக் குறைக்க வேண்டும்.

அதிவேகமான முறையான ஹைபர் சொனிக் முறை இதற்கு உதவும். ரொக்கெட் என்ஜினில், விண்ணில் பறக்கும்போதே, காற்றை குளிர்வித்து. திரவ ஒக்ஸிஜன் முறையில் என்ஜின் இயங்கும் ஆராய்ச்சி முறையை இந்தியா கண்டுபிடித்துள்ளது.

இந்த ஆராய்ச்சி திட்டத்தின் மூலம் ஹைபர் பிளேன்கள் தயாரிக்கப்பட்டு எந்த ஒரு விமான நிலையத்தில் இருந்தும் விண்ணில் பறக்கும் சுற்றுலாத் திட்டம் எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்று நம்புகிறோம். என சிவதாணுபிள்ளை கூறினார்.

# "சைபர்" படைப்பிரிவினை உருவாக்கும் கடற்படை!

(புதுடில்லி)

சைபர் படைப் பிரிவு ஒன்றை இந்திய கடற்படை நிர்மாணிக்கவுள்ளது. அதாவது தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர்கள், பட்டதாரிகளை தனது படைப் பிரிவில் இணைத்து புதிய சைபர் பிரிவை உருவாக்குகிறது இந்திய கடற்படை.

இந்தப் புதிய பிரிவில் இடம் பெறும் அதிகாரிகள், இந்திய கடற்படையின் டேட்டாக்களைப் பாதுகாக்கும் பணியில் முக்கியக் கவனம் செலுத்துவர். மேலும் இந்திய கடற்படை தளத்தை ஹேக் செய்யும் முயற்சிகளை தடுப்பதிலும் கவனமுடன் இருப்பார்கள்.

அண்மையில் சீன மற்றும் பாகிஸ்தானிய ஹேக்கர்கள், இந்திய கடற்படையின் முக்கிய டேட்டாக்களை ஹேக் செய்ய முயற்சிப்பதாக வந்த தகவலைத் தொடர்ந்து இந்த புதிய சைபர் பிரிவை உருவாக்குவதில் தீவிரம் காட்டவுள்ளது கடற்படை.

இதுகுறித்து மூத்த கடற்படை அதிகாரி ஒருவர் கூறுகையில், தற்போது எல்லாமே இணையத்தள அடிப்படையிலானதாக மாறி வருகிறது. முக்கிய டேட்டாக்கள், தகவல்களுக்கு ஹேக்கர்கள் ரூபத்தில் பெரும் சவால்கள் உள் ளன. மேலும் கடற்படையின் போர்க் கப்பல்கள் உள்ளிட்டவற்றை ஒருங்கிணைத்து அதைக் கட்டுப்படுத்துவது, நிர்மாணிப்பதும் சவாலுக்குரியதாக மாறியுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டே தற்போது புதிய சைபர் பிரிவை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். இந்தப் பிரிவானது கப்பல்கள் ஒருங்கிணைப்பு மட்டுமல்லாமல், சைபர் கிரிமினல்களிடமிருந்து எமது கடற்படை கட்டமைப்பைக் காக்கும் பணியிலும் ஈடுபடுவார்கள்.

இந்தப் புதிய பிரிவில் பிடெக், எம்டெக், பிஎஸ்சி, எம்எஸ்சி, பிசிஏ, எம்சிஏ படித்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவர்களுக்கு கேரளாவில் உள்ள எழிமலா, இந்திய கடற்படை அக்கடமியில் பயிற்சி அளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# இந்தியாவில் விளையும் "சுவர்ணா" உலகளவில் சத்தான அரிசி

உலகளவில் இந்தியாவில் விளைவிக்கப்படும் சுவர்ணா ரக அரிசியே மிகவும் சத்தானதென பிலிப்பைன்ஸ் நாட்டு ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் சர்வதேச அரிசி ஆராய்ச்சி மையம் இயங்கி வருகின்றது.


இந்நிலையில் நீரிழிவு நோய்க்கு காரணமான கிளைசீமிக் இண்டெக்சை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்திய அரிசி வகையான சுவர்ணா, அவுஸ்ரேலிய அரிசி வகையான டூங்கரா மற்றும் பாஸ்மதி, பிலிப்பைன்ஸ் அரிசி வகையான மெலிசா பிட்ஜ்ஜெரால்டு உள்ளிட்ட அரிசி வகைகள் இந்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதில், இந்திய அரிசியான சுவர்ணா வகையிலேயே குறைந்த அளவு கிளைசீமிக் இண்டெக்ஸ் உள்ளதென கண்டறியப்பட்டது.

இதன்மூலம் உலகளவில் சாப்பிடுவதற்கு சத்தான அரிசியாக இந்திய அரிசி சுவர்ணாவை அந்த ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

# மகாத்மா காந்தி தேசபிதாவா? இல்லை என்கிறது உள்துறை அமைச்சு




மகாத்மா காந்திக்கு, தேசபிதா என்ற பட்டத்தை, மத்திய அரசு ஒரு போதும் வழங்கவில்லை என, உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

மகாத்மா காந்தி தேசபிதாவாக அறிவிக்கப்பட்டது தொடர்பான விபரங்களை தரும்படி, தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ், சமூக ஆர்வலர் அபிஷேத் கத்யான் என்பவர், உள்துறை அமைச்சகத்திடம், மனுத் தாக்கல் செய்திருந்தார்.இந்த மனுவுக்கு, மத்திய பொது தகவல் அதிகாரி, கடந்த மாதம் அளித்த பதிலில், "மகாத்மா காந்தியை தேசபிதாவாக பொதுமக்கள் அழைத்தாலும், அதுபோன்ற ஒரு பட்டத்தை, மத்திய அரசு ஒரு போதும் வழங்கவில்லை" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன், லக்னோவைச் சேர்ந்த நான்காம் வகுப்பு மாணவி ஐஸ்வர்யா பராஷர், "மகாத்மா காந்தி, தேச்பிதாவாக அறிவிக்கப்பட்டது தொடர்பான உத்தரவின் நகலைத் தர வேண்டும்" எனக் கோரியிருந்தார். இதற்கு பதில் அளித்த அமைச்சகம், அது போன்ற குறிப்பிடத்தக்க ஆவணம் எதுவும், தங்களிடம் இல்லை என பதில் அளித்தது என்பதுவும் குறிப்பிடத்தக்கது

– நைஜீரியாவில் தொடரும் துயரம் –

# பெற்றோல் தாங்கி லொறி வெடித்து 96 பேர் தீயில் கருகி மாண்டனர்




நைஜீரியாவில் விபத்துக்குள்ளான தாங்கிலொறியிலிருந்த எரிபொருள் தீப்பிடித்ததில், 95 பேர் கருகி பலியாகினர் 18 பேர் படுகாயமடைந்து கவலைக்கிடமாக உள்ளனர்.

நைஜீரியாவின் ஒக்காஜ்பி என்ற இடத்தில் பெற்றோல் ஏற்றிச் சென்ற லொறி, நிலை தடுமாறி எதிரே வரும் வாகனங்கள் மீது மோதுவதை தவிர்க்க, சாலை ஓரம் சென்று மோதி விபத்துக்குள்ளானது. இதனால், பெற்றோல் தாங்கிலொறி உடைந்து எரிபொருள் வீதிகளில் பரவியது இதைக் கண்ட மக்கள், தங்கள் கைக்கு கிடைத்த பொருட்களைக் கொண்டு பெற்றோலை பிடித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென அங்கு தீப்பிடித்ததில், 93 பேர் சம்பவ இடத்திலேயே கருகி பலியாகினர் இரண்டு பேர் மருத்துவமனையில் இறந்தனர் 18 பேர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து குறித்து, நைஜீரிய பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

உலகச் செய்திகள்

## ஈராக்கிற்கான சிரிய தூதுவர் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு



ஈராக்கிற்கான சிரிய தூதுவர், ஜனாதிபதி பஷார் அல் அஷ்ஷார்ட்டின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளார்.

அரசாங்கத்திலிருந்து விலகியுள்ள முதலாவது இராஜதந்திரியாக ஈராக்கிற்கான சிரிய தூதுவர் நவாப் பரிஸ் விளங்குகின்றார்.

சிரிய அரசாங்கத்தின் ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்களும் இது போன்று செயற்படுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு ஈராக்கிற்கான தூதுவராக அவர் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் ஜனாதிபதி பஷார் அல் அஷ்ஷார்ட்டுக்கு நெருக்கமான இராணுவத் தளபதி ஒருவர் துருக்கிக்கு தப்பிச் சென்றிருந்தார்.

மக்கள் போராட்டம் வலுப்பெற்றுவரும் நிலையில் சிரிய ஜனாதிபதிக்கு ஆதரவான முக்கியஸ்தர்கள் நாட்டிலிருந்து தப்பிச் சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிரியாவுக்கு எதிராக கடுமையான தடைகள் விதிக்கப்பட வேண்டும் என மேற்குலக நாடுகள் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றன

## நேட்டோ படைகளை வெற்றி கொள்ள முடியாது

– தலிபான் தளபதி தெரிவிப்பு

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படைகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற முடியாது என்று தலிபான் தீவிரவாத அமைப்பு தலைவர் ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார். நேட்டோ படையினர் மீது தலிபான் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தலிபான் உயர்நிலை அதிகாரி ஒருவர், இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் நியூ ஸ்டேட்ஸ்மேன் இதழுக்கு பேட்டி அளித்துள்ளார். அவருடைய பெயர் வெளியிடப்படவில்லை. ஆனால், ஆப்கான் செய்திகளை சேகரித்து வரும் ஆசிரியர் மைக்கேல். செம்பல் பேட்டி எடுத்துள்ளார். அதில் தலிபான் அதிகாரி தெரிவிக்கையில்:

ஆப்கானில் நேட்டோ படைகளுக்கும் தலிபானகளுக்கும் இடையே நடந்து வரும் போரில், தலிபான்கள் வெற்றி பெறுவது கடினம். தலிபான்கள் வெற்றி பெற கடவுள் அருள் இருக்க வேண்டும். கடந்த 96ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை தலிபான்களின் கட்டுப்பாட்டில் ஆப்கான இருந்தது. அமெரிக்கப் படைகள் வந்த பின் நிலைமை மாறிவிட்டது. அல் கொய்தா அமைப்பின் நடவடிக்கையும் சரியில்லை.



தலிபான்களில் 70 சதவீதம்பேர்அல் கொய்தா மீது கடும் கோபத்தில் உள்ளனர். உண்மையைச்சொல்ல வேண்டுமானால், ஒசாமா கொல்லப்பட்ட பிறகு தலிபான்களுக்கு ஆறுதலாக இருந்தது. ஒசாமாவின் கொள்கைகள் ஆப்கானை சீரழித்துவிட்டன. உண்மையில் புனிதப்போரை (ஜிகாத்) ஒசாமா விரும்பி இருந்தால், ஆப்கானில் இருந்ததை விட அவர் சவுதி அரேபியாவுக்கு சென்றிருக்க வேண்டும். அங்கிருந்து ஜிகாத் நடத்தி இருக்க வேண்டும். ஒசாமாவால் ஆப்கான் சிதைந்துவிட்டது என்றார்.

## தென்கொரிய ஜனாதிபதியின் சகோதரர் கைது

தென்கொரிய ஜனாதிபதி லீ மியுங் பக்கின் சகோதரர் அந்த நாட்டு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஊழல் மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் லீ மியுங் பக்கின் மூத்த சகோதரரான லீ சாங் டியூக் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அந்தநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு சேமிப்பு வங்கிகளின் தலைவர் ஒருவரிடம் இருந்து வங்கிகளின் கணக்காய்வுகளை தவிர்ப்பதற்காக இவர் சுமார் ஐந்து இலட்சத்து இருபத்தையாயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாக பெற்றதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவரைக் கைதுசெய்வதற்கு சியோலில் உள்ள மத்திய மாவட்ட நீதிமன்றம் பிடியாணை வழங்கியுள்ளது.

76 வயதான டியூக் ஆறு முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மரிய சேவியர் அடிகளார் குருத்துவப் பொன் விழா



கலைத்தாயின் தலைப்பிள்ளைக்கு பொன்விழா என்றதும் தாய் மண் ஒருமுறை முகம் மலர இளவாலை என்ற ஊர் தோள்தட்டி நிற்கின்றது. இத்தனைக்கும் சொந்தக்காரனான அந்த வெள்ளை உடை ஏதோ. ஒன்றையும் சாதிக்க வில்லையே என்ற அமைதியு டன் முறுவலி முறுவலித்துக் கொண்டிருக்கும் அந்த புன்முறுவலின் பின்னால் இருக்கும் சாதனைகளை வார்த்தைக்குள் அடக்கிட முடியாது. வேறு யாருமல்ல அவர் மரிய சேவியர் அடிகளார் தான். தனது குருத்துவத் தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் அவரை ஆன்மீக ரீதியாக வாழ்த்துவதுடன் அவரது பணியின் சிறுதுளியையேனும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது இந்தச் சந்தர்ப்பத்தில் சாலச்சிறந்ததாக அமையும் என்று நினைக்கின்றேன்.

தனது ஏழாவது வயதில் மேடையேறிய அவர் இன்றும் தமிழர்களின் கலையை பல் வேறு வடிவங்களில் வளர்த்துக் கொண்டே இருக்கின்றார். வெள்ளை உடைக்குள் இந்தக் கலையார்வம் வரவில்லை. கலைக்கு வெள்ளையுடை உடுத்தப்பட்டுள்ளது என்றே என்னால் பார்க்க முடிகிறது யாழ்.திருமறைக் கலாமன்றம் என்றா் தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அதேபோல் அருட்தந்தை சேவியர் என்றதும் யாராலும் மறந்துவிடக் கூடிய பெயரு மில்லை. அந்த அளவுக்கு ஒரு மன்றத்தை மட்டுமல்லாது அதனூடு பல ஆயிரம் கலைஞர்களை உருவாக்கி இந்த உலகெல்லாம் பரந்து வாழச் செய்தவர் என்றால் அவரை கலைத்தாயின் மூத்த மகனாக குறிப்பிடுவதில் தவறில்லை.

சிறுவயதில் இருந்தே நல்ல ஒரு நடிகனாக எழுத் தாளனாக, தலைமைத்துவ பண்புள்ள மாணவனாக அனைத்து திறமைகளையும் தன்னகத்தே கொண்ட இவர் 1962 ஆம் ஆண்டில் பரிசுத்த தந்தையின் சிறப்பு அனுமதியுடன் குறைந்த வயதிலேயே குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இறை பணிக்காக தன்னை அர்ப்பணித்த அவர் கலைப்பணி யூடாகவே இறை பணியையும் செய்ய முயன்றார். இதன் முதல் படியாக மன்னார் மண்ணில் 1964 இல் கலைஞர்களை திரட்டி திருப்பாடுகளின் காட்சியை அரங் கேற்றியதை குறிப்பிடலாம்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு பிரதேசங் களிலும் இறை பணியாற்றிய இவர் இறை அழைபபின் படியே தன்னை முழுமையாக கலைப்பணியுடன் இணைததுக் கொண்டார். 1966 ஆம் ஆண்டு உரும்பிராய் மண்ணில் திருமறைக் கலாமன்றத்தை அங்கு ரார்ப்பணம் செய்ததில் இருந்து இன்று வரை சோர்வின்றி உழைத்துக் கொண்டிருப்பதன் வெளிப்பாடாகவே தற்போதைய யாழ். திருமறைக்கலா மன்றத்தைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேல் நாட்டவர்களுக்கும் எமது கலையின் மகத்து வத்தை தெரியப்படுத்த வேண்டும் என்ற நோககுடன் 'வடலிக் கூத்தர்' என்ற பெயரில் ஐரோப்பாவுக்கான இவ ரது கலைப் பயணத்தை கோடிட் டுக் காட்டலாம்.

றோய் (ஜேர்மனி)

இதேபோல் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு மொழி ஒரு தடையாக இருக்காது என் பதனையும், கலைஞர்கள் வார்த்தை இன்றியே மக்களுடன் பேச முடியும் என்பதனையும் இவரது தென் னிலங்கைக்கான 'கலைப்பாலம்' பாலமிட்டுக் காட்டியது மிகைப் படுத்தப் படாத உண்மையாகும்.

எளிமையான தன் புன்முறுவலுடன் மேடைகளில் கலைஞனாக, கலைஞர்களுடன் நண்பனாக மக்களுடன் மதிப்புக் குரியவராக உயர்ந்து நிற்கும் இவரது வழிநடத்தலில் இயங்கும் திருமறைக் கலாமன்றம் சாதி, மதம் போன்ற பல்வேறு முட்டுக்கட்டைகளையும் உடைத் தெறிந்து சமூக சிந்தனையுடன் மக்களுக்குள் ஊடுருவி வாழ்கின்றது.

காலத்தால் அடித்துச் செல்லப்பட்ட பல கலைஞர்களையும், மன்றங்களையும் கண்கூடே கண்ட பின்னரும் எதிர்நீச்சல் போட்டு பல தசாப்த காலமாக தனது மக்களுக்காககவும், தனது கலைக்காககவும் இயங்கும் இவ ரது செயல், திறன், இவருக்கு மட்டுமே உரிய ஒன்றாகும்.

பல கலைஞர்களை உரு வாக்குவதிலும், கலைப்படைப் புக்களை உருவாக்கி நெறியாள்கை செய்து எதிர்காலச் சந்ததிக்கு கொடுப்பதிலுமே தனது முழுக் கவனத்தையும் செலுத்தும் இவர் ஒரு வாழ்க்கைப் பாடப் புத்தகம், சுயநலம் மிக்க கலைஞர்கள் மத்தியில் பிறர் நலனே கருத்தாகக் கொண்டு எரிந்து கொண்டிருக்கும் அணையாத தீபம், வார்த்தைகளில் மிகைப படுத்தப்படாமல் சொல்வ தென்றால் பலனை எதிர்பாராமல் ஒளிகொடுத்துக் கொண்டிருக்கும் சூரியன் தற்புகழ்ச்சியற்ற சிரித்த முகமே இதற்கு சான் றாக இருக்கின்றது.

பொன்விழாக் காணும் எங்கள அருட் தந்தை தடைகள் பல தாண்டி மேலும் தனது பணியை தொடர்வார் என்ற நம்பிக்கை இருக்கின்றது. அந்த நம்பிக்கையுடனேயே வளர்ந்துவரும், வளரத் துடிக்கும் பல கலைஞர்கள் காத் துக் கொண்டிருக்கின்றார்கள்.

உலகெல்லாம் பரந்து வாழும கலைத்தாயின் உறவோடு உறவாக உம்மை உள்ளத்தால் உறவாக உம்மை உள்ளத்தால் வாழ்த்துகின்றோம். தொடரட்டும் உமது பணி.

# தனியார் காணிகளில் இருந்து பொலிஸ் நிலையங்கள் அகற்றப்படும்

## தேவையான நடவடிக்கை தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தனியார் காணிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களை அரச காணி களுக்கு மாற்றுவதற்கான நடவ டிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

மானிப்பாய், சுன்னாகம், மற் றும் இளவாலை ஆகிய பகுதி களில் தனியாருக்குச் சொந்த மான காணிகளிலேயே பொலிஸ் சேவை இடம்பெற்று வருகின்றது அதிலும் இளவாலைப் பகுதியில் 12 தனியாருக்குச் சொந்தமான வீடுகளை உள்ளடக்கிய வகை யில் பொலிஸ் நிலையம் செயற் பட்டு வருகின்றது.

காணி உரிமையாளர்களினால் தொடர்ச்சியாக தங்களின் இடங் களை தங்களிடம் ஒப்படைக்கு மாறு கோரிக்கைகள் விடுத்து வரும் நிலையில் அரச காணி களில் பொலிஸ் நிலையங்களை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தப் பொலிஸ் நிலையங் கள் அமைப்பதற்கான அரச காணி தொடர்பாக பிரதேச செயலர் களினால் முன்மொழியப்பட்ட அரச காணி தொடர்பாக கடந்த 10 ஆம் திகதி யாழ். மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேராவுடன் சென்று பார்வை யிட்டதாகவும் இது தொடர்பான அறிக்கை பொலிஸ் தலைமை யகத்திற்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாகவும் அது தொடர்பான முடிவு வந்தவுடன் பொலிஸ் நிலையங்கள் அரச காணிகளு க்கு மாற்றப்படும் என்று தெரி வித்தார்.

## சிறுபோக...

அதில் எமது மாவட்டம் எதிர் கொள்ளும் மிக முக்கியமான பிரச் சினையாக இரணைமடுக் குளத்தின் கீழான நெற்செய்கையில் பல ஏக்கர்கள் வரட்சியால் அழிவடையும் நிலை உருவாகியுள்ளது. எனவே இதற்கான காரணங்களைக் கண்டறிவதுடன் தொடர்ந்து வரும் அழிவை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இரணைமடுக் குளத்தின் கீழான நெற்செய்கையை பொறுத்தவரை சிறுபோக பயிர்ச் செய்கை தொடர்பாக நடத்தப்பட்ட இறுதிக் கலந்துரையாடலின் மூலம் எட்டப்பட்ட தீர்மானங்களையும் விதிமுறைகளையும் மீறி விவசாயிகள் சட்டத்திற்கு முரணாக செயற்பட் டதன் காரணமாகவே பயிரழிவுகள் ஏற்பட்டன என்பதை வெளிப் படையாக உணரமுடிகின்றது.

அதாவது குளத்தின் நீர்க் கொள்ளளவிற்கமைவாக எட்டாயிரம் ஏக்கர் நிலப்பரப் பிலேயே நெற்செய்கை பண்ண முடியுமென தீர்மா னிக்கப்பட்டு விவசாயிகளுக்கு அறிவுத்தல்களும் விடுக்கப்பட்டன ஆனால் 9 ஆயிரத்து 700இற்கும் அதிகமான ஏக்கரில் நெற் செய்கை பண்ணப்பட்டுள்ளது. இது போன்ற பல காரணங்களாலேயே இன்று நெற்செய்கையில் அழிவுகள் ஏற்பட்டுள்ளன என தெரிவித்த நாடா ளுமன்ற உறுப்பினர், இருப்பினும் விவசாயிகள் பாதிப்புக்களை எதிர் கொள்வதைத் தடுக்கும் முகமாகவும் இனிவரும் காலங்களில் இவ் வாறான அழிவுகள் ஏற்படுவதை தடுக்கும் முகமாகவும் இன்று தீர்மானங்கள் எட்டப்படும் எனத் தெரிவித்தார்.

தொடர்து நடைபெற்ற கலந்துரையாடலில் பயிரழிவு ஏற்பட்டமைக் கான மேலும் பல காரணிகளும் இனங்காணப்பட்டன. அவையாவன, எதிர் பார்க்கப்பட்ட காலங்களில் மழை பெய்யாமை, நாடு முழவதும் ஏற்பட்ட வறட்சி, மேலதிக அடாத்தான பயிர்ச் செய்கை உரிய நேரத் தில் பயிர்களுக்கு நீர்பாய்ச்சாமை, பயிர்ச்செய்கையை கலண்டர் உரிய முறையில் பின்பற்றப்படாமை என்பனவாகும். அத்தோடு நீர் விநியோகத்தினை சீராக நடைமுறைப்படுத்த முடியாதமைக்கு மேலும் பல காரணிகளும் இனங்காணப்பட்டன. அதாவது வாய்காலுக்கு ஒதுக்கப்பட்ட காணிகள் அடாத்தாக பிடிக்கப்பட்டு விதைப்பிற்கு உட்படுத்தப்பட்டமையால் வாய்க்கால் கட்டுகள் இலகுவாக வெட்டப் பட்டு முறையற்ற விதத்தில் நீர் பெறபட்டமை இரவு வேளைகளில் அடாத்தாக வாய்க்கால்களை மறித்து நீரைப் பெறுகின்றமை சட்ட விரோத மாக குழாய்களை வைத்து நீரை பெறுகின்றமை வாய்கால் கட்டுமானங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை. நீர்பாசன திணைக்களத்தில் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த ஊழியர் பற்றாக்குறை நிலவுகின் றமை போன்ற காரணிகளும் இனங்காணப்பட்டன.

இதேவேளை ஏற்பட்டுள்ள வறட்சியை தடுப்பதற்கும் அடுத்து வரும் காலங்களில் இவ்வாறான நிலை ஏற்படுவதை தடுப்பதற்குமாக பல தீர் மானங்களும் எட்டப்பட்டன அதாவது,

இதேவேளை அழிவுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அரசாங்கத் திடமிருந்து இழப்பீடுகளை பெறுவதற்குஏற்ப விவசாயிகள் காப்புறுதி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமெனவும் அதற்கு விவசாயத் திணைக் களத்தினால் விடுக்கப்படும் நடைமுறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் விவசாயிக ளுக்கு அறிவுரை வழங்கினார். நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கமநல சேவை உதவி ஆணையாளர் தயாரூபன், கிளிநொச்சிமாவட்ட நீர்ப்பாசணத்திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சுதாகரன், பிரதமநீர்ப்பாசனப் பொறியியலாளர் விகிர் தன், கரைச்சி பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரும் மற்றும் இரணை மடுக்குளத்தின் கீழ் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் திட்டக் குழுக்களின் பிரதிநிதிகளும், கமக்கார அமைப்பின் பிரதிநிதி களும் மற்றும் விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

## வறட்சியின்....

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக் கப்படும் கணிப்பீட்டின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இனங்கா ணப்பட்டு பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தில் இருந்து தெரிவு செய்யப் படும் ஒருவருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 1278 நீர்த்தேக்கங்களும் குளங்களும் தோண்டப்படும். இதற்கென 3577 மில்லியன் ரூபா செலவிடப்பட வுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றினால் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

குடிநீர் வழங்கல் திட்டம்: - 12 மாவட்டங்களிலுள்ள 52 ஆயிரத்து 340 குடும்பங்களுக்கு 30 மில்லியன் ரூபா செலவில் குடிநீர் வழங்கல்

விவசாயக் கிணறுகளைப் புனரமைத்தல்:-

தேர்ந்தெடுக்கப்பட்ட 4000 விவசாயக் கிணறுகளை ஆழத் தோண்டி புனரமைத்தல்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகள் வங்கிகள் மூலம் பெற்றுக் கொண்ட விவசாயக் கடன்களை மீளச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# பிணக்குகளுக்கு மாற்றுத்தீர்வு கிராம அலுவலர்களுக்கு பயிற்சி



(யாழ்ப்பாணம்)

நீதியை சமமாக அணுகும் செயற்திட்டத்தின் கீழ் அரசாங்க சேவைப் பயிற்சி நிறுவனமும், யு.என்.டி.பியின் மாற்றுத்தீர்வு காணுவதற்கான நிறுவனமும் இணைந்து நடத்திய யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற கிராம அலுவலர்களுக்கான பயிற்சி நிறைவும், சான்றிதழ்கள் வழங்கலும் நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

கடந்த புதன்கிழமை ஆரம் பமாகி மூன்று நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் கிராம அலுவலர்களுக்கு சட்டம், நிர்வாகம், மற்றும் பொது மக்களுடனான உறவைப்பேணு தல் போன்றன தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர்களில் மூன்றா வது அணியினருக்கு இப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரச சேவை பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் றஞ்சித் அசோக்கா மற்றும் பிணக்குகளுக்கு மாற்றுத் தீர்வுகாணும் நிறுவனப் பணிப்பாளர் ஆன் பனான்டோ ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரைகளை நடத்தியிருந்தனர்.

நேற்றைய இறுதிநாள் கருத்தரங்கில் யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு பயிற்சியை நிறைவு செய்த வர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தார். (02)

# ஒரு வாரத்தில் மூவர் மரணம் வீதி விபத்துக்களால் விபரீதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வார காலத்தில் வீதி விபத்துக்களில் சிக்கி படு காயமடைந்த மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமாகியதாக யாழ்.போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை ஏழாலை உத்தமன் சிலையடியில் கன்ரர் வாகனம் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டி ருந்த இளம் பெண் மீது மோதிய விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த புன்னா லைக்கட்டுவன் வடக்கைச் சேர் ந்த கிருஷ்ணன் சாந்தி (வயது-30) கடந்த புதன்கிழமை சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இதேவேளை, கடந்த புதன் கிழமை யாழ்.பருத்தித்துறை வீதி யில் புத்தூர் சோமஸ்கந்தா வித் தியாலப் பகுதியில் துவிச்சக் கர வண்டியில் பயணித்தக் கொண்டி ருந்த வயோதிபர் மீது பருத்தித் துறையில் இருந்து யாழ்.நோக் கிப் பயணித்த இ.போ.ச. பஸ் வண்டி மோதி விபத்தில் படு காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த பொ.சின்னத்துரை (வயது-75) சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார்.

இதேவேளை, கடந்த புதன் கிழமை அதிகாலை 5.30 மணி யளவில் சாவகச்சேரி நகர் நோக்கி கச்சாய் வீதியூடாக துவிச்சக்கர வண்டியில் தனது பேரனுடன் பயணித்த சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவன் மீது கன்ரர் ரக வாகனம் பின்புறமாக மோதி யதில் படுகாமயடைந்து யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் நினைவிழந்த நிலையில் சிகிச் சைக்கு உட்படுத்தப்பட்டு வந்த அ.யூட் ரவீந்திரா (வயது-13) சிகி ச்சை பயனின்றி நேற்று இறந் துள்ளார். இந்தச் சம்பவத்தில் இறந்த சிறுவனின் பேரனும் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## பனை ஆராய்ச்சி....

தாக பனை அபிவித்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் குறிப்பிட்டார்.

பனை ஆராய்ச்சி நிலையத்தின் கட்டட நிர்மாண வேலை கள் தற்போது நிறைவடைந்துள்ள அதேவேளை, ஆராட்சி உத்தியோகத் தர்கள் உதவியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு தற்போது பயிற்சி கள் வழங்கப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதியில் நான்கு வாகனங்கள் ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்கப் பட்டுள்ளன.

இதற்கென இந்திய அரசு 68.7 மில்லியன் ரூபாவும், இலங்கை அரசாங்கத்தினால் 47 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் மேலும் தெரிவித்தார்.

## வன்னி...

கொண்டனர் கிளிநொச்சிக்கு வருகைதந்த அவர்களை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் கார்த்திகேயன் ஆகியோர் வரவேற்றனர்.

இதன்போது, கனடா, மலேசியா, இத்தாலி, ரஸ்சியா, சிங்கப்பூர், பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் இராஜதந்திர பிரதிநிதிகள் என எண்பதிற்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## ஆஸி.நோக்கி...

உள்ளார். கைது செய்யப்பட்டவர்களில் ஐந்து பெண்களும், ஐந்து சிறுவர்களும் அடங்குவர். இவர்கள் திருகோணமலை துறைமுகத் திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கடற்படைப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# வீடு தீக்கிரை தவிக்கிறார் மூதாட்டி

கிளிநொச்சி ஆனைவிழுந் தான் பிரதேசத்தில் மூதாட்டி யொருவரின் வீடு திடீரெனத் தீப்பற்றி எரிந்ததால் வீட்டினுள் இருந்த பொருள்கள் யாவும் எரிந்து சாம்பலாகியுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை 10.00 மணியளவில் மேற்படி சம் பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குறித்த வீட் டில் மூதாட்டியொருவரும், பெற் றோரை இழந்திருந்த பேரனும் வசித்து வந்துள்ளனர். இவர்கள் இருவரும் அயலில் உள்ள ஒரு வீட்டில் வழமை போன்று நித்தி ரைக்குச் சென்றுள்ளனர்.


அப்போது இரவு 10.00 மணி யளவில் அவர்களது வீடு திடீ ரென தீப்பற்றி எரிந்தது. இத னைக் கண்ணுற்ற அயலவர்களும் அந்தப் பகுதியில் நின்ற இராணு வத்தினர் சிலரும் ஓடிச் சென்று தீயை அணைக்க முயற்சி செய் துள்ளனர். எனினும், தீயை அணைக் கும் முயற்சி பயனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தீர்வு முயற்சி...

தலைவர் தெரிவித்துள்ளார்.

எனினும், தமது கோரிக்கைக ளுக்கு ஸ்திரமான தீர்வு கிடைக் கப்பெறுகின்ற பட்சத்திலேயே பணிப்பகிஷ்கரிப்பை கைவிடு வது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலைமையில் எதிர்வரும் வாரத்திலும் ஜனாதிபதி செயலா ளர் தலைமையிலான விசேட குழுவுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவது என்று இணக்கம் காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தப்படுகிறது



ஆட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தும் திட்டம் நேற்று யாழ். மாவட்டத்தில் யாழ். கச்சேரி வீதியில் உள்ள வின்வின் லங்கா பிறைவேற் லிமிட்டட் நிறுவனத்தின் கிளைக் காரியாலயத்தில் வைத்து சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் முன்னதாக கச்சேரி நல்லூர் வீதியில் யாழ். செயலகத்திற்கு சமீபமாக வின்வின் லங்கா பிறைவேற் லிமிட்டட் நிறுவனத்தின் கிளைக் காரியாலயமொன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பொலிஸ் பிரிவின் ஏ.எஸ்.பி. கேரத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வின்வின் லங்கா பிறைவேற் லிமிட்டட் நிறுவனத்தின் கிளைக் காரியாலயத்தைத் திறந்து வைத்ததுடன் சம்பிரதாய பூர்வமாக ஆட்டோ ஒன்றிற்கு காசு மீற்றரையும் பொருத்திவைத்தார். இந்நிகழ்வில் யாழ். மாவட்ட ஆட்டோச் சங்கத் தலைவர் போல் ஜெயகாந்தன், வின்வின் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர், ஆட்டோ சங்கத்தினர், ஆட்டோ உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஆட்டோ மீற்றர் ஒன்றின் விலை 12 ஆயிரத்து 750 ரூபா எனவும் முதலில் 2 ஆயிரத்து 500 ரூபாவினைச் செலுத்தி மீற்றரைப் பெற்றுப் பொருத்தியதன் பின்னர் லீசிங் அடிப்படையில் பத்து மாதங்களில் இந்தத் தொகையைச் செலுத்திக்கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது. ஆட்டோச் சங்கத்தின் தலைவர், பொருளாளர் ஆகிய இருவரும் முதலில் இந்த மீற்றரைப் பொருத்தும் திட்டத்தில் தமது ஆட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தும் உடன்படிக்கையில் கைச் சாத்திட்டனர். தற்சமயம் யாழ். மாவட்ட ஆட்டோ ஓட்டுநர் சங் கத்தின் பதிவில் சுமார் 800 இற்கும் மேற்பட்ட ஆட்டோக்கள் உளளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் பயணாளிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் தவிர்க்கப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த மீற்றர் மூலமான கட்டணம் அறவிடுவது குறித்து சம்பந்தப்பட்ட தரபபினருடன் பேசி முடிவுசெய்யப் படவுள்ளதாகவும் தெரியவருகிறது. ஆட்டோ புறப்பட்டு ஒரு கிலோ மீற்றர் தூரம் வரைக்கும் 70 ரூபாவும் தொடர்ந்து செல்லும் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் 50 ரூபா அறவிடப்பட ஆட்டோ சங்கத்தினர் கோரிக்கையை முன் வைத்துள்ளதாகத் தெரியவருகின்றது. (பா)

## பண்டாரவளையில் ஆலங்கட்டி மழை



பண்டாரவளையில் மடுல் சீமை பிரதேசத்தில் நேற்று மாலை ஆலங்கட்டி மழை பெய்தது. அப்பகுதியில் இடி மின்னலுடனான மழையைத் தொடர்ந்து ஆலங்கட்டி மழை பெய்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

## உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 77 ஆயிரம் பேர்

ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு இரண்டு இலட்சத்து 77ஆயிரத்து 97 பேர் விண்ணப்பித்திருப்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குமாரசிறி தெரிவித்தார். பழைய பாடதிட்டத்தின் கீழ் 41323 பேரும் புதிய பாடதிட்டத்தின் கீழ் பாடசாலை மட்டத்தில் 220535 பேரும இவ்வாறு விண்ணப்பித்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். இதேவேளை தனிப்பட்ட ரீதியில் 15239 பேரும இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## தற்கொலை அதிகரிப்பு; அலரி மரங்கள் அழிப்பு

அம்பாந்தோட்டை சூரிய வெவ பிரதேச செயலகப் பிரிவில் அலரி மரங்களை அழிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரதேச மக்கள் தற்கொலை செய்து கொள்வதற்காக அலரி விதைகளை உட்கொள்கின்றமையே இந்த நடவடிக்கையை எடுப்பதற்கான காரணம் என அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் என்.கே.ஆர்.பதிரண தெரிவித்துள்ளார்.

சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவின் வீரியகம பகுதியில் அலரி மரங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இந்த மரம் சூழலுக்கு எழிலூட்டுகின்ற போதிலும் தற்கொலைக்காக அலரி விதைகளை உட்கொள்ளும் நிலை காணப்படுகிறது. இதன் காரணமாகவே சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவில் அலரி மரங்களை அழிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## புலிகள் எனச் சந்தேகம் மூதூரில் இருவர் கைது

முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் ஆண்கள் இருவர் மூதூர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யுத்தக் காட்சியைக் கொண்ட 6 நிமிட வீடியோவை உள்ளடக்கிய மெமரி கார்ட்டொன்று கைப் பற்றப்பட்டுள்ளது.

இச்சந்தேக நபர்கள், குறித்த வீடியோவை பார்த்துக் கொண்டிருந்தபோது மெமரி கார்ட் கைபபற்றப்பட்டது. இச்சந்தேக நபர்கள் 50 ஆயிரம் ரூபா பணத்தையும் வைத்திருந்தனர். இவர்கள் மூதூர், பதனபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மூதூர் பொலிஸாரின் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

## கோமாவில் உள்ளவர் பாசையூரைச் சேர்ந்தவர்

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் நடத்திய போராட்டத்தின் பின்னர் அனுராதரபுரத்திற்கும் தென்னிலங்கையின் வேறு சிறைகளுக்கும் மாற்றப்பட்டனர். அவர்கள் அங்கு அடித்து தாக்கப்பட்டு, மஹர சிறைச்சாலை வைத்தியசாலையிலும் ராகம அரசினர் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப் பட்டிருந்தனர். இவர்களில் ராகம வைத்தியசாலையில் கோமா நிலையில் சிகிச்சை பெற்றுவருகின்ற டில்ருக்ஷன் என்ற அரசியல் கைதி பாஷையூரைச் சேர்ந்தவர் என குடும்பத்தினர் உரிமை கோரியிருக்கின்றனர்.



மக்கள் வங்கியின் 51 ஆவது நிறைவு விழா மக்கள் வங்கி சாவகச்சேரி கிளையில் நடைபெற்றபோது தென்மராட்சிப் பிரதேச செயலர திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் வனிதாவாசனா வெற்றியாளரைச் சீட்டுமூலம் தெரிவு செய்வதனையும், ஜெயஶ்ரீ வெற்றியாளருக்கான பரிசிலை சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சிவநாதன் சிவத்திரை வழங்கிக் கௌரவிப்பதையும் காணலாம். (11)

## பொலிஸார் அதிரடி சுற்றிவளைப்பு; டிமிக்கி கொடுத்த 10648 பேர் கைது

கடந்த 21 நாட்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் மூலமாக குற்றவாளிகளாக இனங்காணப் பட்டு பிடிவிறாந்து பிறப்பிக்கப் பட்ட 10 ஆயிரத்து 648 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் நேற்றைய தினம் வரை இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். கண்டிப் பிரதேச பொலிஸார் மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போது 966 பேரும் அநுராதபுர பொலிஸாரது சுற்றிவளைப்பின் போது 762 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை கல்கிசை பொலிஸாரது தேடுதலில் 497 பேரும் அம்பாறைப் பொலிஸாரின் தேடுதலில் 457 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலும் பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

## 23 ஆவது ஆண்டு நினைவு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமாகிய அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் வெற்றிவேல் யோகேஸ்வரன் ஆகியோரின் 23 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் அலுவலகத்தில் நிர்வாகச் செயலாளர் சங்கையா தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. 1989 ஆம் ஆண்டு இதே நாளில் அமிர்தலிங்கம் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டதன் 23 ஆவது ஆண்டு நினைவு நினைவுகூரப்பட்டது. இந்நிகழ்வில் முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், இ.பி.ஆர்.எல் அணியைச் சேர்ந்த சிறிதரன், முன்னாள் யாழ் மாநகர சபை முதல்வர் எஸ்.கந்தையா உட்பட பலர் கலந்துகொண்டு அஞ்சலி உரையாற்றினர்.

## 24 மணிநேரம் மின்சாரம் நயினாதீவில் இடை நிறுத்தம்

(நயினாதீவு)

நயினாதீவிற்கு 500 கிலோ வாட் வலுக்கொண்ட மின்பிறப்பாக்கி இலங்கை மின்சார சபையினால் எடுத்துவரப்பட்டு நயினை ஶ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் கொடியேற்றத் திருவிழா அன்று 24 மணிநேர மின்சார வழங்கல் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. கடந்த 4 ஆம் திகதி வரையும் நயினாதீவுப் பிரதேசத்திற்குக் குறிப்பிட்டபடி 24 மணித்தியாலங்கள் மின்சாரம் இருந்தது. 5 ஆம் திகதியில் இருந்து மின்சாரம் முறையே காலை 9.00 மணி தொடக்கம் 2.00 மணிவரையும், இரவு 6.00 மணி தொடக்கம் 12 மணிவரையும், அதிகாலை 4.30 மணி தொடக்கம் 6.30 மணிவரையும் முன்னைய காலங்களில் நடைமுறையில் இருந்தமாதிரி தற் பொழுது வழங்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் 24 மணித்தியாலங்கள் மின்சாரம் வழங்கப்படும் நிலையில் நயினாதீவுக்கு மாத்திரம் ஏன் இந்த பாரபட்ச நிலை. இன்னும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது பிரதேசத்திற்கும் தொடர்ந்தும் 24 மணித்தியாலயம் மின்சாரம் கிடைக்க உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச சபை உறுப்பினர்கள் சி.ஈ.கருணாகரமூர்த்தி (மோகன்) மூலமாக ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் ஊடாக அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (175)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.